பக்கங்கள்: இருபது

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 20 ஞாயிற்றுக்கிழமை (03.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 158

## ★ பாதுகாப்பு வலயத்தில் முள்ளிவாய்க்காலில் தற்காலிகமாக இயங்கிய ★

# ஆஸ்பத்திரி மீது ஷெல் தாக்குதல்கள்!

# 65 பேர் கொலை; 87 பேர் படுகாயம்!!

## தாம் நடத்தவில்லை என்கிறது இராணுவத் தரப்பு

கொழும்பு, மே 03

அரசாங்கம் பிரகடனப்படுத்திய மக்கள் பாதுகாப்பு வலயத்தில், முள்ளிவாய்காலில் தற்காலிகமாக இயங்கிய ஆஸ்பத்திரி மீது நேற்றுச் சனிக்கிழமை காலை இரண்டு தடவைகள் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் நோயாளர்கள் உட்பட 65 பேர் கொலை செய்யப்பட்டனர். 87 பேர் படுகாயமுற்றனர்.

இறந்தவர்களில் நோயாளர்களின் உறவினர்களும், துணைக்கு நின்றவர்களும் அடங்குவர்.

முல்லைத்தீவு ஆஸ்பத்திரி கடந்த ஒரு சில வாரங்களாக முள்ளிவாய்க்காலில் உள்ள பாடசாலை ஒன்றில் தற்காலிகமாக இயங்கி வந்தது. அந்தப் பாடசாலை கட்டடமும் பலத்த சேதமடைந்து சின்னாபின்னமாகியது.





இந்தத் தாக்குதல்களை தாம் நடத்தவில்லை என்றும் விடுதலைப்புலிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்தியே இந்தக் கொலைகளைச் செய்துள்ளனர் என்றும் இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தாங்கள் ஷெல் தாக்குதல் எதனையும் நடத்தவில்லை என்றும் அதேவேளை தற்காலிக ஆஸ்பத்திரி அமைந்திருந்த பகுதியில் குண்டு வெடிப்புச் சத்தங்களை தாம் கேட்டதாகப் படைவீரர்கள் கூறிய போதிலும் அவர்கள் ஷெல் தாக்குதல் எதனையும் நடத்தவில்லை என்றும் அவர் கூறினார்.

கனரக ஆயுதங்களை பயன்படுத்துவதில்லை என அரசாங்கம் அறிவித்த பின்னர் தாம் அத் தகைய ஆயுதங்களை பயன்படுத்தவில்லை என்றும் அந்த அதிகாரி சொன்னார்.

ஆஸ்பத்திரி மீதான ஷெல் தாக்குதல்களை இராணுவம் நடத்தவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் போகொல்லாகமவும் மறுத்தார். அத்தகைய செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என்று அவர் அழுத்திக் கூறினார்.

ஷெல் தாக்குதலினால் பாடசாலைக் கட்டடம் பெரிதும் சேதமடைந்து சின்னாபின்னமாகியதாகத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை வெள்ளிக்கிழமை முள்ளிவாய்க்கால் ஆஸ்பத்திரி மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் 27 பேர் பலியாகி இருந்தனர் என்று (20 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுத் தாக்குதல் குறித்த ஐ.நாவின் செய்மதிப் படங்கள் உறுதியான ஆதாரம் கிடைக்கும்வரை செல்லுபடியற்றவை

### பாதுகாப்பு அமைச்சு நிராகரித்தது!

கொழும்பு, மே 03

முல்லைத்தீவு பாதுகாப்பு வலயம் மீதான குண்டுவீச்சுக்கள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் செய்மதிப் படங்கள் தொடர்பான உறுதியான ஆதாரங்கள் தரையில் கிடைக்கும்வரை அவை விஞ்ஞான ரீதியாக செல்லுபடியாகத் தக்கவையல்ல.

பாதுகாப்பு அமைச்சு மேற்கண்டவாறு தெரிவித்து அவற்றை நிராகரித்துள்ளது.

செய்மதிப் படங்களை நிராகரித்த பாதுகாப்பு அமைச்சு -

இணையத்தளத்திலும் வெளியிடப்பட்ட இப்படங்கள் வெளிநாட்டு தொலைக் காட்சிகள் பலவற்றிலும் ஒளிபரப்பப்பட்டன.

ஷெல் தாக்குதல்களினால் ஏற்பட்ட குழிகளை அப்படங்கள் வெளிப்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தரையில இது தொடர்பில் உறுதியான ஆதாரங்கள் (20 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் வாழ்வுக்கென வழங்கப்படும் நிதி அவர்களை அழிக்கவே பயன்படுத்தப்படும்

### ஜப்பானின் விசேட தூதுவரிடம் கூட்டமைப்பு ஆட்சேபம்

கொழும்பு, மே 03

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் தங்கியுள்ள மக்களின் நிவாரணப் பணிக்காக ஜப்பான் வழங்கவுள்ள 480 மில்லியன் ரூபா அவர்களின் மறுவாழ்வுக்குப் பயன்படுத்தப்படமாட்டாது. அந்த நிதி யுத்தத்துக்கே செலவிடப்படும்.

நிவாரணத்துக்கென நிதிவழங்கி தமிழின அழிப்புக்கு ஜப்பான் துணைபோகக் கூடாது.

ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாஷியிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கண்டவாறு கேட்டுள்ளது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் தப்பிச் செல்லமுடியாதவாறு கடற்பிரதேச பாதுகாப்பு இறுக்கப்பட்டுள்ளது

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் திஸநாயக்க சொல்கிறார்

கொழும்பு, மே 03

முல்லைத்தீவில் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதியில் அகப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் அவரது சகாக்களும் கடல் வழியாகத் தப்பிச் செல்ல முடியாதவாறு வடக்கு- கிழக்குக் கடற்பகுதியில் பலத்த (20 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனிலிருந்து அனைத்துக் கட்சி எம்.பிக்கள் ஐவர் இடம் பெயர்ந்தோர் பிரச்சினைகளை ஆராய நாளை வருகின்றனர்

கொழும்பு, மே3

இலங்கையில் இடம் பெயர்ந்த மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் அனைத்துக் கட்சிப்பிரதிநிதிகள் ஐவர் அடங்கிய குழு நாளை திங்கட் கிழமை கொழும்பு வருகின்றது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் காணாமற்போன 3 மாணவர்களில் 8 வயது மாணவியின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு!

மட்டக்களப்பு, மே 03

கடந்த மாதம் 28ஆம் திகதி காணாமற்போன கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய மாணவி சதீஸ்குமார் தனுஷியா (வயது 8) வின் சடலம் பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளது.

அவர் கல்விகற்கும் பாடசாலையில் இருந்து (20 ஆம் பக்கம் பார்க்க)



இப்போது டயலொக் CDMA யாழ்ப்பாணத்திலும்

டயலொக் CDMA முற்கொடுப்பனவு இணைப்பு

ரூ 5999/- மட்டுமே

● இலவச IDD இணைப்பு ● செக்கன் அடிப்படையிலான கட்டணங்கள்

● ஆரம்பக் கட்டணம் எதுவுமில்லை ● Kit Ez reload ஊடான ரீலோட் வசதி

வாடிக்கையாளர் சேவை இலக்கம் 011 7 100 100

Dialog CDMA homefone இல்லத்தின் அதிர்ஷ்டம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியர்

## கந்தையா ஸ்கந்தராசா

(இயந்திர இயக்குநர்)

இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மத்திய மின் நிலையம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.

பொறியியலாளர்,
மின் அத்தியட்சகர்கள்,
சக ஊழியர்கள்.

# கண்ணீர் அஞ்சலி



எமது சங்க அங்கத்தவர்

## கந்தையா ஸ்கந்தராசா

(இயந்திர இயக்குநர்)

அவர்களின் மறைவுக்கு எமது அஞ்சலியையும் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இலங்கை மின்சார சபை,
வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கம்.

# கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்



சுன்னாகம் மத்திய மின் நிலையத்தில் இயந்திர இயக்குநராகக் கடமையாற்றிய

## கந்தையா ஸ்கந்தராசா

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இயந்திர இயக்குநர்கள்,
மத்திய மின் நிலையம்,
இ.மி.ச. சுன்னாகம்.

# மரண அறிவித்தல்

## இராமலிங்கம் அன்னபூரணம்

இளவாலையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் அன்னபூரணம் 30.04.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், இராசமணி,புவனேஸ்வரி, சிவஞானசுந்தரம், சிறீஸ்கந்தராசா, சிறீரங்கநாதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தங்கவேலு, வேலுப்பிள்ளை, ராதா, மல்லிகா, குமாரி ஆகியோரின் மாமியும் கௌரி - காந்தன், ரஞ்சினி- ரவி, முகுந்தன்-விஜிதா, விஜிதா-தீபன், லதா-சங்கர், ஆகியோரின் பேர்த்தியும் ராம்சாந், ரமணசாந், சாளினி, அனோர்த், அனோஜினி, மதுரா, ஆதவன், சுவன்ஞா, சங்கர், மிதுசா, நிவேதன், அபிதா, அஜிந், சுரேகா, கிசோர், அடல் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.05.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணியளவில் கொடிகாமம் வீதி, புலோலி தெற்கு,மந்திகை முகவரியில் உள்ள இல்லத்தில் இடம் பெற்றுப் பூதவுடல் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொடிகாமம் வீதி,
புலோலி தெற்கு, மந்திகை.

தகவல்:
அ.தங்கவேல்.

# புதிய தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், மே3

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் ஸ்ரீகந்தசுவாமி கோயிலில் புதிதாக அமைக்கப்பட்ட தேரின் வெள்ளோட்ட விழா நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம் பெறவுள்ளது. (1)

# நாணய நிதியத்தின் இலங்கைக்குரிய கடனை நிறுத்துவதால் பயனில்லை

நியூயோர்க், மே3

சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள கடனுதவியை நிறுத்தி வைத்து இலங்கையைத் தண்டிப்பதில் பயனில்லையென ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகள் கருதுகின்றன என சபையின் ஏப்ரல் மாதத்துக்குரிய தலைமைத்துவப் பொறுப்பில் இருந்த மெக்ஸிக்கோ தூதுவர் கிளோடே ஹெல்லொ தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச்சபையின் எந்த உறுப்பினரும் இலங்கையைத் தண்டிக்க வேண்டுமெனத் தெரிவிக்கவில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''கடனுதவியை இடைநிறுத்துவதன் மூலம் இலங்கையைத் தண்டிப்பது அனாவசியமானது என்பதை அனைத்து உறுப்பு நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளனவா?'' என்ற கேள்விக்கு, நிச்சயமாக ஏற்றுக் கொண்டுள் ளன என ஹெல்லொ தெரிவித்தார்.

இலங்கையைத் தண்டிப்பது நிகழ்ச்சி நிரலில் இடம்பெறவில்லை என ஐ.நாவிற்கான பிரிட்டிஷ் தூதுவர் ஜோன் சவெர்ஸ் தெரிவித்துள்ளார்.

''நாங்கள் இலங்கையைத் தண்டிக்கும் வேலையை மேற்கொள்ளவில்லை. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசுக்கு உதவ விரும்புகிறோம்'' என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் கணித ஆசிரியை திருமதி ரஜனி சிறீதரனின் அன்புத் தந்தை

## க.கனகசபாபதியின்

மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(யாழ்.மானிப்பாய் மகளிர் கல்லூரி)

Connecting Call......

ஐரோப்பிய நாடுகள்
கனடா
அமெரிக்கா
} 3/=

இந்தியாவிற்கான அழைப்பு
5/=

திருமுருகன் கொம் நெற்

விற்பனையாகிறது

O/L பரீட்சைக்கேற்றவாறு
வினா விடை
அமைப்புகளுடன்
R.S.சந்திரனின்
வரலாறு
தரம் 10, 11

யாழ்.பிரபல புத்தகசாலைகளில்
பெற்றுக்கொள்ளலாம்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

## சுப்பிரமணியம் சக்திவேல்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 19 - 01 -1956 | 01-04-2009 |

எமது குடும்பத் தலைவரின் பிரிவுச் செய்தி கேட்டு நேரில் கலந்து கொண்டும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டும் எமது துயரத்தினைப் பகிர்ந்து கொண்ட அன்புள்ளங்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகள்.

இன்று (03.05.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல.18/09, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
மகன்(சுரேஸ்ராஜா).

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா ஸ்கந்தராசா (சிறி)



(இலங்கை மின்சாரசபை ஊழியர்)

மாவிட்டபுரம், பளையைப் பிறப்பிடமாகவும், மின்சாரசபை விடுதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஸ்கந்தராசா (30.04.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும், சுசித்திராவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கிருஷ்ணன் மற்றும் கமலேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும்,பிரியாந்தி (கிழக்குப் பல்கலைக்கழகம்), வினோதினி, சஞ்சீவன், விதூஷன் (யூனியன் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகேஸ்வரன், கிருஷ்ணவேணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுகுமார், சுபாசினி காலஞ்சென்றவர்களான சுமித்திராதேவி, லோகுகுமார் மற்றும் அன்ரன் அமலதாஸ்,பத்மினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரிலக்ஷன், கரீஸ் ஆகியோரின் பெரியதந்தையும், வைசிகா மேரி கெலன், பேள்டன் பிளேயர் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2009) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2•மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்ப டும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மின்சார சபை விடுதி,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## சிவகுருநாதர் கனகசுந்தரம் (பீற்றர் - வாரிவளவு, காரைநகர்)



காரைநகர், வேரக்குளம், கருங்காலியைப் பிறப்பிடமாகவும் வாரிவளவு, காரைநகரை வசிப்பிடமாகவும்தற்போழுது நீர்கொழும்பு, கொச்சிக்கடையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுருநாதர் கனகசுந்தரம் நேற்று (02.05.2009) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதர் (பிரபல வர்த்தகர், தங்கொட்டுவ)- சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராசா - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் சறோஜினிதேவியின் (குணம்) அன்புக் கணவரும் சற்குணராசா, சிவகலை, சிவமணி, சிவகௌரி, சிவமலர், சிவரூபி, நடேசலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் உமா, ஞானசுந்தரம், கணேசலிங்கம், லோகேஸ்வரன், சுதாகரன், ஆகியோரின் மாம னாரும் செந்தூரன், சேந்தன், சங்கவி, யோகசீலன், சிவகாந்தன், உதர்சன், அபர்ணா, கபிஷன், அபிஷன், கோபிதன், கோபிகா, ஆகியோரின் பேரனும் மகாதேவர், காலஞ்சென்ற கணேசபிள்ளை மற்றும் புஸ்பவதி, மோகனசந்திரன், காலஞ்சென்ற லோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற புவனேஸ்வரி, கணேசமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்கொழும்பு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

77/19, பள்ளஞ்சேனை,
கொச்சிக்கடை,
நீர்கொழும்பு.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

எமது நிறுவனத்தின் மற்றுமோர் சேவை

April 27 முதல் மணமக்கள் சங்கமமாகும்

"கெட்டி மேளம்" திருமண சேவை
Keddy Melam Wedding Service

(நிறுவன மயப்படுத்தப்பட்ட நம்பகரமான துரித சேவை)

உங்கள் பிள்ளைகளின் திருமணங்களை விரைவாகவும் விரும்பியபடியும் இனிதே நிறைவேற்றிக் கொள்ளவும் அந் நிகழ்வுகளை சிறந்த முறையில் படம் பிடித்திடவும் (Video & Photo)

எமது நிறுவனத்தில் அடையாள அட்டை, பாஸ்போட் புகைப் படங்களை படம் பிடித்து உடனுக்குடன் பெற்றுக்கொள்ள 80/= மட்டுமே

மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்

62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

E.Mail: moorthydigital@gmail.com

# கண்ணீர் அஞ்சலி



இலங்கை மின்சார சபை மத்திய மின் நிலையத்தின் இயந்திர இயக்குநர்

## கந்தையா ஸ்கந்தராசா

அவர்களின் மறைவிற்கு அஞ்சலி செலுத்துவதுடன் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மின் பொறியியலாளர்,
உத்தியோகத்தர்கள்,ஊழியர்கள்,
மத்திய மின் நிலையம், இ.மி.ச.சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் பள்ளிக்குப் போகும் மாணவர்கள்; முறைசாராக் கல்விப் பிரிவின் முன்மாதிரி!

**இன்னமும் எம் நாட்டில் மனிதம் உயிர்ப்போடு இருக்கவே செய்கின்றது என்பதை நிரூபிப்பதுபோல சில செயற்பாடுகள் நடைபெறவே செய்கின்றன. அவ்வகையில் பல்வேறு காரணிகளால் தமது படிப்புக்கு இடை நடுவிலேயே முழுக்குப் போட்டுவிட்ட மாணவர்களை தேடிக் கண்டுபிடித்து அவர்களை மீளவும் கல்விப் பாதைக்குத் திரும்பச் செய்கின்ற பணியினை வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். அதுவும் சேவை அடிப்படையில் இத் தொண்டை ஆற்றுகின்றனர். அது பற்றி பயனாளிகளும் செயற்பாட்டாளர்களும் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்.**

பாடசாலைப் படிப்பைப் பாதியில் உதறிவிட்டுப் பின்னர், முறைசாராக் கல்விப் பிரிவின் விழிப்புணர்வு நடவடிக்கையால் மீண்டும் பள்ளிக்குச் செல்லத் தொடங்கியிருக்கும் **செல்வச்சந்திரன் செனிஸ்ரனின்** கதையைக் கேளுங்கள்...

என்னுடைய தந்தை மீன் வியாபாரம்



செனிஸ்ரன், செந்தூரன்

செய்பவர். அவர் ஒவ்வொரு நாளும் வியாபாரத்திற்குச் செல்லும் முன்னர் என்னையும் எனது தம்பியையும் (செந்தூரன்) 'ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்ல வேண்டும்' என்று அறிவுரை கூறிவிட்டுத்தான் செல்வார். எனினும் எங்கள் இருவருக்கும் அப்போது கல்வியின் முக்கியத்துவம் தெரியவில்லை. எங்களைவிட வயது மூத்தவரோடு சேர்ந்து விளையாடுதல், புறாப்பிடித்தல், நண்பர்களின் வீடுகளில் தொலைக்காட்சி பார்த்தல் என்பவற்றில்தான் எங்களுக்கு அதிக நாட்டம் இருந்தது. இதனால் பாடசாலைக்கு நாங்கள் ஒழுங்காகச் செல்வதில்லை.

வரவு ஒழுங்கீனமாக இருந்ததால் ஆசிரியர்களும் அதிபர்களும் எம்மோடு கடுமையாகவே நடந்து கொள்வார்கள். சிலவேளைகளில் தண்டனைகளும் பெற்றதுண்டு. அதெல்லாம் எங்கள் நன்மைக்காகவே அவர்கள் செய்தாலும் ஏனோ எங்களுக்குப் பாடசாலைக்குச் செல்லாமல் விடுவதே நல்லதுபோல இருந்தது. இதனால் நாங்கள் நிரந்தரமாகவே பாடசாலைக்குச் செல்லாமல் விளையாட்டிலேயே முழுநேரமும் ஈடுபட்டோம்.



மீண்டும் பாடசாலையில் செனிஸ்ரன்

ஆனாலும் கொஞ்ச நாள்களிலேயே பாடசாலைக்குச் செல்ல வேண்டும் என்ற ஏக்கம் எங்களுக்கு ஏற்பட்டது. கல்வி கற்க வேண்டும் என்பதுடன் மட்டுமல்லாது எம்மோடு ஒன்றாகப் படித்த சக மாணவர்களைப் பிரிந்து இருப்பது மிகவும் வேதனையாக இருந்தது. இதனால் மீண்டும் பள்ளிக்குச் செல்வது பற்றி நானும் தம்பியும் அடிக்கடி கதைப்போம். ஆனாலும் கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு மேல் பாடசாலைக்கு நாங்கள் செல்லத் தவறியதால் திரும்பவும் எங்களைப் பாடசாலையில் சேர்ப்பார்களா?, நாங்கள் முன்னர் படித்த மாணவர்களோடு இணைந்து கற்க விடுவார்களா? அல்லது எங்களை விட வயது குறைந்தவர்களோடு கற்க விடுவார்களா? பாடசாலை செல்லாததற்கு கடும் தண்டனை வழங்குவார்களா? என்பன போன்ற பல கேள்விகள் எங்களுக்குள் எழுந்தன. இதனால் பாடசாலைக்குச் செல்லும் எண்ணத்தை நாங்கள் கைவிட்டோம். எனினும் எமது கிராமத்தில் நடத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றில் நாம் இடைவிலகியதை அறிந்த முறை சாராக் கல்விப்பிரிவு அலுவலர் எங்கள் வீட்டிற்கே வந்துவிட்டார்.

கல்வியின் முக்கியத்துவம் பற்றி அவர் எங்களுக்குப் பல கருத்துக்களைச் சொன்னார். அதன் பின்னர் எங்கள் இருவருக்கும் கொப்பி, பென்சில், பேனை போன்றவற்றையும் தந்தார். அதன்பின்னர் அவரே பாட சாலை அதிபரோடு வந்து கதைத்து எம்மை நாம் முன்னர் கற்ற அதே மாண வர்களோடு இணைந்து கற்கவும் வழி சமைத்தார்.

இப்போது என்னிடமும் என் தம்பியிடமும் முன்னர் போன்ற விளையாட்டுத்தனமில்லை. தொடர்ந்தும் கல்வியைக் கற்று எதிர்காலத்தில் ஒரு நல்ல ஆசிரியராக வரவிரும்புகிறேன். அதே போல என் தம்பி கடை முதலாளியாக வர ஆசைப்படுகிறான்.

**பாலசுப்பிரமணியம் வளர்நிதி**

***(சுதந்திரபுரம் நலன்புரி நிலையம்)***

எனக்கு இயல்பாகவே படிக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும் ஓரளவுக்குத்தான் என்னால் படிக்க முடிந்தது. எவ்வளவோ முயற்சி செய்து நான் கல்வியில் சிறப்பாகப் பிரகாசிக்க முடியவில்லை. இதனால் நான் பாடசாலைக்குச் செல்வதை இயன்றளவு தவிர்த்து வந்தேன். எனது வரவு மிகவும் குறைவாகவே இருந்தது. இதனால் எமது பாடசாலை அதிபர் 'நீ ஒழுங்காக வருவதில்லை. உனக்குப் படிப்பும் ஓடாது' என்று கொஞ்சம் கடுமையாகவே சொல்லிவிட்டார். இது எனக்குப் பெரும் கவலையை உண்டாக்கிவிட்டது. அன்றிலிருந்து நான் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்திவிட்டேன். அதன் பின்னர் கடந்த மார்ச் மாதம் முறைசாராப் பிரிவினரால் நடத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றில் என்னை இனம் கண்டு தகுந்த புத்திமதி கூறினார்கள். அத்தோடு நான் தொடர்ச்சியாகக் கல்வி கற்பதற்குரிய பொருள்களையும் வழங்கினார்கள். இப்போது நான் மற்ற மாணவர்களைப் போல ஒழுங்காகப் பாடசாலைக்குச் சென்று கற்றல் நடவடிக்கைகளில் கவனத்தோடு ஈடுபட்டு வருகிறேன்.

**செல்வச்சந்திரன்**

*(செனிஸ்ரனின் தந்தை, மீன்வியாபாரி, சாந்தை)*

நான் காலையிலேயே வியாபாரத்திற்குச் சென்று விடுவதால் பிள்ளைகள் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் செல்கிறார்களா, இல்லையா? என்பது எனக்குத் தெரியாமலேயே போய்விடுகின்றது. ஆனால் எனக்கு அவர்கள் பாடசாலை செல்வதில்லை என்று காலம் தாழ்த்தியே தெரியவந்தது. பாடசாலைக்குச் செல்வதாகக் கூறி அவர்கள் இருவரும் (செனிஸ்ரன், செந்தூரன்) விளையாடு வதிலேயே காலத்தைக் கழித்திருக் கிறார்கள். இது



தெரிந்து எனது மனைவி "இனிமேல் பள்ளிக்கூடம் சென்றால் தான் உங்களுக்கு உணவு தருவேன்" என்று கூறியிருக்கிறார். இதனால் பிள்ளைகள் இருவரும் தமது பேர்த்தியார் வீட்டுக்குச் சென்று மதிய உணவை உண்டுவிட்டு தமது விளையாட்டைத் தொடர்ந்திருக்கிறார்கள். இதை அறிந்து நான் அவர்கள் இருவரையும் கடுமையாகத் தண்டித்தேன். இருந்தும் பயனேதும் இல்லை. இவர்கள் இருவரையும் எவ்வாறு மீண்டும் பாடசாலையில் சேர்க்கப் போகிறேன் என்பது எனக்கே புரியாத புதிராக இருந்தது. இந்நிலையில்தான் எனக்கு தெய்வாதீனமாக முறைசாராக் கல்விப் பிரிவினரின் உதவி கிடைத்தது. இப்போது எமது பிள்ளைகள் இருவரும் ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்லத் தொடங்கியிருக்கிறார்கள். இனிமேல் இவர்களின் கல்வி தொடர்பாக நான் மிகவும் அவதானமாக இருப்பேன்.

**பாலசுப்பிரமணியம்**

**(வளர்நிதியின் தந்தை - வசாவிளான்)**

நாங்கள் இடம்பெயர்ந்து வசாவிளான் சுதந்திரபுரம் முகாமில் வசித்து வருகிறோம். எனது மகன் வளர்நிதி தனக்கு படிப்பு ஒழுங்காக வருவதில்லை என்று கூறி அடிக்கடி பாடசாலைக்குச் செல்லாமல் நின்றுவிடுவான். நான் விறகு வெட்டி



வளர்நிதியும் தந்தை பாலசுப்பிரமணியமும்

அதனை விற்றுத்தான் குடும்பத்தை கொண்டு நடத்துகிறேன். அவ்வாறு ஒருமுறை விறகு வெட்டச் சென்ற போது மிதிவெடியில் அகப்பட்டு என்னுடைய ஒரு காலையும் இழந்து விட்டேன். இந்நிலையில் என்னைப் போல எனது மகனும் கஷ்டப்படாமல் இருக்க வேண்டும் என்றால் அவன் நன்றாகப் படித்து முன்னேற வேண்டும். ஆனால் அவனோ பாடசாலையை விட்டு விலகிவிட்டான். இதனால் நான் எனது மகனின் எதிர்காலம் பற்றி மிகுந்த கவலை கொண்டிருந்தேன். எனினும் இப்போது எனது மகன் திரும்பவும் பாடசாலைக்குச் செல்வதைப் பார்க்கும்போது மனதுக்கு நிம்மதியாக இருக்கின்றது. இதுபோல அவன் தொடர்ந்து படித்து உயர் நிலைக்கு வருவான் என நம்புகின்றேன்.



**திருமதி சரோஜினிதேவி**

*கனகரட்ணம் (அதிபர் சில்லாலை றோ.க.த.க)*

இடைவிலகிய மாணவர்களை மீளவும் பாடசாலையில் இணைக்கும்போது பல்வேறு சிக்கல்களை நாங்கள் எதிர்கொள்ளவே நேரிடுகிறது. உதாரணமாக கணிப்பீடு ஒரு முக்கிய பிரச்சினை. அதேபோல இடைவிலகிய மாணவர்கள் தாம் முன்னர் கற்ற அதே மாணவர்களோடே மீளவும் கல்வி கற்க நினைக்கின்றனர். அதுவும் ஒரு பிரச்சினைக்குரிய விடயம்தான். எனினும் இவற்றுக்காக மீளவும் கல்வி கற்க இணைகின்ற ஒரு பிள்ளையின் ஆசையை நாம் நசுக்கக்கூடாது. இப்போது செனிஸ்ரன், செந்தூரன் ஆகிய சகோதரர்கள் மீளவும் இணைந்துள்ளனர். இவர்களுக்கு கல்வியில் அதிக நாட்டம் இல்லாதபோதும் நாங்கள் இனிவரும் காலங்களில் இவர்கள் மீது விசேட கவனம் செலுத்தி அவர்களையும் நல்ல நிலைக்குக் கொண்டுவர முயற்சிப்போம்.

**ந.சண்முகராஜா**

*(வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்வி செயற்றிட்ட அலுவலர்)*

சமூகத்தின் முன்னேற்றத்துக்கு கல்வி மிக அவசியம் என்பதை எடுத்துரைப்பது எனது பணிகளில் ஒன்றாகும். இதனடிப்படையில் பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய



மாணவர்களை மீளவும் பாடசாலைகளில் இணைக்கும் பணியில் நான் முழுமூச்சாக ஈடுபட்டு வருகிறேன். சனி, ஞாயிறு ஆகிய வார இறுதி நாள்களில் கிராமம், கிராமமாகச் சென்று விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி இடைவிலகிய மாணவர்களை இனம் காண்பேன். அதன்பின்னர் அவர்களின் வீடுகளிற்குச் சென்று கல்வியின் முக்கியத்துவத்தை விளக்கி, கருத்துரைப்பேன். கற்றல் உபகரணங்களையும் வழங்குவேன். எந்தவித இலாப நோக்குமற்று சேவை அடிப்படையில் இதனைச் செய்து வருகிறேன். சமூக பிரக்ஞை உள்ள சிலரும் என்னோடு இணைந்து தொழிற்படுகிறார்கள்.

வறுமை, இடம்பெயர்வு, அறியாமை, பாடசாலைகளில் கடுமையான நடவடிக்கைகள் போன்ற பல்வேறுபட்ட காரணிகளால் மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநடுவிலேயே கைவிட வேண்டி வருகிறது. இவ்வாறு பள்ளிப்படிப்பைக் கைவிடும் மாணவர்கள் குழந்தைத் தொழிலாளிகளாகவும், சமூகப் பிறழ்வான நடத்தைகளில் ஈடுபடுபவர்களாகவும் மாற்றமுறுகின்றனர்.

இதனை மாற்ற வேண்டுமாயின் மீளவும் அவர்களைப் பாடசாலைக்குச் செல்ல வைப்பதே ஒரே வழி. அவ்வாறு பாடசாலைகளில் இணைக்கும் போது பாடசாலையில் காணப்படும் சில நடைமுறைச் சிக்கல்களால் இது கொஞ்சம் சிரமமானதாகவே இருக்கிறது. எனினும் விடாமுயற்சி செய்தால் எதையும் செய்ய முடியும் என்ற நம்பிக்கையோடு தொடர்ந்து தொழிற்படுகின்றோம். ஏறக்குறைய 14 இடங்களில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி இடைவிலகிய மாணவர்களை பள்ளியில் சேர்ப்பது என்பதே இப்போதைய குறிக்கோள்.

எனினும் போதிய கற்றல் உபகரணங்கள், வளங்கள் இல்லாத நிலையிலேயே எமது பணி தொடர்கிறது. அதிகாரிகள் உரிய வசதிகளையும், வளங்களையும் ஏற்படுத்தித் தரும் பட்சத்தில்



இடைவிலகிய மாணவர்களை மீளவும் இணைக்கும் எமது சேவையை விரிவாகவும் விரைவாகவும் செய்ய முடியுமென நம்புகிறேன். *******

நேர்காணல்:
ஒளண்யன், நந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

பூச்சி நீக்கிய இரண்டு மாத கறுப்பு, வெள்ளை லயன் பொமனேரியன் ஆண், பெண் குட்டிகள் விற்பனைக்குண்டு.

இல.519, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 077 9122972

## திருமணசேவை

ஆசிரியர்கள், பட்டதாரிகள், டாக்டர்கள், பொறியியலாளர்கள், வர்த்தகர்கள் உட்பட ஆண், பெண் இரு பாலாரின் ஜாதகங்கள் பலவும் எம்மிடம் உண்டு.

உங்கள் விருப்பத்துக்கேற்ற உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களைத் தெரிவு செய்ய உடனே விரையுங்கள்!

தொடர்பு: த.சிவானந்தன்
பிரபல சோதிடர்,
5, கைமலு வீதி, நல்லூர்.

## விற்பனைக்கு

2 சண்டெல் தொலைபேசி
இணைப்புகள்
விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0775526114

## காணி விற்பனைக்கு

றக்கா வீதியில் 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (பொஸ்கோ பாடசாலைக்கு அருகாமையில்)

தொடர்பு:
T.P| 0212226875


# மரண அறிவித்தல்கள்

## சூசை தீயோகுப்பிள்ளை (தீயோ)



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கிளாலியை வசிப்பிடமாகவும் கூழாவடி, ஆனைக்கோட்டையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சூசை தீயோகுப்பிள்ளை 01.05.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் மானிப்பாய், புனித அன்னாள் தேவாலயத்தில் நாளை (04.05.2009) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூழாவடி, ஆனைக்கோட்டை. தகவல்: குடும்பத்தினர்.

## துரைசிங்கம் விஜயலக்சுமி



கோப்பாய் றோட், உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் விஜயலக்சுமி நேற்று (02.05.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் துரைசிங்கத்தின் அன்பு மனைவியும் பிறேமமதி, ஸ்ரீவிஜயராஜராஜன் (கந்தன் களஞ்சியம்), ஜெயந்தி, தயாபரதி, ஸ்ரீகந்தராஜா, மோகன்ராஜா, குண ராஜா ஆகியோரின் பாசமிகு தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் றோட், உரும்பிராய்.
தொ.பே.இல. 021 222 6657

தகவல்: ஸ்ரீவிஜயராஜராஜன்
(கந்தன் களஞ்சியம்).

## நெஞ்சை விட்டகலா
# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 . 05 . 1923



மறைவு 14 . 04 . 2008

## அமரர் ஏகாம்பரம் சோமசுந்தரம் (சோமய்யா)

திதி: நவமி

காத்தோவே ஞானசத்தி என்றழைக்கும் என்னுயிரே!
ஆண்டொன்று சென்றதையா நீர் எனைப் பிரிந்து
அந்த நினைவாலே அழுதிங்கு வாடுகின்றேன்
கோடியிழந்த அன்றிலைப் போலத் துடி துடித்தேன்
துணையிழந்த நாகமெனப் பதறுகின்றேன்
விழுதிழந்து, விளைவிழந்து வெதும்புகின்றேன்
திரும்பி வந்து என் துயரைத் தீர்ப்பாய் ஐயா!
பறக்கச் சிறகுமில்லை பறந்தாறக் கொப்புமில்லை
இருக்க நிழலுமில்லை இருந்தாற மரமுமில்லை
நான் கதறி அழும் சத்தம் உன் காதில் கேட்கலையோ......

"இராஜஸ்தான்",
[illegible], நெல்லியடி. (சி/558294)

மனைவி, திருமதி சோ.இ[illegible]
(காத்தோ).


# நீங்களும் Engineer

பதிவுகள் 07.05.2009 முன் நேரில்

★செயன்முறையுடன் கூடிய விரைவான வகுப்புக்களில்..
introducation to Network,Network Cabling,
Installing Windows Server 2003,2008 & Vista
Creating Network Connections
Installing Active Directory Services
Creating and Managing Domain Accounts
Shared Files and Folders(Shared Folder Permissions,Data Folders, Administrative Shared Folders, Combining Shared Folder Permissions and NTFS Permissions)
Delegating Administrative Control........Etc

★Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்.
★USA,UK, பெங்களூர் பல்கலைக்கழகங்களில் BSc,MSc
*தேர்ச்சி பெறும் அனைவருக்கும் Student Visa, Work Permit Carrier Guidance

விபரங்களுக்கு நேரில்
324, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Route - 764

## காணி விற்பனைக்கு

திருமண மண்டபம் அமைக்கக் கூடிய நான்கு பரப்புக்காணி திருநெல்வேலி மத்தியிலும், தென்னை மரக்கன்றுகளுடன் கூடிய 13½ பரப்புக் காணி கோண்டாவில் பகுதியிலும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779232988 (84775)

## இறைச்சிக் கோழி விற்பனை

நிறை கூடிய தரமான புறொயிலர்
இறைச்சிக் கோழிகள் விற்பனை
செய்யப்படுகின்றன.
செம்மணி பாம்
77/3, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.


## உதவிகள் வழங்கப்பட்டன

கோப்பாய், மே.3

வலுவிழந்தோருக்கான தேசிய செயலகம் வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் இவ்வாண்டில் இதுவரை 17 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் சுயதொழில் உதவித் தொகையை வழங்கியுள்ளது.

இதன் மூலம் பயனாளிகள் கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, சிறுகடை, மரக்கறி வியாபாரம் போன்ற சுயதொழிலில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(203-72)

* * *

கோப்பாய், மே.3

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தால் அண்மையில் வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 61 புற்று நோயாளர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் உதவு தொகை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 4 மாதங்களில் புதிதாக இனங் காணப்பட்ட 24 புற்றுநோயாளர்களிற்கு மிக விரைவில் இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. (203-72)

**குழுக்கூட்டம்**

கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு, விவசாய குழுக் கூட்டங்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (203-72)


**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2011

| | |
|---|---|
| Econ | : NB.சுஜீதரன் |
| Tam | : S.சிவா |
| Pol.Sc | : T.சுஜன் |
| Dra | : J.ஜேசன் |
| Geo | : A.ராஜா |
| Chris | : U.L.மேரி |
| Hindu | : S.கார்த்திக் |
| Log | : R.ரமணன் |
| Eng | : A.T.MUTHU |
| B.St | : B.S.[illegible] |
| Acc | : [illegible] |



## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பம், 30 வயது, அத்தநட்சத்திரம், 8இல் செவ்வாய், Phd in chemical Engineering, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.

இது ஒரு திருமண சேவை
(www.thaalee.com) Profile Number 5873
போன்:. 2523127, 2520619.

யாழ்.இந்து கௌரவகுடும்பம், 34 வயது, பூரநட்சத்திரம், Accountant ஆகக் கடமை புரியும் UK Citizen மணமகனுக்கு (1இல் சனி, 8இல் செவ்வாய் உள்ளது) மணமகள் தேவை.

இது ஒரு திருமண சேவை
(www.thaalee.com) Profile Number 5887
போன்:. 2523127, 2520619.

யாழ். Non R.C., கௌரவகுடும்பம், 30 வயது, Accountant ஆகக் கடமை புரியும் Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.

இது ஒரு திருமண சேவை
(www.thaalee.com) Profile Number 453
போன்:. 2523127, 2520619.

## செல்வசிங்கம் திருமண சேவை

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள இருபாலாருக்கும் கடந்த பல வருடகாலமாக நாம் திருமண சேவை ஆற்றிவருகின்றோம்.

தொடர்புகளுக்கு:
Selvasingam Marriage Service
No:09, Quarry Road,
Colombo - 06.
TP: (011) 2362994, (011) 7205129
E-mail: selvasingam11@gmail.com


# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 20.08.1970
அனைவரும் நெகிழ 03.05.2004



## அமரர் தில்லைநாதன் கெங்காதரன்
(உரிமையாளர் சுதரன் மரக்காலை, கொக்குவில்)

அறிவுள்ள மகனாய், மூத்த சகோதரனாய்,
அன்புள்ள கணவனாய், பாசமுள்ள தகப்பனாய்,
பண்பான உறவினனாய், நேசமுள்ள நண்பனாய்
உழைப்பால் உயர்ந்த உத்தமனாய்- இப்படி
பல பந்தங்களாய் எம்முடன் வாழ்ந்தாயே!
ஆனால் இப்போது எல்லாப் பந்தங்களையும்
தவிக்கவிட்டு நீ மட்டும் தனியாய் சென்றது ஏனோ!
நீ சென்ற காலங்கள் நீடித்தாலும்
உனது அன்பு என்றும் எம் நெஞ்சில்
நீங்கா நினைவுகளுடன் இருக்கின்றன.

நந்தாவில் ஒழுங்கை,
கொக்குவில் (சம்பியன் லேன்).
குடும்பத்தினர். (84799)

# மரண அறிவித்தல்

## சின்னப்பொடி ஏரம்பு

கைதடி தெற்கு கைதடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடி ஏரம்பு நேற்று (02.05.2009) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் தில்லைப்பிள்ளையின் அன்புக் கணவரும் தெய்வானை, சுந்தரலிங்கம், கனகலிங்கம் (சுகாதார சேவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்), சிவலிங்கம் (சாரதி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), தர்மலிங்கம் (லண்டன்), தெய்வமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷ்ணபிள்ளை, சிவசோதி, மங்களேஸ்வரி, நந்தினி, சுதாயினி (லண்டன்), நவபாலன் (வலி.தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளிற்காக கைதடி ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி. (சி/558302)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்திய தேர்தல்களில் வாக்களிப்பு மந்தம்!

இந்தியத்தேர்தல்களில் வாக்களிப்பு மிகமிக மந்தமாகவே நடைபெறுவதாக அறிக்கைகள் கூறுகின்றன. ஆளும் கட்சியோ, எதிர்க்கட்சியோ பெரும்பான்மை பெறமுடியாது என ஊகங்கள் நிலவுகின்றன. இதை உறுதி செய்யுமாற்போல வாக்களிப்பு சதவீதமும் மிகக்குறைவாகவே உள்ளது. ராகுல் காந்தி போட்டியிடும் அமேதி தொகுதியில் கூட 45 சதவீதத்துக்கும் குறைவாகவே வாக்குகள் பதிவாகியிருந்தன. அடுத்தடுத்து வந்த அரசுகள் தந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையால் வாக்காளர்களின் ஆர்வம் குறைந்தது பிரதான காரணம் என்று கூறலாம். இதுதவிர கூட்டணிகளின் கொள்கையற்ற அரசியலும் மற்றொரு காரணமாகலாம். உதாரணமாக, தற்போதைய காங்கிரஸ் அரசில் அமைச்சராக பதவி வகித்துக் கொண்டே தேர்தலில் காங்கிரஸுக்கு எதிராக லல்லுபிரசாத் யாதவ் கட்சி போட்டியிடுகிறது. அவ்வாறே காங்கிரஸ் கூட்டணியில் இருந்து போட்டியிட்டுக்கொண்டே 3 ஆம் அணிதரப்பில் தான் பிரதமராவதற்கு எதிரணிகளில் உள்ள கட்சிகளிடம் இருந்து சரத்பவார் ஆதரவு தேடி வருகிறார். இதனால் ஆளும் கூட்டணிக்கு ஆதரவு கொடுக்க மக்கள் தயங்குகின்றனர். எதிர்க்கட்சியான பி.ஜே.பி அணியிலும் சிவசேனா கட்சி, ஐக்கிய ஜனதா தளம் என்பன அத்வானி பிரதமர் ஆவார் என்ற நம்பிக்கையுடன் பிரசாரம் செய்யவில்லை. நழுவல் போக்காகவே சகல கட்சிகளின் பிரசாரங்களும் அமைந்துள்ளன. இதனால் வாக்காளர் நம்பிக்கை வைத்து வாக்களிக்கும் தேர்தலாக இது அமையவில்லை.

மொத்தத்தில் அரசியல்வாதிகளின் பதவி சுகத்திற்கு வழிவகுப்பதேயன்றி மக்கள் குறைதீர்க்கும் தேர்தல்கள் அல்ல என்ற உணர்வு மக்களிடையே மேலோங்கியுள்ளது. இது அரசியல் கட்சிகளை கிலிகொள்ளச் செய்துள்ளது எனலாம். தமது அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாத அதிருப்தியில் பல பின்தங்கிய பகுதி மக்கள் ஒட்டுமொத்தமாக வாக்களிப்பை புறக்கணித்த சம்பவமும் இடம்பெற்றுள்ளது. இதனால் அச்சம் கொண்ட அரசியல் கட்சிகள் அடிப்படைப் பிரச்சினைகளிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பும் வகையில் நாடகமாடி வருகின்றன. தமிழகத்திலும் இலங்கைப் பிரச்சினை இந்த அடிப்படையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தினாலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினாலும் தூசி தட்டி எடுக்கப்பட்டுள்ளது.

அடிப்படை பிரச்சினைகள் பற்றி விஜயகாந்த் விலாவரியாகப் பிரசாரம் செய்வதால் தி.மு.க கெடிக்கலக்கமடைந்துள்ளது. தி.மு.கவும், அ.தி.மு.கவும் மாறிமாறி ஆண்டு வந்ததால் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்க்காதது பற்றி விஜயகாந்த் எழுப்பும் கேள்விகளுக்கு இவர்களால் பதில் சொல்லமுடியவில்லை. அதிலிருந்து மக்களை திசைதிருப்பும் நோக்கில் ஜெயலலிதா இலங்கைத் தமிழருக்கு தமிழீழமே ஒரே தீர்வு என திருவாய் மலர்ந்தருளி உள்ளார். வேறு வழியின்றி கலைஞரும் ஈழ ஆதரவு நாடகத்தில் இறங்கியுள்ளார். ஆனால், இவற்றை அறியாமல் ஏமாறுமளவுக்கு தமிழக வாக்காளர்கள் முட்டாள்கள் அல்லர் என்பதை வரலாறு காட்டுகிறது. விஜயகாந்தின் பிரசாரம் மட்டுமே தமிழகத்தின் இன்றைய களநிலைவரத்துடன் ஒத்துப் போகிறது என்பது வெளிப்படையாகத் தெரியும் உண்மையாகும். இதனால், தி.மு.கவும், அ.தி.மு.கவும் அச்சமடைந்துள்ளன. தி.மு.க. மீது மாநில மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளபோதும் அந்த அதிருப்தியில் இருந்து நூறு சதவீத லாபமடைய அ.தி.மு.கவுக்கு இயலாது போகும் என்றே கருதப்படுகிறது. ஒருவேளை விஜயகாந்த் ஒரு தொகுதியிலும் வெல்ல முடியாது போனாலும் பல தொகுதிகளில் அ.தி.மு.கவின் வெற்றி வாய்ப்பையும் சில தொகுதிகளில் தி.மு.கவின் வெற்றி வாய்ப்பையும் தட்டிப்பறிப்பார் என்பது மட்டும் நிச்சயம். மேலும் மற்ற அணிகள் பிரசாரம் தொடங்க முன்பே விஜயகாந்த் ஒரு சுற்று தமிழகத்தை சுற்றி முடித்துவிட்டார். விஜயகாந்த் ஒருபுறம் அவரது மனைவி ஒருபுறம் என தே.மு.தி.கவின் பிரசாரம் முழுவேகத்தில் நடக்கிறது. தி.மு.க. தரப்பு இதற்கு ஈடுகொடுக்கும் நிலையில் இல்லை. கலைஞர் முதுகு வலியும் முதுமையும் காரணமாக மாநிலம் முழுவதும் பிரசாரம் செய்வது இயலாதெனத் தெரிகிறது. தெற்கு மாவட்டங்கள் முழுவதும் அழகிரியின் பொறுப்பில் விடப்பட்டுள்ளன. ஸ்டாலினும் வடக்கே மும்முரமாக பிரசாரம் செய்துவருகிறார். அ.தி.மு.க அணியில் ஜெயலலிதாவின் ஹெலிக்கொப்டர் பிரசாரம் பெருமளவு மக்களை சந்திக்க உதவாதது குறைபாடாகவே உள்ளது. இவ்வகையில் தமிழகத்தில் பெருமளவு மக்களை குறுகிய காலத்தில் சந்தித்த ஒரே தலைவராக விஜயகாந்த் மட்டுமே விளங்குகிறார். இந்தச் சாதனை வாக்குகளாக மாறுவது நிச்சயமாயினும் வெற்றியாக மாறுமா என்பது கேள்வியே.



இதேவேளை உயிரற்ற இந்தத்தேர்தலுக்கு உயிரூட்டும் விஷயங்களாக விஜயகாந்த்தும் இலங்கை விவகாரமும் உருவெடுத்துள்ளது உண்மையே ஆகும். குறைந்தபட்சம் மக்களைத் திசைதிருப்பும் நோக்கிலேனும் அ.தி.மு.கவும், தி.மு.கவும் ஈழ ஆதரவு நிலைப்பாட்டை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. காவிரிநீர், ஒகனேக்கல் கூட்டுக்குடிநீர் திட்டம் என தமிழகத்துக்கு தனித்துவமான பிரச்சினைகளைக் கூட்டித் தள்ளும் அளவுக்கு ஈழப்பிரச்சினை விஸ்வரூபம் எடுத்துள்ளது. இந்தளவுக்கு இவ்விஷயத்தை பிரபல்யப்படுத்தும் பெருமை ராமதாஸ், வைகோ, திருமாவளவன், கிருஷ்ணசாமி போன்ற அரசியல் தலைவர்களுக்கும் நெடுமாறன், வீரமணி, சீமான், பாரதிராஜன் உள்ளிட்ட அரசியல் வாதிகளல்லாத தமிழ்த் தலைவர்களையுமே சாரும். தமிழகத்தில் சோனியா காந்தியோ, ராகுல் காந்தியோ இன்னும் பிரசாரத்துக்கு வரவில்லை. அத்வானியும் ஒரே ஒரு கூட்டத்தில் மட்டும் பேசியுள்ளார்.

- எஸ்.சுரேந்திரஜித் -

சோனியாவும் ராகுலும் தமிழகத்தினுள் பிரவேசிக்க விடமாட்டேன் என பாரதிராஜா கூறியுள்ளார். சோனியாகாந்தி கடந்த தேர்தலில் கூட தமிழகத்தில் ஒரே ஒரு கூட்டத்தில் மட்டும் கலைஞருடன் பங்கேற்றார். இம்முறை ஈழத் தமிழர் விவகாரம் காரணமாக தமிழகத்தில் தேர்தல் கூட்டத்தில் பேசுவது சோனியாகாந்திக்கு சங்கடமாக இருக்கும். ராகுல் காந்தியும் தமிழகம் தவிர அனைத்து இந்திய மாநிலங்களிலும் பிரசாரம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆக இவ்விருவரும் தமிழகம் வருவது என்பது கேள்வியாகவே உள்ளது. வழக்கமாக நேரு, காந்தி குடும்பத்தினரின் முகத்தைக் காட்டினால் வாக்கு விழும் என்ற நிலைமை தமிழகத்தில் இருந்தது. இன்று தமிழகத்தில் அந்த நிலைமை இல்லை. அவர்கள் பிரசாரம்



செய்யவிட்டாலும் பரவாயில்லை என தி.மு.கவில் சில தரப்பினர் கருதுவதாகத் தெரிகிறது. காரணம், சோனியாவோ, ராகுலோ தமிழக பிரசாரக் கூட்டங்களில் பேசும்போது கூட்டத்தினர் ஏதாவது சலசலப்பை ஏற்படுத்தலாம். செருப்பு வீச்சுகளும் இப்போது ஒரு 'பஷன்' ஆக மாறி வருகின்றன. இது தவிர சோனியாவும் ராகுலும் தமிழகத்தில் கூட்டத்தில் பேசுவதாயின் ஈழத்தமிழர் விவகாரத்தில் என்ன பேசுவார்கள் என்ற கேள்வியும் எழுகிறது. பாரதிராஜா போன்ற அரசியல் பின்னணி அற்றோரும் பா.ம.க., வைகோ கட்சி போன்ற ஈழ ஆதரவாளர்களும் இந்தக் கூட்டங்களைக் குழப்ப மக்களைத் தூண்டக்கூடும். ஆனாலும், காங்கிரஸ் கட்சியினர் சோனியா காந்தியை வரவழைப்பதில் மும்முரமாக உள்ளனர். அவர்களைப் பொறுத்தவரை கோஷ்டிச் சண்டையில் இருந்து மீளமுடியாது தவிக்கும் தமிழக காங்கிரஸாரை ஊக்குவிக்க சோனியா காந்தியின் பிரசன்னம் அவசியமே. இதேவேளை, ராஜீவ் கொல்லப்பட்ட தமிழக மண்ணில் கால் பதிக்க அவரது தனயனும் வெகுவாகத் தயங்குவதும் தெளிவாகத் தெரிகிறது. இல்லாவிடின் சகல இந்திய மாநிலங்களிலும் பிரசாரம் செய்துள்ள ராகுல்காந்தி இன்னும் தமிழகம் பக்கமே பார்வையைத் திருப்பாததற்குக் காரணமில்லை. ✱

## மழை பெய்கையில் ஆலமரத்தின் கீழ் ஒதுங்கியவர்களை மின்னல் தாக்கியது

**1918 மே 7**

*அளவெட்டியில் மின்னல் தாக்குதலில் இருபது பேர் காயம்:*

**1918ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவம் இது: 20 பேர் காயமுற்றனர்**

1918ஆம் ஆண்டு மே மாதம் ஏழாம் திகதி அளவெட்டியில் மரணமடைந்த ஒருவரின் சடலத்தைத் தகனம் செய்துவிட்டு உறவினர்கள் வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் திடீரென இடியுடன் கூடிய மழை பொழிய ஆரம்பித்தது. உடனே அனைவரும் அருகிலிருந்த ஆலமரத்தின் கீழ் ஒதுங்கினர். ஆலமரத்தின் மீது மின்னல் தாக்கியது. மின்னல் தாக்குதலில் ஆலமரத்தின் கீழ் ஒதுங்கிய இருபது பேரும் கடும் காயங்களுக்கு உள்ளானார்கள். உணர்ச்சியற்ற நிலையில் இவர்களனைவரும் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

**இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் இங்கே....!**

தெய்வாதீனமாக அனைவரும் உயிர் பிழைத்தனர். எனினும் தாக்குதலுக்கு இலக்கனாவர்களின் உடம்பில் பலத்த எரிகாயங்கள் காணப்பட்டன. சிலருக்கு தலைமயிர் எரிந்திருந்தது. வேறு சிலருக்குத் தீக்காயம் ஏற்பட்டிருந்தது. ஏனைய சிலரின் உடம்பில் கொத்தா பட்டு பொங்கியது போன்ற அடையாளம் காணப்பட்டது.

தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.
PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# கொழும்பில் நேற்றுமுன்தினம் 17 தமிழர் கைது

கொழும்பு, மே3

மே தினமான நேற்றுமுன்தினம் கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் இடம்பெற்ற தேடுதலில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். 17 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, கொழும்பு-7 ஆகிய பகுதிகள் மற்றும் புறநகர் பிரதேசங்களான வத்தளை நீர்கொழும்பு ஆகிய இடங்களில் தேடுதல் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றன.

பொலிஸாரும் கடற்படையினரும் இணைந்து நடத்திய தேடுதல் நடவடிக்கையில் வீதியால் சென்ற பலர் வழிமறிக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். பிரதான கட்சிகள் எதுவும் கொழும்பு நகருக்குள் மேதின ஊர்வலங்களை நடத்தவில்லை. இந்த நிலையிலும் அதி காலை முதல் பிற்பகல் வரை பாரிய தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றன. கைதானவர்கள் பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை மலையகத்தில் கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலும் இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். (1)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு: 15.12.1942

உதிர்வு: 03.04.2009

### அமரர் நடராசா முத்துக்குமாரசாமி

கடந்த (03.04.2009) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்திகேட்டு உடன் வருகைதந்தவர்களுக்கும் தந்தி, தொலைபேசி மூலமும் நேரில் வந்தும் ஆறுதல் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு கை கொடுத்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (03.05.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்

## மணமகள் தேவை

யாழ் இந்து மிருகசீரிடம் 4ஆம் பாதம் கனடாவில் அரச உத்தியோகம், திருமணமான உடன் விவகாரத்துப் பெற்ற மண மகனுக்கு 30-35 வயதுக்குட்பட்ட மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: 0112380590

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுய தெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

## திருமண சேவை

மணமக்களே! WWW.thaalee.com என்கிற Website இல் பல்லாயிரக்கணக்கான மணமக்களுடைய முழுமையான விவரங்கள், ஜாதகங்கள், புகைப்படங்கள் உள்ளன. நீங்களாகவே உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவுசெய்து கொண்டு எம்மை நாடினால் நாங்கள் ஆவன செய்வோம். உங்களுடைய விவரங்களையும் நீங்களாகவே பதிவு செய்து கொள்ளமுடியும். மேலதிக விவரங்களுக்கு

தொ.பே.: 2523127,2520619. முகவரி: 45/1, மாதம்பிட்டிய வீதி, கொழும்பு- 15

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், லண்டன் குடியுரிமையுள்ள பூரட்டாதி 1ஆம் பாதம் கும்பராசி, இடப இலக்கினம் கிரகபாவம் 6 1/2, 3இல் செவ்வாய் 05.04.1978 இல் பிறந்த அழகிய சிவந்த மணமகனுக்கு குடும்பப்பாங்கான அழகிய மணமகள் தேவை.

TP: 077 2543986

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 22 * 06 * 1931



விண்ணில் 13 * 05 * 2008

### திருமதி குணமணி சின்னத்தம்பி (மணி)

திதி: வளர்பிறை நவமி

அம்மா! அம்மா!! என்று ஆயிரம்முறை கதறி அழுதாலும் ஆறுமோ எம்மனம். பாரினிலே பாசமுடனும் அன்புடனும் எம்மை வளர்த்து உலகினிலே எம்மை உயர்வைத்த எம் அன்புத் தெய்வமே! அம்மா ஆண்டு ஒன்று போனதே சோகம் இன்னும் எம்மை விட்டுப் போகவில்லையே! மகன், மகள்மார், மருமக்கள் பார்த்திருக்க அமைதியாக நிம்மதியான மீளாத் துயில் கொண்டீரே. நடமாடும் வீட்டினிலே நீங்கள் நிழல் படமான மாயமென்ன அம்மா பழமொழிகள், திருக்குறள்கள் கூறி பாசமுடன் வளர்த்தீரே! பசுவை இழந்த கன்றுகளாய் எம்மை ஏங்கவிட்டு மீளாத்துயில் கொண்டீரே. நீங்கள் எம்மைப் பிரிந்தாலும் ஞாலத்தில் எம்முயிர் உள்ளவரை காயாத எம்விழி நீரால் உம்மை அர்ச்சிக்கின்றோம்.

என்றும் நினைவுடன்:
565/3, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
மகன், பிள்ளைகள்

(44497)

# நீங்காத நினைவில் ஈராண்டு

தோற்றம் 29.10.1951



மறைவு 25.04.2007

## திருமதி உமாதேவி நடராசா

(ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி)

திதி: 03.05.2009

காலையும் வெந்தது
மாலையும் வெந்தது
ஆறாப் புண்ணில் மாறாக் காயமாய்
எரிந்தது தீயாய் நின் நினைவு
கண்ணியம் காக்கும் தாயே!
புண்ணியம் போற்றப் பிறந்தவளே!
ஈராண்டுகாலம் ஓடிப்போனாலும்
உம் நினைவு எம் நெஞ்சை விட்டகலாது
நிலையில்லா இவ்வுலகில்
நிலைத்துவிட்ட உன் அன்பால்
நினைவிழக்க முடியாத - நாம்
நீந்துகின்றோம் கண்ணீரில்.

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

T.P:- 0776176861, 0602218087,
021 224 0316

கணவர்-சி.நடராசா (அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியப் பொழில்




## நீட்சி

மயிரமை பிடித்தவன் போலிருந்த நாகராஜன் சுயநினைவு பெற்றான். யோசித்த பிறகே, உள் மனத்தில் அப்பிக் கொண்டிருந்த ஏதோ ஒரு திகைப்பில், தன்னை மறந்து இருந்தது தெரிந்தது. பஸ்சிற்குள் பிரயாணம் செய்யும் உணர்வும் தட்டியது.

பஸ், எகிறி எகிறி ஓடிக்கொண்டிருந்தது. அவ்வோட்டத்திற்கேற்ப, வெளியே இருந்து வீசிய காற்று; உள்ளேயோ, பகல் உக்கிரம் சிந்தி மறைந்த வெப்பத்தின் நெடி; இரண்டும் சேர்ந்த ஒரு வினோதமான கலவை, விட்டு விட்டு வந்து முகத்தை அழுத்தியது.



'குந்தவை' என்ற புனைபெயரில் ஈழத்துத் தமிழ்ப் புனைகதைத் துறையில் அறியப்பட்ட இரா.சடாட்சரதேவி யாழ்ப்பாணம் தொண்டைமானாறைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

1960 களின் பிற்பகுதியில் எழுதத் தொடங்கிய இவரது சிறுகதைகள் அவ்வேளைய ஈழத்து இதழ்களிலும் சஞ்சிகைகளிலும் மட்டுமல்லாது கணையாழி, ஆனந்தவிகடன் உட்பட தமிழ் நாட்டின் சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியிருந்தன.

பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பட்டதாரியான இவர் ஆசிரியையாகத் தொழில் புரிந்தவர்.

எண்ணிக்கையில் குறைவாயினும் குந்தவையின் சிறுகதைகள் தரமானவை எனக் கணிக்கப்படுவன. இவரது சிறுகதைகள் அடங்கிய "யோகம் இருக்கிறது" என்ற தலைப்பிலான சிறுகதைத் தொகுதி 2002 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

'நீட்சி' என்ற தலைப்பிலான அவரது சிறுகதை இவ் வாரத்திய இலக்கியப் பொழிலை அலங்கரிக்கிறது.

அவன் தன் 'கோம்ரேட்டு'களுடன் நாவலப்பிட்டியிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தான். அங்கு வசதியற்ற நிலையில் இருக்கும் தோட்டச் சிறுவர்களுக்குக் கல்வி போதித்துவிட்டு பேராதனைக் 'கம்பெசு'க்குத் திரும்பிப் போய்க் கொண்டிருந்தனர். 'கல்விப் போதனை'- மனத்தில் அதேகாட்சி.

தோழன் குருநாதன் தோட்டக் குழந்தைகளை வரிசையாக அமர்த்தி விட்டு தன் 'போதனை'யை நடத்து கிறான். உலகப் பெரியார்கள் -மார்க்ஸ், லெனின் ஸ்டாலின், மா-சே-துங் நீங்களும் அவர்களைப் போல.... பக்கத்தில் நின்று கேட்டுக்கொண் டிருந்த அவனுக்கு 'சுரீல்' என நெஞ்சில் ஏதோ இறங்கியது. பிஞ்சு நெஞ்சங்களில் பதியும் படி சொல்லிக் கொடுக்கும் படிப்பு இதுதானா?

அவனால் அடக்கிக் கொண்டிருக்க முடியவில்லை.

பஸ் ஸ்டாண்டுக்கு வரும்பொழுது குருநாதனிடம் இதைக் கேட்டே விட்டான். "அதுக்கு என்னடா? இதுதான் எங்கட பிரச்சாரம். எங்கட கொள்கைகளை எப்படியும் புகட்ட வேணும். அவ்வளவுதான்." தன் கட்சிக் காரன் என்ற உரிமையில், அவனிடம் குருநாதன் உண்மையை அப்படியே பச்சையாகச் சொல்லிவிட்டான்.

தூய பயன் கருதாப்பணி என வெளியில் சொல்லிக்கொண்டு பல்கலைக்கழகத்தில் இருந்து இங்கு வருகின்றார்களே! அந்தத் தூய்மையின் விலை இவ்வளவுதானா?

புனிதமான சேவை என்ற உணர்வும் அது அளித்த உற்சாகமுமாய் அவன் தோட்டத்திற்குள் நுழைந்தானே, தன் அருமைத் தோழர்களோடு. இவர்கள் கட்சி என்ற குறுகிய எல்லைக்குள்ளேயே எல்லா வற்றையும் அடக்கும் திறமை பெற்றவர்கள். புனிதம் என்ற சொல்லே இவர்களுக்குத் தெரியாது. தெரிந்த செல்வம் கட்சி ஒன்றுதான்.

மனத்தைச் சமாதானப்படுத்த முயன்றான். இவர்களின் இலட்சிய நாடுகளில் கையாளப்படும் கல்விமுறை இத்தகையதுதான். இதை இங்கும் பிரத்தியட்சமாகச் செய்து பார்க்கிறார்கள். அவ்வளவுதான். இப்பொழுதே இப்படி யென்றால்...... இலங்கையும் இவர்கள் விரும்பிய மாதிரி வந்துவிட்டால்.... ஐயய்யோ வேண்டாம்!

என்ன ஐயய்யோ வேண்டிக் கிடக் கிறது. தானும் அவர்களில் ஒருவனாக இதுவரை இருக்கும் பொழுது.....

பஸ் ஒரு குலுக்கலுடன் ஒரு ஸ்டாப் பில் வந்து நின்றது. விழப் போனவன் பக்கத்துச் சீட்டின் விளிம்பைப் பிடித்துக்கொண்டு சமாளித்தான்.

ஒரு தோட்டத் தொழிலாளக் குடும் பம் ஏறி வந்தது. அதில் ஒரு சிறுமி, இருக்க இடம் தேடி அவன் சீட்டருகில் வந்து ஒதுங்கினாள். தள்ளியிருந்து அவளுக்கு இட வசதி அழித்தவன் கேட்டான். 'தங்கச்சி எங்க போறீங்கள்?'

'சினிமா பார்த்திட்டு தோட்டத்திற்குத் திரும்பிட்டு இருக்கோம்' இலங்கைத் தமிழும், இந்தியத் தமிழும் சங்கம மாயின.

அவன் சிறுமியை நோட்டமிட்டான். சீத்தைத் துணியில் தைத்த நீண்ட சட்டை; தலைப்பின்னலை நுனியில் வெள்ளைத்துணி வைத்து முடிந்திருந் தது. கையில் கண்ணாடி வளையல், அவளிலும் பக்கத்து ஆசனத்தில் இருந்த அவள் தாய்,தமக்கை ஆகியோரிடமும் வறுமையின் தேக்கத்தினையும் அறியாமையின் வெகுளித் தோற்றத்தை யும் காண முடிந்தது.

எண்ணிக்கைப் பொருளாகி ஐந்து வருடத்திற்குள் நாடு கடத்தப்படப் போகும் ஐந்து லட்சம் பேரில் இக் குடும் பமும் ஒன்றாய் இருக்கலாம். கடும் உழைப்பைக் கொட்டி தாம் வளமாக்கிய நாடு,இப்பொழுது குடியிருக்கக் கூட உரிமையளிக்க மறுத்து, தம்மைத் துரத்து வதற்காகவே எடுக்கும் கல் நெஞ்ச நட வடிக்கைகளை இவர்கள் இன்னும் உண ராமலும் இருக்கலாம். இவர்களைப் பற்றி ஏக கட்சி ஒன்றும் சொல்லவில்லை? கட்சியின் நிலைதான் என்ன? தமக் குள்ளேயே வெட்டுப்பழி; குத்துப்பழி.

அக்குடும்பமே பக்கத்து இரு சீட்டுக்களிலும் ஏகாதிபத்தியம் செலுத்தியது. 'ஏகாதிபத்தியம்' கட்சியின் 'றெடிமேட்' சொல். அடிக்கடி உச்சரிப்பதால் நினைவில் கூட ஒரு சொல்லே வருகின்றது. உண்மையாகப் பார்த்தால் இவர்கள்தான் ஏகாதிபத்திய வாதிகள். தம் கொள்கையைத் தோட்டச் சிறுவர்களுக்கும் திணித்து ஆதிக்கம் பெற முனைபவர்கள். ஒன்றையே திரும்பத், திரும்பச் சொல்வதன் மூலம் சுயஅறிவை மழுங்கவைத்து.....

பக்கத்தில் இருந்த குருநாதன் உசுப்பினான். 'என்னடா மச்சான் பெரியயோசினை ? எங்களுக்குப் படிப்பிச்ச அலுப்பு கண்டியோ. அதைப் போக்காட்ட ஹிந்துகலையிலை இறங் கிறம். நீதான் 'நல்ல பிள்ளை' யாச்சே. பத்திரமாகக் கம்பஸ்சுக்குப் போய்ச் சேர். நாளைக்குப் பின்னேரம் கட்சிக் கூட்டம் மறந்திடாதை.' என்ன வென்றோ எல்லா வற்றிற்கும் தலையாட்டி விட்டான்.

(14 ஆம் பக்கம் பார்க்க....)

## புரிந்தது உன்னால்



என், நெஞ்சத்தைத்
தட்டிப் பார்க்கும் -
சில்மிசங்களெல்லாம்,
உன் கண்கள் கொடுத்த
சமிக்ஞைகள் என்பேன்;

உன்,
உதடுகள் பிரிந்த
வேளையில்தானே
இசையின் வயத்தை
அறிந்து கொண்டேன்;

உன்,
புன்னகை தோன்றிய
கணத்தில் அன்றோ
மின்னல் கீற்றைக்
கண்டு கொண்டேன்;

உன்,
மெல்லிய நடையின்
அழகிலன்றோ,
அன்ன நடையே
பிறந்ததென்பேன்;

நீ,
என்னைத் தொட்ட
வேளையிலேதான்
மென்மை எதுவெனப்
புரிந்துகொண்டேன்

நீ,
என்னைவிட்டு நீங்கிய
பின்தான்
வலியின் ரணத்தை நான்
உணர்ந்து கொண்டேன்.

அ.சூரியன், ஹறணி.



# ஒருவனின் மனைவி எனப் பெண்ணை அடையாளம் காட்டும் தாலி; தமிழர் இல்லற மரபின் தனித்துவம் காட்டும் மங்கலச் சின்னமும் அதுவே!

'தாலி பெண்ணுக்கு வேலி' என்று பழைய சினிமாப் பாடல் வரி ஒன்று உள்ளது. தாலி யின் பெருமை பேசும் சினிமாப் படங்களும் வந்தன. தகுதியில்லாதவன் கட்டினால் அதனைக் கழற்றி வீசுவதில் தவறில்லை என்று கூறும் படங்களும் வந்தன. எவ்வாறாயினும், திருமணத்தில் கணவனால் கட்டப்படும் தாலி ஒரு பெண் திருமணமானவள் என்பதைக் குறித்த போதும், அது கணவன், மனைவியிடையே அன்பான பந்தத்தை வளர்க்கவும் காரணமாக அமைந்தது, இன்றும் அமைகிறது. மனைவியின் கழுத்தில் தாலியைக் காணும் கணவன் இவள் எனது மனைவி. எனக்குச் சொந்தமானவள். இவளில் வாழ்நாள் முழுவதும் அன்பு செலுத்துவதுடன், கஷ்டப்படாது இவளை வாழவைக்க வேண்டியது எனது கடமை என்று நினைக்கிறான். தாலியைச் சுமந்திருக்கும் பெண்ணோ இவன் என்னை மணந்து எனக்கு புதிய வாழ்வு தந்தவன். அவனுக்கு உரியவளாக நான் வாழ வேண்டும் என்று நினைக்கிறாள். இவ்வாறான எண்ணங்கள் இருவரிடையே உள்ள பந்தத்தை வலுவுடைய தாக்குகின்றன. அந்தப் பந்தம் குடும்பம் என்ற அமைப்புக்கு அடித்தளம் அமைக்கின்றது.

யாழ்ப்பாணத்திலேயே பொற்கொடியில் தாலியைக் கோர்த்துக் கட்டும் வழக்கம் உள்ளது. இந்தியாவில் எவ்வளவு பணம் இருந்தாலும் தாலியை மஞ்சள் கயிற்றில் கோர்த்துக் கட்டுவதே வழக்கம். கஷ்டம் வரும்போது உதவும் என்ற வகையில்தான் இந்தப் பொன்னில் கொடி செய்யும் முறை யாழ்ப்பாணத்தில் வந்திருக்க வேண்டும். பின் அது அந்தஸ்தைப் பறைசாற்றும் சின்னமாகக் காலப்போக்கில் மாறிவிட்டது. "மாப்பிள்ளை எத்தனை பவுணில் தாலிக்கொடி கட்டியவர்" என்று விசாரிக்கும் வழக்கம் இன்றும் எமது ஊர்களில் காணப்படுகின்றது. வசதியுள்ளவர்கள் 25 பவுணில் தாலிக்கொடி செய்விக்கும் வழக்கம் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் காணப்பட்டது. பின்னர் பலரும் 8 தொடக்கம் 10 பவுணுக்குள் கொடிபோடும் முறை சாதாரண நடைமுறை ஆகியது. ஆயினும் தமிழர் புலம்பெயர ஆரம்பித்த பின்னர் இந்த நடைமுறையில் மாற்றம் ஏற்பட ஆரம்பித்தது. சிறப்பாக பிரான்ஸில் உள்ள சிலர் தம்மிடம் உள்ள பணப்புழக்கத்தைப் பறைசாற்ற ஏற்கனவே 10 பவுணில் தாலிக் கொடி அணிந்திருந்த மனைவிமாருக்கு 60 பவுணில் கொடி செய்து போடுவதாக பாரீசிலிருந்து வெளிவரும் 'ஈழநாடு' பத்திரிகையில் ஒருமுறை படித்தேன். இவை அனைத்தும் தனிப்பட்டவர்களது விருப்பத்தைப் பொறுத்தது. திருமணத் தில் அணியப்படும் தாலி என்ற மங்களச் சின்னம் முக்கியமானதே தவிர அது எத்தனை பவுணில் கோர்க்கப்படுகின்றது என்பது முக்கியமானதல்ல.

## இருவர் பந்தத்தை வலுவாக்கும் எண்ணங்களை உண்டாக்கும் சக்தி கொண்டது

தாலி பற்றிப் பேசும்போது பலருக்குப் பலவிதமான வினாக்கள் நெஞ்சில் எழுகின்றன. எப்போது ,எவ்வாறு தாலி திருமணத்தைக் குறிக்க ஆரம்பித்தது? ஏன் இது பெண்களுக்கு மட்டும் அணிவிக்கப்படுகிறது? இது ஆணின் உயர்வையும், பெண் அவனுக்குக் கீழ்ப்பட்டவள் என்பதையும் காட்டுகிறதா? அல்லது அது இருவரிடையே உருவாகும் புதிய அல்லது அழியாத பந்தத்தை உருவகமாகக் குறிக்கிறதா? கல்வியும் தர்க்க ரீதியான சிந்தனைப் போக்கும் இன்று மரபு ரீதியாகக் கைக்கொள்ளப்படும் பல விஷயங்கள் பற்றிய கேள்விகளை எழுப்புவதுடன் பலரை இவற்றுக்குப் பாதகமான போக்கில் சிந்திக்கவும் வைக்கிறது. தாலி நிரந்தரமாக மணமான பெண்ணின் கழுத்தில் இருந்தாலும் சரி அல்லது அது வங்கியில் நகைப்பெட்டிக்குள் தூங்கினாலும் சரி அதனது முக்கியத்துவம் திருமணத்தில் குறைந்து போவதில்லை. இந்தியாவின் தென் பகுதியிலும், மேற்குப் பகுதியிலும் உருவாகிய தாலி கட்டும் வழக்கம் திருமணத்தில் பிரிக்க முடியாத முக்கிய அம்சமாகத் திகழ்வதுடன் அது மணமகளுக்கு ஒரு அந்தஸ்தையும், கௌரவத்தையும் வழங்குகிறது.

திருமணத்தின் போது மகளைத் தந்தை கன்னிகாதானம் செய்தபின் தாலியின் மேல் நீர் தெளித்து திருமணத்தை நடத்தும் புரோகிதர் பின்வரும் மந்திரத்தைக் கூறுகிறார். "இந்தப் பொன் உங்கள் செல்வத்தைப் பெருக்கட்டும். இந்த நீர் உங்கள் திருமண வாழ்வைத் தூய்மைப்படுத்தி, உங்கள் வளத்தை அதிகரிக்கட்டும். மணமகளான நீ உன்னை உன் கணவனுக்கு வழங்குவாயாக".

தாலி கட்டும் போது மணமகன் சார்பில் கூறப்படும் மந்திரம் இது. "நான் நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். ஓ சௌபாக்கியவதி, நான் இம்மங்கல நாணை உன் கழுத்தில் கட்டுகிறேன். நூறு வருடங்கள் நீ சுமங்கலியாக, நிறைவான வாழ்வு வாழ கடவுள் உனக்கு அருளட்டும்".

இன்றுள்ள முறையில் தாலி கட்டும் முறை எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது என்பது பற்றி நோக்குவது பயனுள்ளது. நிச்சயமாக பண்டைய இந்தியாவில் இவ் வழக்கம் இருக்கவில்லை. இந்தியாவின் ஏனைய பகுதிகளில் மணமக்களைப் பாதுகாக்கும் வண்ணம் கங்கணங்களைக் கட்டும் முறை காணப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் தாலி என்ற சொல் வழக்கு கால விருட்சத்தின், அதாவது பனையின் ஓலையால் தயாரிக்கப்பட்ட கழுத்தணியை அணியும் வழக்கத்துடன் ஆரம்பித்திருக்கலாம். பனையோலை உலர உலர நீண்ட காலம் அழியாது நிலைக்கும் என்பதால் அதை அணிந்து வந்துள்ளனர். சங்க இலக்கியங்களில் ஒரு ஆண், தான் கொன்ற புலியின் பல்லைத் தன் வீரத்தின் அடையாளமாகத் தன் காதலியின் கழுத்தில் அணியும் வழக்கம் காணப்பட்டதை அகநானூறு குறிப்பிடு கின்றது. அதனைச் சிலப்பதிகாரமும் கூறுகிறது. பாதுகாப்புக்காக அணியப்படும் ஐம்படைத் தாலியை 'தாலி' என்ற சொல்லால் குறிப்பிடும் வழக்கமும் இருந்ததை அகநானூறு, புறநானூறு, திணைமாலை நூற்றைம்பது ஆகியவற் றிலிருந்து அறியமுடிகிறது. சிலப்பதிகாரம் மங்கள அணி என்று ஒரு சொல்லைக் கூறுகிறது. ஆனால் அது தாலியைக் குறிப்பிடுகிறதா என்பதற்கு ஆதார மில்லை. கோவலன்- கண்ணகி திருமணத் தில் அக்கினியை வலம் வந்தமை கூறப் பட்டபோதும் அப்போது 'தாலி' அணிவித் தமை பற்றி எதுவும் சொல்லப்பட வில்லை. எட்டாம் நூற்றாண்டளவில் வாழ்ந்த ஆண்டாளும், நாச்சியார் திருமொழியில் வரும் கண்ணனுடனான திருமணம் பற்றிய கனவுப் பாடலில் கைத்தலம் பற்றுதல் - அதாவது இன்றும் பிராமண திருமணங்களில் முக்கிய அம்சமாக இருக்கும் பாணிக்கிரகணம் பற்றி மட்டுமே குறிப்பிடுகிறார்.

இன்று கைக்கொள்ளும் முறையில் தாலி அணியும் முறை குறித்து கி.பி 958 ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்றில் முதல் முதலாகக் குறிப்பிடப்படுகிறது. விஜயநகர ஆட்சியில் நாயக்க மன்னர்கள் தமிழ் நாட்டை ஆண்ட காலத்தில் (1336-1732) இம்முறை பரவலாகியது. இதனால் தமிழ் நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட தாகக் கருதப் படும் தாலி கட்டும் முறை 10 ஆம் நூற் றாண்டு வரையிலேயே ஆரம்பித்திருக்க வேண்டும்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது முதியோரின் ஆற்றல், அனுபவங்கள் இளைய தலைமுறையின் உயர்வுக்கு அத்திபாரம்

**இன்றைய இளைய சமுதாயம், சமுகத்தின் முதியோர் தரப்பின் அனுபவங்களையும், ஆற்றல்களையும் புறந்தள்ளிவிடாது,பயன்படுத்திக் கொள்ளவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, சமுகத்தில் முதியோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் 2000ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதிய 9ஆம் இலக்கச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது. அந்த வகையில் மே மாதம் 04ஆம் திகதியை முதியோர் தேசிய தினமாகப் பிரகடனப்படுத்தும் நடவடிக்கைகள் முதியோர் தேசிய பேரவையினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. செயலாற்றத் திறனுடைய முதுமை குறித்து இங்கு விபரிக்கிறார் முன்னாள் பத்திரிகையாளரான கட்டுரையாளர்.**

வாழ்க்கைப் பயணத்தில் முதுமை ஒரு படிநிலையாகும். வயதின் எண்ணிக்கையின் அடிப்படையில் முதுமையை வரையறை செய்வது கடினம். அறுபது வருடங்கள் எண்ணிக்கையை வைத்துக் கொண்டு 60 வயதுக்குமேல் முதுமையாகக் கொள்ளப்படுகின்றது. இது அவ்வளவு பொருத்தமானதல்ல. சிலர் குறைந்த வயதிலேயே முதுமைத் தோற்றத்தை அடைந்து விடுகின்றனர். இன்னும் சிலர் எழுபது; எண்பது ஆண்டுக் கால வாழ்விலும் இளமை குன்றாப் பொலிவுடனும், துடியாட்டத் துடனும் இருப்பதை அவதானிக்கலாம். எனவே ஆண்டுகளின் எண்ணிக்கை முதுமையைத் தீர்மானிக்கும் கருப்பொருளாக இருக்க முடியாது எனலாம்.

### தமிழ்ப் பாரம்பரியத்தில் முதுமை

தமிழ்ப் பாரம்பரியத்தில் வயது வளர்ச்சி அடிப்படையில் இருபாலாரையும் பல்வேறு பருவங்களுக்கு உரியவர்களாக வகைப்படுத்திப் பேசுவார்கள். இருபாலாரும் ஏழு பருவங்களைக் கடப்பதாகக் கூறப்படுகின்றது. பெண்களுக்கு ஏழாம் பருவமான பேரிளம் பெண்ணின் வயது 40 ற்கு மேலும், ஆண்களுக்கு ஏழாம் பருவமான முதுமகன் வயது 30ற்கு மேலும் என வரையறை செய்திருக்கிறார்கள். இதற்குமேல் வேறு பருவங்கள் பேசப்படவில்லை. இதனால் அக்காலத்தில் ஆயுள் எதிர்பார்ப்பு மிகக்குறைவாகவே இருந்திருக்கலாம் என மூதறிஞர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி தெரிவித்துள்ளார்.

### மனிதனின் வாழும் காலம்

மனிதன் வாழும்காலம் நீண்டு கொண்டு போகின்றது. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இது 30,32 ஆக இருந்திருக்கின்றது. 1996 இல் சராசரி வாழ்நாள் அதிகரிப்பு 69-74 வருடங்கள் ஆகக்காணப்பட்டது. முதுமைக்கு நாம் வழங்கும் வரையறை நாட்டுக்கு நாடு மாறுபடுகின்றது. அரச சேவையிலிருந்து கட்டாய ஓய்வு பெறும் காலமும் நாட்டுக்கு நாடு வேறுபாடானவை.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பெண்களில் பலர் கர்ப்பத்தின் சிக்கல் காரணமாகக் குறிப்பிட்ட சத விகிதம் இறந்துள்ளார்கள். இதனால் இவர்கள் வயோதிபம் வரை வாழவில்லை. இதனால் வயோதிபம் அடைந்தவர்களில் பெரும்பான்மையோர் ஆண்களாக இருந்திருக்கிறார்கள். பெண்களின் வாழ எதிர்பார்க்கும் காலம் குறைவாகவே இருந்துள்ளது. 1960 இன் பின் இந்நிலை தலைகீழாக மாறிவிட்டது. இதனால் தற்போது முதியவர்களில் பெரும்பான்மையானோர் பெண்களாகவே உள்ளனர்.

### ஆரோக்கியமான முதுமையும் ஐ.நா. பிரகடனமும்

இந்த எண்ணக்கருக்களின் அடிப்படையில் ஆரோக்கியமான முதுமை பற்றிய சிந்தனைகள் எழுந்தன. முதுமை மருத்துவம், முதியோர் உள நோயியல் துறைகளின் வளர்ச்சியும், சமூகவியல் பற்றிய பார்வையும் வலுப்பெற்றன. 1999ம் ஆண்டின் தொனிப்பொருளாக செயலாற்றத்திறனுடைய முதுமை எய்தல் என்பதனை உலக சுகாதார நிறுவனம் (WHO) பிரகடனப்படுத்தியது. இதுவரை காலமும் குழந்தைப் பருவத்திற்கு வழங்கப்பட்டு வந்த முக்கியத்துவம் தற்போது முதுமைக்கும் தரப்படுகிறது.

உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) 1996 இல் முதுமைபற்றிய பிரகடனத்தில்," ஆரோக்கியமான முதியவர்கள் தமது குடும்பங்களுக்கும், சமூகங்களுக்கும், பொருளாதாரத்திற்கும் ஆதாரம் ஆவர். அவர்கள் எவ்வளவு முயற்சி உள்ளவர்களாக இருக்கிறார்களோ அவ்வளவுக்கு அவர்கள் சமூகத்திற்கு உதவமுடியும். ஆகவேநாடுகள் ஆரோக்கியமான முதுமையெய்தலை தமது நாட்டின்முன்னேற்றத்திட்டத்தில் முக்கியமான ஒன்றாகக் கருதவேண்டும். முதுமை அடையும் மக்களை பிரச்சினையாகக் கருதாமல் பிரச்சினைகளுக்குத் தீர்வு தரக்கூடியவர்களாக எண்ணவேண்டும். பெரும்பாலும் அவர்களுக்கு எது தேவை என்பதைப் பற்றியே பேசுகிறோம். அவ்வாறல்லாது, முதன்மையாக அவர்களால் எமக்குத் தரக்கூடிய ஆதாயம்பற்றியும் பார்க்கவேண்டும். தனது முதியோருக்கு ஒரு சமூகம் அளிக்கும் அந்தஸ்தையும், ஆதரவையும் வைத்துத்தான் அந்தச் சமூகத்தின் நாகரிக மேன்மை மதிக்கப்படும்" என்றவாறு வெளிப்படுத்தியுள்ளது.

### கூட்டுக்குடும்பம்

சுகம் என்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் தரும் வரைவிலக்கணம் பரந்த பன்முகப்பார்வையுடையது. சுகம் எனப்படுவது உடல், உள, சமூக, ஆன்மீக நன் நிலையை உள்ளடக்கியது. வெறுமனே நோயற்ற, ஊனமற்ற நிலையல்ல. கூட்டுக்குடும்ப முறைமை பேணப்பட்ட காலத்தில் முதியவர்களின் இடம் முதன்மையாகக்கொள்ளப்பட்டது. காலனித்துவ காலத்தில் இந்நிலைமை சிதைவடையத் தொடங்கியதும் முதுமை என்பது பிரச்சினையாக ஆரம்பித்தது. நம்மிடையே முதியோர் பிரச்சினை இருக்கிறது என்பதனைச் சொல்லித்தான் தெரியவேண்டுமென்பதில்லை. இதனை ஏற்றுக் கொண்டு அதற்கேற்ற வழிவகைகளைக் காண முயலவேண்டும்.

கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறைமை இல்லாது போனதால் அனைவரும் சில பாதிப்புக்குள்ளானாலும் பெரும் தாக்கத்திற்கு ஆளானவர்கள் சிறுபிள்ளைகளும், முதியோருமே. சிறுபிள்ளைகளைப் பொறுத்தவரை அவர்களைப் பராமரிக்க, உதவிகள் வழங்க பெற்றோர், பெரியோர், அரச சுகாதார திணைக்களம், அரச சார்பற்ற சர்வதேச நிறுவனங்கள் இருக்கின்றன. ஆனால் முதியோரைப் பொறுத்தவரை நிலைமை கவலைக்கிடமாகவே உள்ளது.

இன்றைய நிலையில் இலங்கையில் போர்த் தாக்கங்கள், இடப்பெயர்வுகள் இப்பிரச்சினையைமேலும் சிக்கலுக்கு உள்ளாக்கி இருக்கின்றது. இது தனியே ஆய்வுக்குள்ளாக்கப்பட வேண்டியது.

### 'இலங்கையில்'......

தெற்காசியாவிலேயே இலங்கை தான் முதுமை வளர்ச்சியில் துரிதமுடையதாக விளங்குகின்றது. 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் தொகை இரண்டு மில்லியன் எனவும், இது முழுச் சனத்தொகையில் 10 வீதமும், வாக்களிப்பு மக்கள் தொகையில் 20 வீதமும் ஆகுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. எமது பண்பாட்டில் முதுமைக்கு ஓர் அந்தஸ்து உண்டு. இனிவரும் காலங்களிலும் அந்த மரியாதையும், மதிப்பும் பேணப்பட வேண்டும். தொழில், கல்வி, அந்தஸ்துகள் மட்டுமன்றி பட்டறிவை வழங்கக்கூடிய முதுமையும் சமுதாய மேம்பாட்டிற்கான செயற்பாட்டில் கூடிய பங்களிப்பை நல்குவது இன்றியமையாததாகும்.

முதியோரில் சகல திறத்தாரது அனுபவ ஆற்றலாலும், ஆலோசனை ஆசீர்வாதத்தாலும் இளைஞர் சமூகம், ஆத்மீக பக்குவமும்தமது செயற்பாடுகளில் தவறுகளைத் தவிர்க்கக்கூடிய விகிதம் கணிசமாக அதிகரித்து இருக்குமாகையால் அது அவர்களின் அரசியல் பல மேம்பாட்டையும், தேர்தல்களில் அவர்களின் சிறுபான்மை வாக்குகள் முடிவுகளை நிர்ணயிக்கும் சக்தியையும் பெறும்.

### தனிமையும் ஏகாந்தமும்

முதுமை, காலமாற்றத்திற்கும், மாற்றமடையும் சமுதாயத்திற்கு ஈடுகொடுக்கக்கூடியவகையில், அறிவைப் புதுப்பித்தல் கிடைக்கக்கூடிய தனிமையையும், ஏகாந்தத்தையும் பயனுள்ள வாய்ப்புகளாக எதிர்கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். முதுமையால் ஒருவரது பயனுள்ள வாழ்ககை முடிவுக்கு வந்து விட்டதாக தப்புக்கணக்குப் போடக் கூடாது. தாம் ஏதோ ஒரு வழியில் பிரபல்யம் மிக்கவராக இருந்தார்கள் என்பதை என்றும் மனதில் கொள்ள வேண்டும். ஆகவே இந்த முடிவுறாத பணியைத்தொடர்ந் தும்செய்ய முன்வர வேண்டும். இதனால் புதிய நண்பர்களைச் சந்திக்கலாம், சமூக அங்கீகாரம் கிடைக்கும், பொதுச் சேவையில் பங்குதாரராகலாம், மனம் சுறுசுறுப்புடன் இயங்கும், அறிவு புதுப்பிக்கப்படும், நோயற்ற வாழ்வு கிட்டும், வாழ்க்கை அர்த்தமுள்ளதாகும்.

மேலைநாடுகளில் முதியோர் அருஞ்செல்வமாகக்கருதப்பட்டு அவர்களுக்குரிய அந்தஸ்தும், கௌரவமும் வழங்கப்பட்டு மூத்தபிரஜைகளாகக் கணிக்கப்பெற்று பராமரிக்கப்படுவதோடு, அவர்களின் பட்டறிவு சமூகத்திற்குக் கிடைக்க வழிவகைகளும் காணப்பட்டு வருகின்றன. இதனால் சமூகம் பயன்பெற்று வருகிறது. இந்நாடுகளில்கூட முதுமையுடன் தொடர்புடைய உளவியல் பிரச்சினைகளிலே அறளைபெயர்தல், முதியோர்களின் எண்ணிக்கை அதிகரிப்போடு கூடிக் கொண்டு போவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

### முதியோர் வைத்திய விடுதிகள்

வாழ்க்கைப் பருவங்களில் முதுமைப் பருவம், குழந்தைப்பருவம் போன்றதெனக் கூறப்படுகிறது. இதனால்தானோ என்னவோ உலக மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கென தனியான 'வார்ட்டு'கள் காணப்படுவது போன்று மேல் நாடுகளில் முதியவர்களுக்கும் பிரத்தியேக 'வார்ட்டு'கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதனை ஆங்கிலத்தில் GERIATRIC WARDS என அழைக்கிறார்கள். இந்த நிலைமையோடு ஒப்பிடுகையில் நாம் இன்னமும் மெத்த வளரும் மேற்கத்திய வளர்ச்சியை எட்டிப் பிடிக்க பல ஆண்டுகள் செல்லலாம்

### சட்டமூலமும் கையேடும்

முதியோர் சம்பந்தப்பட்ட தேசியக் கொள்கையின் அடிப்படையில் இலங்கையில் இல. 09 சட்டமூலம் 2000ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இது முதியவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் ஏற்பாடுகளை உள்ளடக்கியது.

முதியோரையும் அவர்களுடைய நாளாந்த வாழ்க்கையையும் பாதிக்கும் எண்ணிறந்த பிரச்சினைகள் வளர்ந்த வண்ணமாக இருப்பதுடன், அவை இன்று பாரதூரமானதொரு சமூகப் பிரச்சினையாகவும் உருவெடுத்துள்ளன. 60 வயதை எட்டிவிட்ட, தம்மில் தாமே சுதந்திரமாகத் தங்கி வாழும் முதிய தலைமுறையினருக்காக ஒரு கைநூல் முதியோருக்கான தேசிய செயலகத்தால் 2001 இல் வெளியிடப் பட்டுள்ளது.

### கையேடு

சமூகத்திற்கு அருஞ்செல்வமாகவுள்ள முதியவர்கள் முதுமையை மகிழ்வுடன் கழிப்பதற்கான ஆலோசனைகள், முதியவர்கள் தங்களுக்கே பாரமாகிவிடாமல் இருக்கவும், சமூகத்திற்கும், வீட்டிற்கும் பாரமாகிவிடாமல் இருக்கவும், முதுமையில் வரக்கூடிய நோய்களும் அவற்றைத் தவிர்த்துக் கொள்ளுதலும், கட்டுப்படுத்தலும் என்பவற்றுக்கான வழிகாட்டல்களும், உடல், உள நலத்தைப் பேணும் வழிமுறைகளும், வீட்டு விபத்துக்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுதல், தேவையான சட்டஆலோசனைகள், விதவைகள், அநாதைப் பிள்ளைகள், ஓய்வூதியம் போன்ற இன்னோரன்ன விடயங்கள் இந்நூலில் எடுத்தாளப் பட்டுள்ளன. இது முதியோர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ள கையேடு என்னைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

***''தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்''***

என்பது வள்ளுவர் வாக்கு. தக்காராக வாழ்ந்து வந்தவர்கள் முதுமை அடைந்த பின்னர் அதில் ஈடுபாடு காட்டத் தவறுவதன் மூலம் இடையில் ஒரு தொய்வு ஏற்பட இடமளிக்காது தொடர்ந்து செயற்படவேண்டியது அவசியம். ***



**அ.க.த. கிருஷ்ணராசா,ஜே.பி**
*தலைவர்,வலி.கிழக்கு முதியோர் பேரவை.*

---

## ஒருவனின் மனைவி எனப் பெண்ணை......

*(07 ஆம் பக்கத் தொடர்ச்சி....)*

இன்று தென்னிந்தியத் தமிழ் சைவ, வைஷ்ணவ திருமணங்களில் பொற்தாலி அணிவிக்கப்படுகிறது. இந்தத் தாலியில் அவரவர் சமயப் பண்பாட்டுச் சின்னங்கள் பொறிக்கப்படுகிறது. 108 பருத்திநூல் இழைகளால் பின்னப்பட்டு மஞ்சள் பசையில் தோய்க்கப்பட்ட கையிற்றில் இத் தாலி கோர்க்கப்பட்டு மணமகனால் மணமகளின் கழுத்தில் கட்டப்படும். இதனைக் கட்டும்போது மணமகன் முதல் முடிச்சைப் போட, அவரது சகோதரிகள் மிகுதி இரண்டு முடிச்சுக்களையும் போடுவார்கள். முதலாவது முடிச்சு இத்திருமணத்தைச் சம்பிரதாயபூர்வமாக நிறைவு செய்து தம்பதிகளைத் திருமணமானவர்கள் என்று ஏற்றுக்கொள்ள வைக்கிறது. இரண்டாவது முடிச்சு, மணமகளை மணமகனது குடும்பத்திற்கும், அவர்களது மரபிற்கும் வரவேற்கிறது. மூன்றாவது முடிச்சு, இப்பெண் இப்போது எல்லோரது முன்னிலையிலும் திருமணமாகி விட்டவள் என்பதைச் சமூகத்திற்கு அறிவிக்கிறது.

தெலுங்குத் திருமணங்களில் மணமகனுக்கும், மணமகளுக்கும் கைகளில் மஞ்சள் கங்கணங்கள் கட்டப்பட்ட பின் அதுவரை அவர்கள் ஒருவரையொருவர் பார்க்காது தடுப்பாகப் போடப்பட்டிருந்த வெள்ளைத் துணி நீக்கப்படும். பின்னர் மணமகன் Sotrum எனப்படும் தாலியை மணமகளுக்குக் கட்டுவான். கேரளாவில் தாலி சிறிய இலை வடிவில் அமைந்துள்ளது. "தாலி கெட்டு" என்று கூறப்படும் சடங்கில் இது மஞ்சள் கயிற்றில் கோர்க்கப்பட்டு மணமகனால் மணமகளுக்குக் கட்டப்படும். கர்நாடகத்தில் தாலி 'பதக்'– அதாவது பதக்கம் எனப்படுகிறது. மகாராஷ்டிரத்தில் கறுப்புமணி மாலையில் இணைக்கப்பட்ட தங்கத் தாலியை மணமகன் மணமகளின் கழுத்தில் கட்டுகிறான். இந்தியாவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தாலியின் இடத்தை வேறு ஆபரணங்கள் அல்லது குங்குமம் வகிக்கின்றன. வங்காளம், ஒரிஸ்ஸா, அஸ்ஸாம் ஆகிய இடங்களில் திருமணமான பெண்கள் இரும்புக் காப்புகளை அணிகின்றனர். அத்துடன் பவளமும், சிற்பியும் கலந்த ஆபரணம் தாலிக்குப் பதிலாக அணியப்படுகிறது. ராஜஸ்தானில் திருமணமான பெண்கள் பச்சை நிறக்காப்பு அணிகின்றனர்.

தாலி என்பதை சமூக, பண்பாட்டு, சமய வெளிப்பாடாகவே காணுதல் வேண்டும். இந்தியாவின் தென் பகுதியில் மஞ்சள் மங்களச் சின்னமாகக் கருதப்பட, வடக்கில் கறுப்பு மங்களம் நிறைந்த நிறமாகக் கருதப்படுகிறது. அத்துடன் கறுப்பு மணிகள் தீமைகளை அகற்றும் என்று அங்கு எண்ணப்படுகிறது. ஆரம்பத்தில் நல் லெண்ண இணைப்பைக் காட்டுவதற்காக மணமகனும், மணமகளும் ஒருவருக்கொருவர் மஞ்சள் கயிற்றைக் கட்டிக்கொண்டனர். பின்னரே மணமகன் பெண்ணின் தந்தையிடமிருந்து பெண்ணைப் பொறுப்பெடுப்பதன் அடையாளமாக மணமகளின் கழுத்தில் தாலி கட்டும் முறை வந்தது என்று கூறப்படுகிறது. இந்தத் தாலி, கணவன் மனைவியிடையே உருவாகும் ஆழமான அன்பையும், விருப்பையும் உருவகமாகக் குறிப்பதுடன் கணவனின் நீண்ட வாழ்வையும் குறித்து நிற்கிறது.

புலம் பெயர்ந்த பின்னர் நம் தமிழ்மக்கள் எத்தனையோ வகைகளில் மாறிவிட்ட போதும் திருமணத்தின் போது மணப் பெண் சேலை அணிவதும் மாப்பிள்ளை அவளுக்குத் தாலி அணிவிப்பதும் இன்னும் மாறவில்லை. மணமகள் தொடர்ந்து தாலியை அணிந்திருக்கிறாளோ இல்லையோ, திருமணத்தின் போது தாலி கட்டும் மரபு மாறவில்லை. இனியும் மாறும் என்று நினைக்க முடியவில்லை. தாலி என்பது சில பெண்கள் நினைப்பது போல அடிமைச் சின்னமல்ல. அது கணவன், மனைவியரிடையே அன்பையும், பிணைப்பையும் ஏற்படுத்த உதவும் ஒரு மங்களச் சின்னமாகும். ***

*(நன்றி:- 'தமிழன்')*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூலிகை வளர்க்க தனித்துவமான நிலம்தான் தேவை என்பதல்ல; பொது இடங்களிலும் நட்டு பயன்கள் பல பெறலாம்

மூலிகைத் தோட்டங்கள் எப்படி இருக்கும்? அவற்றை எப்படி அமைப்பது? எந்தெந்த மூலிகைகளை வளர்க்கலாம்? எந்த இடத்தில் இம் மாதிரியான தோட்டங்களை அமைக்கலாம்? இவற்றை வளர்ப்பதற்கு ஏதேனும் பயிர்ச்செய்கைத் தொழில் நுட்பம் தேவையா?

விவசாயம் தெரிந்தவர், படித்தவர் மட்டுமா வளர்க்கலாம்? அல்லது ஆயுள்வேதம், சித்த மருத்துவப் படிப்பு தேவையா? இத்தனை வினாக்களையும் இக் கட்டுரையைத் தொடர்ந்து வாசிப்பவர்கள் விருப்புடன் கேட்டுக் கொள்வதில் இருந்து மூலிகை பற்றிய விழிப்புணர்வும் சுதேச மருத்துவத்தின் முக்கியத்துவமும் எம்மவர் மத்தியில் பெருகி வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

**ப.நோ. கூ. சங்கங்களின் பங்களிப்பு**

இழந்த மரங்களுக்குப் பதிலாக மரநடுகையில் ப.நோ. கூ. சங்கங்கள் மும்முரமாக ஈடுபட்டிருப்பது மனித நேயத்தை மக்கள் மயமான நிறுவனங்கள் கட்டியெழுப்பும் நல்ல முயற்சியாகும். மரத்திற்கு இருக்கும் மனித நேயத்தை மனிதருள் முழுமையாகக் கட்டியெழுப்பும் நல்லதொரு சந்தர்ப்பம் இது.

இதேபோல புலோலி ப.நோ.கூ. சங்கத்தின் முக்கிய பிரிவான கூட்டுறவு கிராமிய வங்கியின் முகாமையாளர் புலோலி பிரதேசத்தில் ''சிறுசேதன விவசாய அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்'' என்ற அமைப்பினை உருவாக்கி, அதற்கென ஒரு மாதிரிப் பண்ணையையும் மூலிகைப் பயிர்ச்செய்கையையும் உள்வாங்கி அமைப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதையும் அறிய முடிகின்றது.

இதுபோலப் பலர் மூலிகைகளை



வளர்ப்பதில் நாட்டங் கொள்வதனை அறியும்போது குறிப்பாக ப.நோ.கூ. சங்கங்களின் பலநோக்கங்களில் இவ்வாறான ஒரு நோக்கத்தையும் மக்கள் மயப்பட்ட, விரிந்த, மனிதாபிமான செயலூக்கங்களில் மரம் நடுவதிலிருந்து மூலிகைகளை வளர்ப்பதிலும் அவர்கள் காட்டும் ஆர்வத்தினை அறியும்போது ''உதயனின்'' முயற்சி முழுமையாகக் கைகூடியிருப்பதாகவே கருத முடிகிறது. பட்டி தொட்டியெங்கும் எங்களூர் மருத்துவத்தையும் மூலிகையின் பயன்பாட்டையும் மேம்படுத்தி விடவேண்டும் என்ற ஒரே நோக்கில் ''உதயனின்'' விருப்பிற்கேற்ப இக்கட்டுரைத்தொடர் வடிவம் பெற்றது. இதன்மூலமாக எங்களூர் மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள், சித்தமருத்துவர்கள், ஆயுள்வேத வைத்தியர்கள்; பரியாரிமார், கல்வியியலாளர்கள், எம்மினிய மக்கள், நிறுவனங்கள் என அனைவரும் ஒன்றிணைவதற்குரிய வாய்ப்புக் கிட்டியிருக்கிறது.

ஊடகங்களில், குறிப்பாக யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகளின் முழுமையான பொறுப்புணர்வு, கடப்பாடு சிறப்புற அமைந்ததால் இவையனைத்தும் நடந்தேறியிருக்கின்றன. எங்கும் எவரும் ''மூலிகையைப்'' பற்றியே பேசுவதையும், சரி, பிழை என விவாதிப்பதையும் காணமுடிகின்றது. எதற்கும் அசையாதவர்களை உசுப்பியும் விட்டிருக்கின்றது.

**மூலிகையும் எங்களூர் மருத்துவ மாநாடும்**

லங்கா சித்த ஆயுர்வேத கல்லூரியின் முயற்சியினால் இம் மாதத்தில் மூலிகைகளும் எங்களூர் மருத்துவத்தின் சிறப்பும் பற்றியதொரு மாநாடு நடைபெறுவதற்கான ஆரம்பக் கட்டச் செயற்பாடுகள் நடைபெறு வதனை அறிய முடிகின்றது. அதில் அரியபெரிய மூலிகைகளைக் கண் காட்சி மூலமாகக் காண்பிக்கவும் முனைகின்றார்கள். ஊரவர், எங்களூர்ப் பரம்பரை வைத்தியர், பரியாரிமார், ஆயுள்வேத வைத்தியர், சித்த வைத்தியர், மூலிகை நலன் விரும்பிகள், நாங்கள், எம்மினிய மக்கள் என அனைவரும் திரண்டு இணைந்து நடத்தத் திட்டமிட்டிருக்கும் இம் மாநாடு நல்லதொரு கைங்கரியம்.

நானா, நீயா? என்று பிரம்மா விஷ்ணு அடிமுடி தேடிய கதை போலல்லாது, எமது சமூகத்தின் பொறுப்புணர்ந்து ஒவ்வொருவரும் தங்களாலானவற்றைச் செய்வது இதுபோன்றதொரு நற்காரியத்தைச் செயலுருப்பெற வழி வகுக்கும்.

இந்நிலையில் ''மூலிகைத் தோட்டங்கள்'' பற்றிய மேலதிகமான தகவல்களை இங்கு தருவது பொருத்தமானதாக அமையும்.

**மாதிரி மூலிகைத் தோட்டங்கள் - அனைத்தும் யாழ்ப்பாணத்தில்**

**01. திருநெல்வேலியில்**

திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தின் சிறு பகுதி நிலத்தில் விவசாய விரிவாக்கத் திணைக்களத்தின் முழுமையான பங்களிப்புடன் குறிப்பாக பிரதிப் பணிப்பாளர், விரிவாக்க உத்தியோகத்தர்கள், பண்ணை முகாமையாளர் மற்றும் ஊழியர்களின் உழைப்புடன், மாகாண சுதேச வைத்தியத்துறை, சித்தமருத்துவத்துறை இவற்றுடன் விவசாயபீடமும் இணைந்து உருவாக்கியுள்ள மூலிகை வங்கி முதலிடம் வகிக்கின்றது.

**02. கைதடியில் சித்தமருத்துவத் துறையில்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த வைத்தியத்துறையில் அத்துறையின் இருபெரும் தூண்களாகவுள்ள பேராசிரியர் வைத்தியக் கலாநிதி பவானி மற்றும் வைத்தியக் கலாநிதி திருமதி பவானி ஆகியோரின் வழிகாட்டலில் ஆரம்பித்து குணபாடப்பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி விவியன் சத்தியசீலனுடன் ஏனைய விரிவுரையாளர்கள், துறைத் தலைவர், மாணவர்கள் இணைந்து உருவாக்கியிருக்கிறார்கள்.

**03. கைதடியில் ஆயுள்வேத வைத்தியசாலையில்**

மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்திற்குட்பட்ட கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் கைதடி, மட்டுவில் மக்களுடன் வைத்தியசாலை ஊழியர்களிணைந்து உருவாக்கியுள்ள மூலிகைத் தோட்டம் பல மூலிகைகளை உள்வாங்கிச் சிறந்து விளங்குகிறது. வைத்தியசாலைக்குத் தேவையான மூலிகைகளை உற்பத்தி செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும்.

**04.மாகாண சுதேச வைத்தியத் துறையின் பிரிவுக்குட்பட்ட ஆயுள் வேத வைத்திய சாலைகளில்.....**

மாகாண சுதேச வைத்தியத்துறையின் நிர்வாகத்துக்குட்பட்ட 40 ஆயுள்வேத வைத்தியசாலைகளில் மாதிரி மூலிகைத் தோட்டங்கள் அமைக்கப் பட்டுள்ளன. குறிப்பாக கோண்டாவில் ஆயுள்வேத வைத்தியசாலையில் மூலிகைத்தோட்டம் சிறப்பாக உருப்பெற்று வருகிறது.

இவை தவிர, சில பாடசாலைகளிலும் மாதிரி மூலிகைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் சித்த மருத்துவத் துறையின் பங்களிப்பு அளப்பரியது.

**05. அராலியில் உருவாகும் மூலிகைத் தோட்டம்**

அராலிப்பகுதியில் மாகாண சுதேச வைத்தியத்துறையினால் மூலிகைத் தோட்டம், மூலிகை உற்பத்தி மற்றும் வைத்தியசாலை என்பன முனைப்புடன் கட்டியெழுப்பப்படுகின்றன. இதில் அவ்வூர் மக்களின் பங்களிப்புண்டு. வெள்ளறுகு, நிலப்பனை போன்ற மூலிகைகள் தாமாகவே வளர்கின்ற இப் பூமியில் மூலிகையை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுற்றுமதில், கிணறு, தண்ணீர்த்தாங்கி, வைத்தியசாலை எனப் புதிதாகக் கட்டப்பட்டு அந்நிலப்பரப்பு மூலிகைகள் நடுகை செய்யத் தயார்படுத்தப்படுகின்றது. மாகாண சுதேச வைத்தியத்துறையின் முழுமையான செயற்றிட்டமாக இது நடைபெறுகின்றது. இவ்வைத்திய சாலையின் பயனை இவ்வூர் மக்கள் பெறும் காலம் வெகுதூரத்திலில்லை.

எமது சமூகத்தின் உறுப்பினராக இருக்கும் நாமனைவரும் ஒன்றுபட்டு அவரவர் தம்மாலியன்ற, தங்களுடன் வைத்துள்ள செய்திகளை இவ்வாறான ஊடகங்களின் உதவியுடன் ''மக்களின் சிறந்த சுகாதாரமான வாழ்வு'' எனும் கருப்பொருளை மையமாக வைத்து ஆற்றும், ஆற்ற வேண்டிய பொறுப்புள்ள பணியாகவே இதனைக் கருதுகிறேன்.

**மூலிகைத் தோட்டம்**

மூலிகைத் தோட்டம் இப்படித்தான் அமைய வேண்டும் என்ற ஒரு வரையறை இல்லை. அவரவர் விருப்பத்துக் கேற்ப, தேவைக்கேற்ப வடிவமைத்துக் கொள்ளலாம். அடிப்படையில் மூலிகைகள் அனைத்தும் தாவரங்களே! இவற்றைக் கிடைக்கக் கூடிய நிலத்திற்கேற்ப அதிலுள்ள வளத்திற்கேற்ப வடிவமைக்கலாம்.

பொது இடங்களில் கிடைக்கும் சிறிய நிலப்பரப்பில் கூட இதனை உருவாக்கலாம். பாடசாலைகளில் மூலிகைத்தோட்டங்களை மாணவர்களைக் கொண்டு உருவாக்கும் போது கல்விசார் தேவைக்குரியதாக இருப்பதுடன் மூலிகை பற்றிய நல்ல விழிப்புணர்வையும் மாணவனின் குடும்பத்திற்கு ஏற்படுத்தி விடலாம். வணக்கத்தலங்களில் குறிப்பாக இந்து ஆலயங்களில் மூலிகைத் தோட்டங்கள் அமைவது சிறப்புக்குரியது. வைத்தியத் தேவை, விழிப்புணர்வு என்பவற்றுக்கு மேலாக ஆலயங்களில் நடைபெறும் ஓமம் வளர்ப்பு மற்றும் ஏனைய கிரிகைகளுக்கு அவசியம் தேவையான மூலிகைகளைத் தெரிந்தெடுத்து ஆலய வளவினுள் வளர்க்கலாம். ஆன்மீகத்துடன் இணைந்த மருத்துவமாதலினால் ஆலயங்களில் இவை வளர்க்கப்படுவது சாலச் சிறந்தது.

இவை தவிர அலுவலகங்களில் இருக்கின்ற வசதிக்கேற்பவும் வீடுகளிலும் வளர்க்கலாம். வயல் நிலங்களில் சிறிய அளவில் பயிர்ச்செய்கையாகவும் செய்யலாம். குறிப்பாக, கொழும்பில் இருந்து விமானத்தில் பறந்து வரும் இஞ்சியை இங்கே உற்பத்தி செய்வதன் மூலம் அதன் அதீத விலையைக் குறைக்கலாம். இதனால் எங்களூர் விவசாயிகளுக்கும் வருவாய் பெருக வழிசமைக்கலாம்.

மூலிகைத் தோட்டம் அமைக்கும் போது படரிகள், குறிப்பாக நிலத்துடன் படர்வனவற்றை, ஆழமான வேர்கள் இல்லாதனவற்றை மரங்களுக்கு கீழே மண்ணணைத்து வளர்க்கலாம். வல்லாரையை இவ்வாறாக வளர்க்க முடியும். ஆழமான மண் தேவையில்லை. வல்லாரை, பொன்னாங்காணி பசளி, புதினா போன்றவற்றை ஈரம் உள்ள எந்த இடத்திலும் இலகுவில் நடலாம். தவசி முருங்கை, அகத்தி, கறி முருங்கை போன்றவை இலைக் கறி வகைகளாயினும் மரங்களாதலினால் உயர் வேலிகளில் மரங்களாக்கி விடலாம். இந்த உயர் வேலிகளில் பாவட்டை, ஆடாதோடை, பிரண்டை போன்றவற்றுடன் கொடிகளான காக்கணான் போன்றவற்றையும் வளர்க்கலாம்.

(வளரும்...)



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## மக்கள் ஆர்வம் அதிகரித்து வருவது துறைசார் வளர்ச்சிக்கு நற்சகுனமே

## இயற்கை மூலிகைகள் சித்த வைத்தியத்தின் உயிர்நாடி



**பகுதி - 08**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 12 உலகக் கிண்ணப் போட்டி

2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை ஒரு அரையிறுதி உட்பட 12 போட்டிகளை நடத்தவுள்ளது. அத்துடன் உலகக் கிண்ண இறுதிப் போட்டி உட்பட பெரும்பாலான ஆட்டங்கள் இந்தியாவில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ணப் போட்டியை நடத்துவதற்கான ஏற்பாட்டு குழு மும்பையில் கூடியபோது இந்த முடிவு எடுக்கப்பட்டது. இதில் சர்வதேச கிரிக்கெட் சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஹாரூன் லோர்காட்டும் கலந்துகொண்டார்.

2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியை நடத்தும் நாடுகளில் இருந்து பாகிஸ்தான் நீக்கப்பட்ட நிலையில் உலகக் கிண்ணத் தலைமை செயலகம் லாகூரில் இருந்து மும்பைக்கு மாற்றப்பட்டுள்ளது.

அத்துடன் உலகக் கிண்ணப் போட்டிகளின் நிர்வாக இயக்குனராக இந்தியக் கிரிக்கெட் சபையின் நிர்வாக அதிகாரியாக இருந்த பாகிஸ்தானின் பன்கர் சல்மான் பட் நீக்கப்பட்டுப் புதிய இயக்குனராக ரத்னகார் ஷெட்டி நியமிக்கப்பட்டார்.

உலகக் கிண்ணத்தில் நடைபெறவுள்ள 49 போட்டிகளில் 29 ஆட்டங்கள் இந்தியாவில் 8 மைதானங்களில் நடத்தப்படவுள்ளன. இதில் ஒரு காலிறுதி, ஒரு அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டி ஆகியன இந்தியாவில் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

அதேபோன்று இலங்கை மூன்று மைதானங்களில் 12 உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இதில் ஒரு காலிறுதி மற்றும் ஒரு அரையிறுதிப் போட்டிகள் உள்ளடங்கும். இது தவிர, 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி 18 ஆம் திகதி நடைபெறவுள்ள உலகக் கிண்ண போட்டியின் ஆரம்ப விழா பங்களாதேஷில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து பங்களாதேஷிக்கு இரண்டு காலிறுதிப்போட்டிகள் உட்பட இரண்டு மைதானங்களில் 8 உலகக் கிண்ண போட்டிகளை நடத்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. உலகக் கிண்ணத்தின் முதல் இரண்டு ஆட்டங்களும் பங்களாதேஷில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. முன்னதாகப் பாகிஸ்தானும் இந்த உலகக் கிண்ணப் போட்டிகளைச் சேர்ந்து நடத்தும் நாடுகள் பட்டியலில் இருந்ததால் அங்கு 14 போட்டிகள் நடைபெறுவதாய் இருந்தது. தற்போது அந்தப் போட்டிகள் மூன்று நாடுகளிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை போட்டிளை நடத்துவதிலிருந்து பாகிஸ்தான் ஓரங்கட்டப்பட்டுள்ளதால் அந்த அணி பங்கேற்க மறுக்குமா என்ற கேள்விக்குப் பதிலளித்த ஐ.சி.சி. தலைமை நிர்வாகி லோர்கட், அந்த பிரச்சினை வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்று பதிலளித்தார்.

****





## அதிருப்தியுடன் நாடு திரும்பினார் ஷாருக்கான்

ஐ.பி.எல். இருபது20 கிரிக்கெட் தொடரில் கொல்கத்தா 'நைட் ரைடர்ஸ்' அணியின் உரிமையாளரான நடிகர் ஷாருக்கான் தங்களது அணி மீண்டும் வெற்றிப் பாதைக்குத் திரும்பினால் தான் தென்னாபிரிக்காவிற்கு தான் மீண்டும் வருவதாகக் கூறி இந்தியா திரும்பினார்.

மும்பை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய ஷாருக்கான், ''அணி வீரர்களை நினைத்தால் வருத்தமாக இருக்கிறது. இந்த அணியில் நிறையத் திறமையான வீரர்கள் உள்ளனர். இன்னமும் கடின உழைப்பு தேவைப் படுகிறது'' என்றார். தேர்தலில் வாக்களிப்பதற்காக வந்துள்ள ஷாருக்கான் தனது அணி மீண்டும் வெற்றிப் பாதைக்குத் திரும்பினால் மட்டுமே தென்னாபிரிக்கா செல்வேன் என்று கூறியுள்ளார்.

தற்போதைய அணித் தலைவர் பரண்டன் மெக்கலம் திறமையான தலைவர் தான் என்று கூறிய ஷாருக்கான் அவர் ஓட்டம் குவிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றார். மேலும் சௌரவ் கங்குலியையும் பெயருக்குப் பாராட்டிய ஷாருக்கான், ஓர் அணியாகத் திரண்டு விளையாடினால் மட்டுமே வெற்றி சாத்தியம் என்றார்.

தனது புதிய ஹிந்திப் படங்களை விற்பதற்காக அனைத்து வித விற்பனை உத்திகளையும் கடைப்பிடித்து வருபவர் ஷாருக்கான். இதன்படி அவர் தனது அணியையும் இந்தத் திறமையால் விளம்பரப் படுத்தினார். இருப்பனும் தோல்வி மேல் தோல்விதான் எஞ்சியுள்ளது.





## ஐ.சி.சி. வீரர்களுக்குப் பொது மன்னிப்பு

அர்ச்சைக்குரிய ஐ.சி.எல். அமைப்பில் இணைந்துள்ள இந்திய வீரர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்க இந்திய கிரிக்கெட் சபை காலக்கெடு விதித்துள்ளது. இதன்படி ஐ.சி. எல். அமைப்பில் இணைந்துள்ள இந்திய வீரர்கள் வரும் மே 31 ஆம் திகதிக்குள் அந்த அமைப்பில் இருந்து விலகிக்கொண்டால் அவர்கள் மீது இந்தியக் கிரிக்கெட் சபையினால் விதிக்கப்பட்டுள்ள தடைகள் விலக்கிக்கொள்ளப்படும் என அதன் தலைவர் ஷாஷங்க் மனோகர் தெரிவித்தார்.

எனினும் மேற்படி விலகிவரும் வீரர்களுக்குத் தண்டனைக்காலமாக ஒருவருடத்திற்குச் சர்வதேச போட்டிகளில் விளையாட அனுமதிக்கப்பட மாட்டாது. ஆனால் அவர்களுக்கு இந்திய முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கலாம் எனவும் மனோகர் தெரிவித்தார்.

ஐ.சி.எல். அமைப்பில் இணைந்துள்ள இந்திய வீரர்கள் சிலர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த பொதுமன்னிப்புக்காலம் வழங்கப்பட்டுள்ளதாக மனோகர் மேலும் தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் சபையின் செயற்குழு கூட்டம் மும்பையில் நடைபெற்றது. இதன் பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்த ஷாஷங்க் மனோகர் மேற்படி அறிவிப்பை வெளியிட்டார்.

இதற்கமைய ஐ.சி.எல். அமைப்பில் இணைந்துள்ள இந்திய முன்னணி வீரர்களான ஹேமங் பதானி மற்றும் ரொஹான் கவாஸ்கர் உட்பட பல வீரர்கள் ஐ.சி.எல். ஒப்பந்தத்தில் இருந்து விலகிக்கொள்ள தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

இந்தியாவின் 'சீ' ஊடக நிறுவனத்தினால் நடத்தப்படும் ஐ.சி.எல். போட்டிகளில் விளையாட 85 இந்திய கிரிக்கெட் வீரர்கள் இணைந்துள்ளமை குறிப்படத்தக்கது.

## அஜ்மலின் பந்துவீச்சு குறித்து புகார்

பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சயீட் அஜ்மலின் பந்துவீச்சில் தவறு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக டுபாயில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியின்போது அஜ்மலின் பந்துவீச்சு குறித்துப் போட்டி நடுவர்களாக செயற்பட்ட பில்லி பௌடன், அஸாத் ரவூப் மற்றும் மூன்றாவது நடுவர் சமீர் ஹைதர், நான்காவது நடுவர் நதீம் கௌரீ ஆகியோர் ஐ.சி.சி. இடம் முறையிட்டுள்ளனர்.




சயீட் அஜ்மல் தூஸ்ரா பந்து வீசும் போது அவர் பந்தை எறிவதுபோல் அமைந்திருப்பதாக நடுவர்கள் ஐ.சி.சி. இடம் புகார் தெரிவித்துள்ளனர். இது குறித்து விசாரணை நடத்த ஐ.சி.சி. முடிவு செய்தள்ளது.

அஜ்மல் இதுவரை 7 ஒரு நாள் போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளார். அவருடைய அனைத்து போட்டிகளையும் ஆய்வு செய்யவுள்ளனர். அதில் தவறு கண்டு படிக்கப்பட்டால் அவருக்குப் போட்டியில் விளையாட தடை விதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கங்குலியை அணித்தலைவராக நியமிக்குமாறு வலியுறுத்தல்

சௌரவ் கங்குலியை மீண்டும் அணித் தலைவராக்க முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் உத்பல் சாட்டர்ஜி, சபா கரீம் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

இந்திய அணியின் முன்னாள் சுழற் பந்து வீச்சாளரான உத்பல் சாட்டர்ஜி கூறியதாவது:

அணிக்குப் பல தலைவர் என அறிவித்ததே சர்ச்சைக்குள்ளானது. முதல் ஐ.பி.எல் போட்டியின் முதல் ஆட்டத்தில் 158 ஓட்டங்கள் விளாசிய பிரென்டன் மக்கலம் அணித்தலைவர் ஆனதால் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளார்.

இதுவரை கொல்கத்தா 5 ஆட்டங்களில் ஒரே ஒரு வெற்றியையே பெற்றுள்ளது. இப்போட்டியில் கொல்கத்தா முன்னேற வேண்டுமானால் கங்குலியை அணித் தலைவராக்குவதற்கு இதுவே சிறந்த தருணம் என்றார்.




இந்திய அணியின் முன்னுள் விக்கெட் காப்பாளர் சபா கரீம் கூறியதாவது:-அணிக்குப் பல தலைவர்கள் என அறிவித்து தொடக்கத்திலேயே குழப்ப விட்டனர். இப்போது அணிக்குப் பல தலைவர்கள் இல்லை. கங்குலியை தலைவராக்குவதே அணிக்குச் சிறந்தது. அணிக்கு உதவுவதற்காகப் பல்வேறு ஊழியர்கள் நியமிக்கப்பட்டும் அணி பரிதாபகரமான தோல்வியைச் சந்தித்து வருகிறது என்றார். இத்தகைய கடினமான சூழ்நிலையிலிருந்து அணியை மீட்க, வல்ல, தகுந்த நபர் கங்குலிதான் என பெங்கால் அணியின் தேர்வுக் குழு தலைவர் சம்பரன் பானர்ஜியும் குறிப்பட்டுள்ளார்.

இதனிடையே, அணி அரை இறுதிக்குத் தகுதி பெறவில்லை எனில் தலைவர் பதவியைத் துறக்கத் தயார் எனத் தலைவர் பிரென்டன் மக்கலம் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைவிமர்சனம்

## குரு என் ஆளு



இன்னாள் 'அமுல் பேபி'யான மாதவனும், முன்னாள் 'அமுல் பேபி' அப்பாஸும் இணைந்து நடித்துள்ள 'குரு என் ஆளு' திரைப்படம் திரைக்கு வந்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றது.

மாதவன், அப்பாஸ், மம்தா, விவேக், எம்.எஸ்.பாஸ்கர், மயில்சாமி போன்றோரின் நடிப்பில் 'குரு என் ஆளு' திரைப்படம் வெளிவந்துள்ளது.

பெரிய பணக்காரனாக வேண்டும் என்ற எண்ணம் கொண்ட மாதவன், அப்பாஸின் உதவியாளராகப் பணிபுரிகிறார். என்றோ ஒருநாள் தானும் பெரிய முதலாளியாக வருவேன் என நம்புகிறார். பெண்கள் மீது மிகுந்த சபலம் கொண்டவர் அப்பாஸ். நகைக் கடை ஒன்றில் பணிபுரியும் மம்தாவும் பணத்தின் மீது அதீத ஆசை உடையவர். மம்தாவும் மாதவனும் ஒரு கட்டத்தில் காதல் கொள்கின்றனர். மம்தாவை ஒருமுறை அப்பாஸ் காண நேர்கிறது. அவரை அடைய அப்பாஸ், மாதவனை அணுகுகிறார். மம்தாவை தனக்குத் திருமணம் செய்து வைத்தால் மாதவனை முதலாளி ஆக்குவதாகவும் அப்பாஸ் வாக்குறுதி அளிக்கிறார். பணத்தின் மீது கொண்ட மோகத்தால் மாதவனும் அதற்குச் சம்மதிக்கிறார். இறுதியில் பணம் வென்றதா? காதல் வென்றதா? என்பதை விறுவிறுப்பாகவும், கலகலப்பாகவும் 'குரு என் ஆளு' திரைப்படம் சொல்கிறது.

வில்லனாக வேடமேற்றிருக்கும் அப்பாஸ், நடிப்பில் வெளுத்துக் கட்டியிருக்கிறார். தன்னுடைய காதலியைப் பணத்துக்காகத் தாரை வார்த்துக் கொடுக்கத் துணியும் மத்திய தர வர்க்க இளைஞனாக நடிக்க மாதவனைத் தவிர வேறெவருக்கும் துணிச்சல் வராது. நீண்டநாள்களுக்குப் பின்னர் விவேக்கின் நகைச்சுவையும், அவரின் பெண் வேடமும் சிரிக்கவைத்து வயிற்றைப் புண்ணாக்குகின்றன. கூடவே எம்.எஸ்.பாஸ்கர், மயில்சாமி ஆகியோரும் சேர்ந்து படத்தின் நகைச்சுவைக்கு பலம் சேர்க்கின்றனர். படத்தின் ஒளிப்பதிவும் இசையமைப்பும் அளவாக அமைந்துள்ளன. சற்றே கவனம் பிசகினாலும் சரிந்துவிடக்கூடிய கதையை மிக நேர்த்தியாகத் தந்த இயக்குநர் பாராட்டுக்குரியவர்.★





## வந்தார் சீமான்



இந்தியாவின் இறையாண்மைக்கு எதிராகப் பேசினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இயக்குநர் சீமான் சில வாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டிருந்தார். இதனால் இவர் நடித்து வந்த 'மாயாண்டி குடும்பத்தார்' என்ற திரைப்படத்தின் படப்பிடிப்புகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. எனினும் இவரைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்தமை தவறானது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதைத் தொடர்ந்து சீமான் விடுதலை செய்யப்பட்டார். சீமான் விடுதலையான செய்தியை அறிந்த 400 இயக்குநர்கள் அவரை சிறைச்சாலையில் வரவேற்றனர். அத்தோடு மாயாண்டி குடும்பத்தார் படத்தின் பாடல் வெளியீட்டு விழாவிலும் சீமான் கலந்து கொண்டார். படத்தின் மிகுதிக் காட்சிகளை விரைவில் நடித்துக் கொடுக்க இருப்பதாகவும் சீமான் தெரிவித்துள்ளார்.*

## இணையும் இயக்குநர்கள்






வித்தியாசமான இயக்குநர்கள் என்று பெயர் எடுத்தவர்களில் சேரனும், மிஷ்கினும் முக்கியமானவர்கள். இவர்களுடைய திரைப்படங்கள் ஒவ்வொன்றும் தமிழ் சினிமாவில் படிக்கல்லாக அமைந்தன. இப்போது இவர்கள் இருவரும் இணைந்து ஒரு படத்தில் பணிபுரிய உள்ளனர். 'யுத்தம் செய்' எனப் பெயரிடப்பட்டுள்ள இப் படம் திகில் கதையை மையமாகக் கொண்டு தயாரிக்கப்படவுள்ளது. கதை, திரைக்கதை அமைத்துப் படத்தை இயக்கவுள்ளார் மிஷ்கின். இதில் நாயகனாகச் சேரன் நடிக்கவுள்ளார்.' தனித்தனியே தமது படங்களில் தனித்துவத்தைத் தரும் இவர்கள் இருவரும் இணைவதால் படம் பற்றிய எதிர்பார்ப்பு இன்னும் அதிகரித்துள்ளது.★

## குட்டியில் ஸ்ரேயா



'யாரடி நீ மோகினி' என்ற படத்தில் பாவாடை தாவணியில் நயன்தாராவைக் காட்டி அவரின் புகழைப் பெருகச் செய்தவர் மித்திரன் ஏ.ஜவகர். இப்போது இவர் 'குட்டி' என்ற படத்தை இயக்கிவருகிறார். இதிலும் தனுஷ்தான் கதாநாயகன். யாரடி நீ மோகினி திரைப் படம் மென்மையான முக்கோணக் காதல் கதையைச் சொல்லி நின்றது. ஆனால் குட்டி திரைப்படம் அதிலிருந்து முற்றிலும் மாறுபட்ட கதையம்சம் கொண்டதென ஜவகர் கூறுகிறார். ஆனால் குட்டியிலும் கதாநாயகி பாவாடைத் தாவணியில்தான் உலா வருகிறார். நீண்டநாள் தேடுதலுக்குப் பின்னர் குட்டியின் நாயகியாக ஸ்ரேயா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். துண்டு துக்கடா உடைகளில் வந்த ஸ்ரேயாவை குட்டியில் கண்குளிரப் பார்க்கலாம்.★

## காலமான கலைஞன்



தமிழ் சினிமா உலகில் தனக்கெனத் தனி இடம் பிடித்தவர் சண்டைப் பயிற்சி இயக்குநர் ராம்போ ராஜ்குமார். இவர் தன்னுடைய 52 ஆவது வயதில் சென்றவாரம் மாரடைப்பால் காலமாகிவிட்டார். இவருடைய வித்தியாசமான, விறுவிறுப்பான சண்டைக் காட்சிகளுக்காகவே திரையரங்குகளுக்கு வரும் ரசிகர்களும் உண்டு. பல முன்னணி நடிகர்கள் தமது விருப்பத்துக்குரிய சண்டைப் பயிற்சி இயக்குநராக இவரையே சொல்வதுண்டு. அண்மையில் வெளியாகிய படிக்காதவன், வில்லு, பொல்லாதவன் போன்ற பல படங்களுக்கு இவர்தான் சண்டைப் பயிற்சி இயக்குநர். இவர் இதுவரை தமிழ், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் என 400 இற்கும் மேற்பட்ட படங்களில் பணியாற்றியுள்ளார். காலமாகிப் போன இந்தக் கலைஞனுக்கு கலைச்சுடரின் அஞ்சலிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வுக்காலத்தில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?
இளமையிலேயே உங்கள் ஓய்வுக் காலத்தை
திட்டமிட சிறந்த தருணம் இது

# ஓய்வுக்கால திட்டமிடல் மாதம்

மே 1 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை

அழையுங்கள்: 011 2 461 461

CRA
செலிங்கோ

செ லி ங் கோ லை .·. ப்

செலிங்கோ இன்சுவரன்ஸ் பி எல் சி

*சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது - செலிங்கோ*

134, காலி வீதி, கொழும்பு 3. கம்பனிப் பதிவு இலக்கம் - PQ 24 தொலைபேசி: (011) 2 461 461 இணையத்தளம்: www.ceylincolife.com






# யாழ். மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம்

இனிவரும் காலங்களில் இச் சத்திர சிகிச்சைகளுக்காக மக்கள் கொழும்பிற்கு செல்லவேண்டியதில்லை.

யாழ் வைத்தியசாலையின் மற்றுமொரு புதிய சேவை


குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை

லாப்பிரஸ்கோப்பி (LAPAROSCOPY)

முறையிலான சத்திரசிகிச்சை கமரா மூலம் நோயாளிக்கு வலியில்லாமல் சிறு துவாரத்தினூடாக சத்திரசிகிச்சை செய்தல், இச் சிகிச்சை மூலம் கீழ்க்காணும் நோய்களுக்குச் சிகிச்சையளிக்கமுடியும்.



* கர்ப்பப் பையிலிருக்கும் கட்டிகளை அகற்றுவது.
* சூலகத்தில் இருக்கும் கட்டிகளை அகற்றுவது.
* கர்ப்பப்பையை அகற்றுவது.
* கர்ப்பப் பைக்கு வெளியே உட்பதியும் கர்ப்பங்களை அகற்றுவது மற்றும் பித்தப்பை அகற்றும் சத்திரசிகிச்சை.
* பெண்களின் மலட்டுத்தன்மைக்கான காரணத்தைக் கண்டறியவும் சிகிச்சையளிக்கவும் முடியும்.



NEW
## YARL HOSPITAL
315, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P: 021 222 3533

மேற்படி சத்திர சிகிச்சைகள் யாவும் யாழ். லாப்பிரஸ்கோப்பி சத்திரசிகிச்சை நிபுணர்களாலும் பிரபல பெண்நோயியல் ... சத்திரசிகிச்சை நிபுணர்களாலும், பொது ... நிபுணர்களாலும் மேற்கொள்ளப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுந்து கிடப்பவனைத் தூக்கி நடக்க வைப்பது போன்று உள நெருக்கீட்டால் அவதியுறுவோரை ஆற்றுப்படுத்த வேண்டும்

## அதிகரித்து வரும் சமூக உள நெருக்கீடுகளின் பாதிப்புகள் 3

**இன்று இந் நாட்டின் தமிழ் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் மிகப் பெரியசமூக உள நெருக்கீட்டில், அவர்களுக்குச் சமூக உள வள ஆதரவு வழங்கல் எத்துணை அவசியமான தொன்றென சென்றவாரக் கட்டுரைத் தொடரின் இறுதியில் குறிப்பிட்டிருந்தேன்.**

**அவ்விடயம் குறித்து இன்றைய தொடரில் கவனம் செலுத்துவது பொருத் தமாய் அமையும்.**

சமூக உள ஆதரவு வழங்குவதன் முக்கியத்துவம் யாதெனில், உணர்வு பூர்வமான பிரச்சினைகளை அனர்த்தத் தின் பின்பு கவனிப்பது குறைவு. ஏனெனில் இவை கண்ணுக்குப் புலப்படாதவை. ஏனைய பிரச்சினைகளுடன் ஒப்பிடும் போது உணர்வு பூர்வமான பிரச்சினைகள் பொதுவாக ஏற்படும் என்பதனை ஞாபகத்தில் கொள்ளல் வேண்டும். நெருக்கீட்டின் பாதகத் தன்மை அதிகரிக்கும்போது ஆதரவு அற்ற நிலையும் தனிமையும் ஒன்றும் செய்ய முடியாத நிலையும் ஏற்படும். அனர்தத்தினை முகங்கொடுத்த அனைவருக்கும் இந்நிலை வரும். எனவே ஆரம்பத்திலேயே இதற்கு சமூக உள வளத்துணையாளர்கள் அவசியம். அனர்த் தத்தினால் பாதிக்கப்பட்டவரை மீட்டெடுத்தலும், சமூகத்தினை மீளக்கட்டியெழுப்பலும், பாதிக்கப் பட்டவர்கள் இழப்புகளை ஏற்றுக் கொள்ளும் மன நிலைக்கு இலகுவில் வருவதிலேயே தங்கியுள்ளது. இது அவர்களை உணர்வு பூர்வமாகத் தற் போதைய நிலையை உணர உதவ வேண்டும். அதனூடாக அவர்களையும் அவர்களது குடும்பத்தினையும் சமூகத் தினையும் மீளக் கட்டியெழுப்பலாம்.

ஒருவர் காயப்படும்போது முதலுதவி செய்து, மருந்துகள் போட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டுக் குணமடையும் போது ஏற்படும் தழும்புக்கும் காயமடையும் போது எவ்வித மருந்துகள் அளிக்காது கிருமிதொற்றி, பின் படிப்படியாக குணமடையும் போது ஏற்படும் தழும்புக்கும் வேறுபாடு உள்ளது. பின்னையது பெரிய தழும்பாக அமையும். அவ்வாறே அனர்த்தத்தினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு சமூக உளநல ஆதரவு நல்கும் போது அவர்களுக்கு ஏற்படும் மனத் தழும்பு குறைவாக அமையும். குறிப்பாக இறப்பின் பின் ஆற்றுப் படுத்தல் வேதனையை போக்க உதவும். அதேபோல் இழப்புப் பற்றிய வேதனைகள், உணர்வுகள், எண்ணங்கள் பகிரப்படல் வேண் டும். வன்னியில் உறவுகள் இறக்கும்போது இங்கு அழுவதற்கே பயப்படும் சூழல் காணப் படுகின்றது. இவை ஆழ்ந்த மனவடுக் களைத் தருவதாக அமையும். ஆதரவுகளின் வீச்சு, அனர்த்தத்திற்கு முகம் கொடுத்த சமூக உள ஆதரவு முழுச் சமூகத்திற்கும் தேவையானது. ஆனால் ஒவ்வொருவருக்கும் தேவைப்படும் அளவு மட்டும் வேறுபடும்.

சமூக உள ஆதரவில், உணர்வுபூர்வமான ஆதரவு, உதவி, கருத்துக் கூறல், வழிகாட்டல்,தகவல்கள் கொடுத்தல், அறிவூட்டல் என்பன அடங்குகின்றன.

வீட்டு வசதி, வாழ்வாதாரப் பொருள்கள், சட்டஉதவி, நட்டஈடு, மருத்துவ வசதி, சமூக உள வசதி, சுய உதவி என்பன அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக் குத் தேவைப்படும் தேவைகளாகும்.

அனர்த்தத்தின் போது சமூகத்தின் ஆதரவு வழங்கல் நின்றுபோய் விடுகின்றது. எனவே ஆரம்ப நிலைகளில் வெளி ஆதரவுடன் சமூகத்தினை வலுப் படுத்த வேண்டும். பின்பு குடும்ப மட்டம், சமூக மட்டத்தில் ஆதரவு வழங்கும் நிலையை உள்ளேயே உருவாக்க வேண்டும். அதாவது பாதிக்கப்பட்ட சமூகம் தன்னைத் தானே இயக்கக் கூடிய நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

**சமூக உள மேம்பாட்டாளர்களது பங்களிப்பு:**

ஆரம்பத்தில் அனர்த்தத்தினால் பாதிக் கப்பட்டவர்கள் தமது அனுபவங் களைக் கூற விரும்புவர். காலப் போக் கில் அதைப்பற்றிக் கதைக்கவே விரும் பமாட்டார்கள். எனவே அவர்கள் உதவியைநாடி ஊக்கிவிக்கப் படல் வேண்டும்.

பொதுவாக மக்கள் உளவியல் ரீதியான அசௌகரியங்களைக் கதைக்க விரும்புவதில்லை. ஆனால் தம்மிடையே கதைப்பர். போதிய கவனம் அவர்களிடத்து செலுத்தப்படும்போது சமூக உள மேம்பாட்டாளர்களை அவர்களுடன் அவர்களது உணர்வுகள், இழப்புக்கள், சுகாதாரம் என்பன பற்றிக் கதைக்க வைக்கலாம்.

மேலும்,

**01. அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களது உடலிலும் உள்ளத்திலும் ஏற்பட்ட மாற்றங்களை விளங்கப்படுத்தல்.** அவை சாதாரண மாற்றம் எனக் கூறப்படல் வேண்டும். இது அவர்களுக்குச் சௌகரியத்தைக் கொடுக்கும். மேலும், இம் மாற்றங்கள் தற்காலிகமானவையே எனவும் மீளவும் சாதாரண நிலைக்கு வரலாம் எனவும் கூறுதல் வேண்டும்.

**02. உடல் ரீதியாகவும் உணர்வு பூர்வமாகவும் ஏற்படும் மாற்றங் களைக் குறைத்தல்.**

பாதிக்கப்பட்டவர்களுக்கு உளப் பூர்வமான ஆதரவினை வழங்கி, அவர்களுடன் உறவை உருவாக்கி, அவர்களே தமக்கு நேர்ந்தவற்றை விவரிக்க வைத்தல். இதன்போது அவர் களது உணர்வுகள் பகிரப் படல் வேண்டும். இவ்வாறு ஆற்றுப் படுத்துவதால் கடுமையான உணர்வுகள் நாளடைவில் குறைந்துவிடும்.

**03. பாதிக்கப்பட்டவர்களின் சிதறுண்ட வாழ்வை மீளக்கட்டியெழுப்பல் வேண்டும்.**

பாதிக்கப்பட்டவர் இடத்தில் நல்ல தொடர்பினை உருவாக்கிய பின், துன்பத்தினைப் போக்க உதவிய பின், அவர்களிடம் தனிப்பட்ட தேவைகள் பற்றிக் கேட்கலாம்.

இது,

*1. நட்டஈடு தொடர்பானதாக இருக்கலாம்*

*2. வீட்டினை மீளக் கட்டுவதாக இருக்கலாம்.*

*3. மீளவும் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் தொடர்பானதாக இருக்கலாம்.*

*4. சமூகத்தில் இலகுவில் பாதிக்கப் படும் அநாதைகள், விதவைகள், வயதானவர்களுக்கு உதவுவதாக இருக்கலாம்.*

*5. மருத்துவ உதவி தேவைப்படுவதை உறுதிப்படுத்தல்.*

இவ்வாறான பூரண அணுகுமுறையானது பல விதமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவினை நல்க வாய்ப் பாக அமையும்.

**சமூக உள நல மேம்பாட்டாளர்கள் செய்யவேண்டியது**

1.குடும்பங்களை ஒழுங்காகச் சந்தித்தல்.

2. அவர்களுடன் உறவைப் பேணல்.

3. பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவ உதவி பெற உதவல்.

4. நடைமுறைத் தேவைகளான, வீட்டுவசதி, கல்வி, பாதுகாப்பு என்பவற்றில் உதவல்.

5. பாதிக்கப்பட்டவர்களுக்கு இடையே தொடர்புகளை உருவாக்குதல்.

6. நிலைக்கக்கூடிய கட்டமைப்பை சமூகத்தில் உருவாக்கல்.

7. நடுநிலையாக இருத்தல்.

## பாதிப்புற்றோருக்குத் தவறான எதிர்பார்ப்புகளை உளநல மேம்பாட்டாளர்கள் வழங்கக்கூடாது

**சமூக உளநல மேம்பாட்டாளர் செய்யக்கூடாதவை**

1. தவறான எதிர்பார்ப்புக்களைக் கொடுக்கக்கூடாது.

2. பாதிக்கப்பட்டவர்களுக்காகத் தாம் தீர்மானம் எடுக்கக்கூடாது

3. கடமை தவறாமை.

4. பாதிக்கப்பட்டவர்களின் நடத்தையில் குழப்பமடையக்கூடாது

5. வேலைப்பளுவைச் சுமக்கக் கூடாது.

6. குடும்பங்களுடன் செயற்படும் போது பக்கச் சார்பாக நடக்கக்கூடாது.

**சமூக உள ஆதரவு நல்குதல்**

சாதாரண சூழலில் மக்கள் தமது பிரச்சினைகளைத் தாமே தீர்க்கக் கூடியவர்களாக இருப்பர். ஆனால் அனர்த்தத் தின் பின் சமூகச் சமநிலை பாதிக்கப் படுவதால் அவர்கள் தற்காலிகமாகக் குழப்பமடைந்து காணப்படுவர். அவர்களின் உணர்வு மாற்றம் சாதாரண நிலையை அடையக் காலம் எடுக்கும். அதுவரைக்கும் அவர்களுக்குச் சமூக உள ஆதரவு நல்கவேண்டும். இது விழுந்து கிடப்பவனைத் தூக்கி நடக்க வைப்பது போன்றது.

மேற்கூறிய மூன்றும் அனர்த்தங் களின் பாதிப்பில் இருந்து மீள உதவும்.

**உளவியல் முதலுதவி**

உளவியல் முதலுதவி என்பது சிறிய செயல்களாக அமையலாம். ஆனால் மீட்கும் போதும், புனர்வாழ்வு அளிக்கும் போதும் மிகவும் முக்கியம் வாய்ந்ததாக அமையும். அத்தகைய செயல்களாவன:-

1. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடித் தேவையான உணவு, நீர், உடை, உறைவிடம், மருந்துகள் என்பவற்றை வழங்கல்.

2. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் அனர்த்தம் தொடர்பான அனுபவங்களைக் கேட்டறிதல்.

3. குடும்ப அங்கத்தவர்களையும் சமூகத்தினையும் இணைத்தல்.

4. நிவாரணப் பொருள்கள் கிடைக்க உதவல்.

5.மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

**சமூக உள ஆதரவின் ஏழு அடிப்படைகள்**

**01. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கடுமையான உணர்வுத் தாக்கங்கள் அடக்கப்பட்டு இருக்கும். இவற்றை வெளிக்கொணரல் வேண்டும்.**

உதாரணமாக, இழப்புகள் பற்றிக் கதைத்து அவர்களது உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும். இது உடனடியாகச் செய்ய வேண்டியது. இதற்குப் பாதிப்புற்றோரின் பேச்சினை அவதானமாகக் கேட்க வேண்டும். கண்தொடர்பைப் பேணவேண்டும்.

அவரது துன்பத்தினை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் கூறும்போது இடையூறு செய்யக்கூடாது. ஒருபோதும் அழுவதை நிறுத்துமாறு கூறக்கூடாது. கையினைப் பற்றி அல்லது முதுகில் தட்டி ஆறுதல் கூறவேண்டும். இதில் கலாசார நிலையையும் நோக்க வேண்டும்.

**02. பாதிக்கப்பட்டவர்களின் வேதனையை உணரல்.**

பொதுவாக ஒருவரது அசௌகரிய நிலையை அறிதல் கடினம். ஆனால் அவர்கள் இழப்புத் தொடர்பாக அனுபவிக்கும் வேதனைகளை நாம் உணர முற்பட்டால் அவர்களது நிலையை உணரலாம். நாம் பாதிக்கப்பட்டவர்களின் நிலையில் இருந்து பார்க்க வேண்டும்.

**03. உயிர்ப்பான செவிமடுத்தல்.**

சிறந்த செவிமடுத்தல் மிகவும் இன்றியமையாதது. உணர்வுபூர்வமான ஆதரவு அளித்தலுக்கு, சமூகத்தில் அனர்த் தத்தின்பின் கதைப்பதற்கு ஒதுக்கான இடமோ அமைதியோ இராது. இரைச்சலாக இருக்கும். இருந்த போதும் செவிமடுத்தலைச் சிறப்பாகச் செய்தல் வேண்டும்.

1) கண் தொடர்பைப் பேணல் வேண்டும்.

2) இடைக்கிடையே பதில்கூற வேண்டும்.

3) குறுக்கிடக் கூடாது.

4) பாதிக்கப்பட்டவர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

5) பாதிக்கப்பட்டவர்களின் வேதனையை எமது நிலையில் உணரல் வேண்டும்.

**04. பாதிக்கப்பட்டவர்கள் வேறு துறைகளில் நாட்டம் காணச் செய்ய வேண்டும்.**

இதனால் மீளல் இலகுவாகும். தொழில் முயற்சிகளில் ஈடுபடும் போது அவர்களது மனம் பிரயோசனமாகச் செயற்படும்.

**05. சமூக ஆதரவு வழங்கல்.**

உணர்வு ரீதியான சுற்றி உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும்போது சௌகரியமாக இருக்கும். அனர்த்தத்தின் போது இது உடைந்து போயிருக்கும். எனவே சமூக உறவுகளைக் குடும்ப உறவுகள் மாதிரி உருவாக்க உள சமூக மேம்பாட்டாளர் உதவல் வேண்டும்.

**06. தளர்வடையச் செய்தலும் பொழுதுபோக்கு நிகழ்வுகளும் ;-**


பொழுது போக்கு நிகழ்வுகளில் ஈடுபடல் விரைவாக மீள உதவும். சுவாசப் பயிற்சி செய்தல் பதகளிப்பைக் குறைக்கும்.

**07. ஆன்மீகம்.**

இறை நம்பிக்கை குணமடையும் வேகத்தினை அதிகரிக்கும்.

இந்த ஏழு அடிப்படைகளையும் தனி நபர் மீதோ, குடும்பத்தின் மீதோ, சமூகத்தின் மீதோ பயன்படுத்தலாம்.

***(வளரும்)***






**டாக்டர் சி. யமுனாநந்தா (MBBS, DTCD)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீட்சி......

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பூங்கா வாசலில் இறங்கி ஹோலை நோக்கி நடந்தான். இருபுறமும் உயர்ந்த மேடுகளுக்கு நடுவான பாதையில், இருண்ட அமைதியில் 'விறுவிறு' என நடப்பது உளையும் மனதுக்கு ஏற்றதாக இருந்தது. ஆவேசமான நடையினால் தூரம் குறுகியது. சதுரக்கோடுகளால் வழி வந்த விசயவர்த்தனா விடுதியின் மின் சாரம் அவனுக்கு வழிகாட்டுவது போல ஒளிர்ந்தது. அதை நோக்கி நடக்க நடக்க மனம் தெளிவாவது போல இருந்தது.

அறையை அடைந்ததும் அவன் படுக் கையில் விழுந்தான். சாப்பாட்டுக்கும் போகவில்லை. 'ரூம்மேட்' விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கும்வரை காத் திருந்து விட்டு எழுந்து, இருட்டோடு இருட் டாக கட்டிலில் உட்கார்ந்து கொண்டான்.

பழைய நினைவுகள் அசைநீது ஊர்ந்தன . முதன் முதலாக தமிழ்ச் சங்கப் பேச்சுப்போட்டியில் கலந்து கொண்டபொழுது அவன் கற்றுக்குட்டி தான். பேரளவில் அவனுக்குத் தெரிந்திருந்த மார்க்கசீய தத்துவங்கள். அப்பொழுது இனிக்கவே செய்தன. அவற்றை மட்டும் வைத்துக்கொண்டு அவன் தன் பேச்சு வன்மையால் முதல் பரிசைத் தட்டியபொழுது, அவனை வந்து பாராட்டி, தானாகவே தம்மை அறிமுகம் செய்துகொண்ட கம்யூனிச மாணவர்கள்:

பின் அவர்கள் கூட்டிச் சென்ற கூட்டங்கள்: போதனா வகுப்புக்கள்; முதலாவது கட்சிப் போதனா வகுப்புக்களிலிருந்து அவன் வெளியே வந்தபொழுது ஒரு புதிய உலகைத் தரிசித்து விட்டதுபோல அவனுக்கு ஏற்பட்ட மலைப்பு.

ஆனால் நாளாக ஆக, கட்சி வகுப்புக்கள் யாவும் ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்லிச் சொல்லி அதன்படியே நடப்பிப்பது போல அவனுக்கு படும். பாதகமான கருத்துக் கள் யாவும் மழுப்பி, மறைக்கப்படுவதாக வும் அவனுக்கு சில வேளைகளில் தோன்றும். இந்த நினைவை அவன் கஷ்டப்பட்டு வேறு பக்கம் திருப்பிக் கொள்வான். இன்றுதான் கட்டவிழ்த்து உசுப்பி விடப்பட்ட அவன் சுய சிந்தனை......

ஏதோ ஒரு ஆவேசத்துடன் 'லயிட்'டைப் போட்டுவிட்டு மேசையில் கிடந்த மார்ச்சீயப் புத்தகங்களைப் புரட்டினான். அவை எல்லாம் வெறும் பிரச்சாரங்களாகவே இப்பொழுது அவனுக்குத் தெரிந்தன. மனிதனைச் சிந்திக்கத் தேவையற்றவனாக்கி அவன் சுய அறிவை மழுங்க வைக்க, அடிப் படையாக அவை காட்சியளித்தன. புத்தகங்களை மூடிவிட்டு படுக்கையில் குடைந்து கொண்டு படுத்துக்கொண்டான்.

எல்லா நினைவுகளையும் விலக்கி மேடிட்டு எழுந்த தீர்மானம் குழப்பத்தைக் கலைத்து மனத்தைத் தெளிவாக்கித் தெம்பளித்தது போல இருந்தது. அத் தீர்மாணம் சரியானது என்பதால் எழுந்த ஒருவித துணிவுணர்ச்சி, நெஞ்சுக்குத் தைரியம் ஊட்டி முட்டிக் கொடுத்தது.

ஒரு கிழமை கழித்து,

அன்றும் அதே மாதிரி நாகராஜன் கட்டிலில் படுத்திருந்தான். ஆனால் இப்போது முன் போல் எண்ணங்கள் குமுறிக்கொண்டு அலை பாயவில்லை. குழப்பம் இல்லை. மாறாக வெளியேற்றப்பட வேண்டிய ஏதோ ஒரு இடத்தில் இருந்து, வெற்றிகரமாகத் தப்பித்து வெளியேறிய திருப்தியும், அமைதியாக ஏதோ அபூர்வ சாதனையைச் செய்துவிட்ட பெருமிதமும் நெஞ்சில் நிறைந்து ததும்பியது.

இனம் தெரியாத பரவசம் ஊறி வந்து சுழி பரப்புகையில் அந்தச் சுழிப்பிலே குமிழ் காட்டிப் பொடியும் வளையங்கள் - அந்த ஒரு கிழமைக்குள் அவனுக்குக் கிடைத்த அனுபவங்கள்.

இதுவரை காலமும் தன் குருவாக இருந்த குருநாதனிடம் அவன் தன் முடிவை- கட்சியில் இருந்து விலகி நிற்கப் போவதைக் கூறி அடுத்த நாள், குருநாதன் வேறு ஒருவனோடு வந்து அவனைக் கண்டிக்கு வரும்படி அழைத்தான்.

அவனின் பெருந் தன்மையான போக்கை மெச்சிக்கொண்டு, அவர்களோடு புறப்பட்ட நாகராஜனுக்கு வழி நெடுகக் கிடைத்தவைகள் எல்லாம் 'போதனைகளே'.

'கொள்கை என்று சொல்லிக் கொண்டு இவ்வளவு நாளும் எங்களோடு திரிஞ்சு போட்டு, இப்ப நீ விலகுவது பிழை, பச்சோந்தித்தனம் எண்டுதான் சொல்லுவாங்கள்'.

'ஓம் பிழைதான்'. நாகராஜன் ஒத்துக்கொண்டான். 'என்ரை அறிவு சரியாச் சிந்திக்க முன்னம், உங்கடை கொள்கையால கவரப்பட்டனான்தான். இப்ப யோசிக்க, யோசிக்க உங்கட கொள்கை - அதைவிட நீங்கள் அதுக் காகக் கையாளுகிற முறை எல்லாம்.......'

'யோசி, தம்பி யோசி, உன்ரை அறிவு இன்னும் சரியாகப் பண்படுத்தப்பட வில்லை. அதுதான் தீர்க்கமா, ஒரு முடிவுக்கு வர முடியாமல், இப்படி அவதிப்படுகிறாய்' என்றவன், நாகராஜன் அதை மறுத்து ஏதும் சொல்ல முன் உடனே தொடர்ந்தான்;' எல்லாக் கொள்கையிலும் சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். கொள்கை எண்டு வந்திட்டா, அதை எப்படியும் விட்டுக் கொடுக்கக் கூடாது. அதுக்காக எதையும் செய்யக் கூடிய தீவிர ஆவேசம் வேணும். கட்சிகளில் ஈடுபடுகிற எவனும் இப் படித்தான் செய்கிறான். ஒருத்தனும் தன்ரை கட்சியில் இருக்கிற சின்னக் குறைபாடுகளைப் பாராட்டமாட்டான். இதுகளால் யாரும் தன்ரை கட்சியை குறைத்துச் சொல்லவும் விடமாட்டான்?''

பஸ் ஸ்ராண்டு வந்துவிட்டது. நாகராஜனுக்கு மூளை குழப்பப்படுவது போலிருந்தது. அவன் எதிர்பார்த்த திசைக்கு எதிர்ப்புறமாக வந்து நின்ற பஸ்சில், குருநாதன் அவனையும் தள்ளிக் கொண்டு ஏறினான். 'இதிலா?' என்ற நாக ராஜனின் திகைப்பிற்கு, 'ஏறடா சொல் றன்' என்பதே பதிலாகக் கிடைத்தது.

சீட்டில் அமர்ந்த பிறகுதான் குருநா தன் சொன்னான் ''எங்கட சொர்க்கத்திற் குப் போறம். 'ஹிந்து கலைக்கு.' இண்டைக்கு என்ரை 'றீற்' உனக்கு. நீ கட்டாயம் குடிச்சுத்தான் பார்க்கோணும்''.

நாகராஜனுக்கு தெற்றென ஏதோ புலப்படுவது போலிருந்தது. மூளையைப் 'பண்படுத்தும்' முறையில் இதுவும் ஒரு அம்சமோ?

உடனேயே வாய், நினைத் தவற்றிற்கு ஏதோ ஒரு உத்வேகத்துடன் சொல்லுருவம் கொடுத்தது. 'சில நாடுகளிலை மூளைச் சலவை' முறை கையாளப்படுகிறதாய் கேள்விப்பட் டிருக்கிறன். அந்த முறை இப்ப என்னிலை நேரில் பரீட்சித்துப் பார்க்கப்படப் போகுது போல கிடக்கு'.

குருநாதன், உள்ளுக்குள்ளே திகைத்துப் போனது தெரிந்தது. ''தம்பி! நீ என்னமோ கனக்கத் தெரிஞ்சது மாதி ரிக் கதைக்கிறாய்''. நாகராஜனும் தயங்க வில்லை. அடுத்த ஸ்டாப்பிலேயே 'விருட்' என இறங்கிக் கொண்டு விட்டான்.

அடுத்த கட்டம் - பயங்கரமானது.

பயமுறுத்தல்; எச்சரிக்கை. ஒரு நாள் அந்திநேரம் அவனைத் தனியே வழிமறித்தனர் பழைய 'தோழர்கள்'.

அவர்கள் பேசிய தோரணையைக் கண்ட பொழுது அவர்களிடமிருந்து பத்திரமாகத் தப்பிவர முடியும் என்ற எண்ணம் அவனுக்கு இருக்கவில்லை. ''எங்களைப் பகைச்சால், உனக்கு 'கம் பசு'க்குள்ளை நல்ல காலம் இல்லை. இங் கிருந்து நீ உருப்படியா பாஸ் பண்ணிக்கொண்டு போக ஏலாது.இதை நினைவில் வைத்துக்கொள்''.

'உங்களை நான் எங்கை பகைச்சேன்? என்ரை கருத்து உங்களுடையதோடை ஒத்துப் போகவில்லை எண்டு சொல்லுறது கூடப் பிழையா?' அவன் அமைதி யாக, ஆனால் ஏகத்தாளமாகக் கேட்டான்.

''டேய்! கனக்கக் கதையாதையடா! எங்களைப் பற்றி உனக்குத் தெரி யேல்லை. நாங்கள் என்னவும் செய்வம்''.

'ஓ செய்வீங்கள். பார்க்கத்தான் தெரியுதே'. அவன் எட்டி நடக்க முயன்றான். நல்ல வேளையாக, வீதி வழியாக யாரோ தெரிந்தவர்கள் வரவே அவர்களும் விலகிச் செல்ல நேரிட்டது.

அவனுக்கு எங்கோ, ஸ்டாலின் கால 'இரும்புத்திரை' நாடுகளின் தெரு ஒன்றில் நடப்பது போல் இருந்தது. ஆனால், நல்ல வேளையாக இலங்கை அப்படிப்பட்ட நாடு இல்லை. தோழர்களின் வெறும் சொற்கள் ஆத்திரத்தின் ஒலி வடிவங்களே. அவர்களால் அவனை ஒன்றும் செய்ய முடியாது. பலாத்காரத்தில் நம்பிக்கை உள்ளவர்கள்தான். ஆனால், அதை இங்கு இவர்களால் செயற்படுத்த முடியாது. இது பொதுவுடமை நாடல்ல.

வேறுபட்ட கருத்துடையானை, 'திருத்தி' எடுக்க தம் இலட்சிய நாடுகளில் கையாளப்படும் முறைகளை இங்கு அப்படியே செய்து பார்க்கும் ஒரு கூட்டத்தாரில் இருந்து தான் பங்கு பெறாது தப்பிவிட்டதை நினைக்க நினைக்க படுத்திருந்த் நாகராஜனுக்குப் பெருமை பிடிபடவில்லை.

இந்த நிறைவினை, அப்படியே தனி யாகக் கொஞ்ச நேரம் அனுபவிக்க வேண் டும் என்ற துடிப்புணர்ச்சி, அவ்வுணர் வினுள் இருந்த இதமே, மெல்லமாக வந்து அவர் கண் இமைகளை அழுத்தியது.

*(நன்றி: சுதந்திரன் சிறுகதைத் தொகுதி)*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 59

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | 5 | |
| 6 | | ■ | 7 | 8 | | | ■ |
| 9 | | 10 | | | ■ | 11 | 12 |
| | ■ | 13 | | ■ | 14 | | |
| ■ | 15 | | ■ | 16 | | | ■ |
| 17 | | ■ | 18 | | | ■ | 19 |
| 20 | | 21 | | ■ | 22 | 23 | |
| 24 | | | ■ | 25 | | | |

அனுப்புபவர் பெயர்:...................................

விலாசம்:...................................

...................................

கையொப்பம்:...................................

### மேலிருந்து கீழ்

1. மலை உச்சியில் அமைவது.
2. இடமல்ல.
3. நவீனமானது.
4. இணங்க / ஏற்ப.
5. ஒரு நிகழ்வு.
8. நாம்.
10. மென்மை.
12. புன்னகை செய்.
14. கேட்டல் / கேள்வி எழுப்புதல்.
15. அருகில்.
16. தாண்டு.
17. அதிகாரிகளுக்கும், அரசியல் வாதிகளுக்கும் இதன் மேல் ஆசை, மோகம்.
18. தங்களுடையது.
19. விதைப்பு.
21. வேகம்.
23. இந்த யுகம்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.*
*அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 59**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர் (13.05.2009) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*
*7. சொற்சிலம்பம் போட்டி இல. 59 இல் வெற்றிபெறுவோர் களது விவரம் 17.05.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

### இடமிருந்து வலம்

1. எச்சரிக்கையைக் குறிக்கும் நிறம்.
4. பத்தாம் நாள் திதி.
6. ஒன்று சேர்.
7. ஈகை.
9. மனதைக் கவரும் அழகு.
11. இது வந்திடப் பத்தும் பறந்திடுமாம்.
13. பூப்படைதல் / பூக்கும் காலம்.
14. விளக்கமாகக் கூறு.
15. போதை தருவது.
16. பாரமான / மரியாதைக்குரிய என் பதைக் குறிப்பது.
17. முகத்திலும் வருவது/ சிலருக்கு அடிக்கடி முகத்தில் வரும்.
18. வருடு.
20. போன்.
22. மெல்லிய உலோகத் தட்டு.
24. பத உறுப்பில் ஒன்று.
25. அழகும், நறுமணமும் தரும் மலர் வகை ஒன்று.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ,மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத் துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 57இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1)விசும்பு (4)பாரதி (7)தடி (8)திகழ்தல் (10)வைத்தியம் (12)தாதி (13)பகா (16)நீர் (17)வளர்தல் (19)அரம் (20)வலி (21)பதிகம் (23)இனைய (24)திரும்புதல்

**மேலிருந்து கீழ்**
(1)விதவை (2)சுடித்தார் (3)புதிய (4)பாழ் (5)ரதம் (6)தில் (9)கம்பளம் (11)திதி (14)கார் (15)துல்லியம் (16)நீதிபதி (17)வரம்பு (18)தவணை (19)அகம் (22)திரு (23)இல்

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்:57 இற்கான சரியானவிடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** **நயோமி றேக்கா வசந்தகுமார்,** *தென்னிந்தியத் திருச்சபைக் குருமனை, இணுவில், சுன்னாகம்.*

**2 ஆம் பரிசு** **வி.பத்சாங்கிதன்,** *இல:224/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.*

**3 ஆம் பரிசு** **சந்திரகுமார் சாருஜன்,** *சத்தியசாயி பாடசாலை, மானிப்பாய்.*

பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **எம்.எஸ்.விநோதன்,** 'மாணிக்கப் பூங்கா', மறவன்புலோ, சாவகச்சேரி.

(2) **ம.அனோஜா,** திருமகள் சோதி வீதி, தெற்கிலி, நவிண்டில், கரவெட்டி.

(3) **ஜெயபாலன் ஜெசிந்,** வேலணை மத்திய கல்லூரி, வேலணை.

(4) **ப.பகீரதன்,** உதவி அரசாங்க அதிபர் பணிமனை, கோப்பாய்.

(5) **சசீகரன் சசீரா,** யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

இயலூர் ஒரு சிறிய அழகிய கிராமம். அக்கிராமத்தில் அருகில் வனம் ஒன்று இருந்தது. அவ் வனத்தில் பல அழகிய பறவைகள் குடிகொண்டிருந்தன.

அக்கிராமத்தில் ஒரு பாடசாலை இயங்கி வந்தது. அப்பாடசாலையில் கந்தன், கண்ணன், கதிசன், நிதுசன் என்னும் நண்பர்கள் கல்வி கற்று வந்தார்கள். அவர்களுக்கும் அக்கிராமத்தின் அருகிலுள்ள வனப் பறவைகளின் செய்தி எட்டியது. அன்று அவர்களின் பாடசாலையின் 2ஆம் தவணை விடுமுறை விடப்பட்டிருந்தது. பறவை பிடிப்பதற்கு அது ஒரு வாய்ப்பாக அமைந்தது. பாடசாலை விட்டவுடன் நால்வரும் சேர்ந்து இதுபற்றிக் கதைத்தனர். அவர்கள் ஒரு தீர்மானத்துக்கு வந்தனர். மறுதினமே செல்வோம் என்று தீர்மானித்தனர்.

அவர்கள் நால்வரும் சேர்ந்து பறவை பிடிப்பதற்குக் கூடு ஒன்றை ஆக்கினர். நால்வரும் பணம் சேர்த்து ஒரு பிஸ்கட் ரின்னையும் வாங்கினர். அதிகாலை நான்கு மணிக்கு துயில் எழுந்தனர். மதிய உணவு பொட்டலத்தையும், பிஸ்கட் ரின்னையும் எடுத்துக் கொண்டு நால்வரும் காலை 7 மணிக்கு காட்டை நோக்கி நடக்கலாயினர். 9 மணியளவில் காட்டின் வாயிலை அடைந்தனர். அங்கிருந்து சற்று நேரம் ஓய்வெடுத்தனர். மீண்டும் நடக்கத் தொடங்கினர். 3 மணி நேரம் நடந்த பின், அவர்கள் ஓர் அதிசயத்தைக் கண்டனர். பறவைகள் பல வர்ணங்களில் காணப்பட்டன. கண்ணனும் கந்தனும் பறவைகளைப் பிடிக்க முற்பட்ட போதும் அவை பிடிபடவில்லை. இதன் காரணமாக கண்ணன் கந்தன் ஆகிய இருவரும் சோர்வடைந்தனர்.



"சீச்சி இனிமேல் நமக்கு பறவைகள் கிடையாது, வீட்டுக்குப் போகலாம்" என்று கண்ணன் கூறினான். இதைக் கேட்ட கந்தன் அதனை ஆமோதித்தான்.

ஆனாலும் கதிசனும், நிதுசனும் சோர்வடையவில்லை. நால்வரும் தாம் கொண்டுவந்த மதிய உணவுப் பொட்டலங்களைப் பிரித்து உண்டனர். அதன் பின் கண்ணனும் கந்தனும் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து ஓய்வெடுத்தனர்.

ஆயினும் கதிசனும் நிதுசனும் செயலில் இறங்கினர். நிதுசன் தான் வைத்திருந்த கயிற்றைப் பிரித்து வலை பின்னினான். கதிசன் தான் வைத்திருந்த பிஸ்கட் ரின்னிலிருந்த சில பிஸ்கட் துண்டுகளை எடுத்து சிறு சிறு துண்டுகளாக்கினான். நிதுசன் வலை பின்னி முடித்ததும் இருவரும் சேர்ந்து வலையை நிலத்தில் விரித்து பிஸ்கட் துண்டுகளை அதன் மேல் தூவினர். நால்வரும் ஒருமரத்தின் பின் ஒளிந்திருந்து அவதானித்தனர். அப்போது சில குருவிகள் அதில் வந்து மாட்டிக் கொண்டன. அவர்கள் மகிழ்ந்து, கூட்டை எடுத்து ஆயத்தப்படுத்தினர். இதற்கிடையில் குருவிகள் வேகமாகச் செயற்பட்டன. தலைமைக் குருவி ஏனைய குருவிகளுக்கு யோசனை ஒன்றைக் கூறியது. அதைக் கேட்டோ என்னவோ தெரியவில்லை குருவிகள் இறந்தது போல் நடித்தன.

நால்வரும் பறவைகளைக் கிட்ட வந்து பார்த்த போது தலை சுற்றியது போல் உணர்வு ஏற்பட்டது. ஏனெனில் குருவிகள் செத்துவிட்டன! இனி என்ன செய்வது? நிதுசன் கவலை கலந்த மனத்துடன் குருவிகளை எடுத்து நிலத்தில் எறிந்தான். கடைசிப் பறவையை நிலத்தில் எறிந்ததும் பறவைகள் மேலே உயரப் பறந்தபடி **"ஏய் சிறுவர்களே நாம் ஒற்றுமையாக இருக்கும் வரை ஒருவரும் ஒன்றும் செய்ய முடியாது."** என்று கூறிக்கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றன. நால்வரும் தம் எண்ணத்தை மாற்றிக் கொண்டு தங்கள் வீட்டை நோக்கி நடக்கலாயினர்.

**ஓ-நிதுசன் தரம் - 8 C, யா/ இந்துக் கல்லூரி.**

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? - 14

1. பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்த தினம் எப்போது?
2. 'றொபின்சன் குருசோ' என்ற சிறுவர் நவீனத்தை எழுதியவரின் பெயர் என்ன?
3. அண்மையில் முறையற்ற பந்து வீச்சாளர் என்ற சர்ச்சைக்குள் சிக்கியுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் யார்?
4. உலகிலேயே பெரிய பென்சிலின் நீளம் எத்தனை அடிகள்?
5. அன்னதானக் கந்தன் எனச் சிறப்பிக்கப்படும் முருகன் ஆலயம் எது?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 13.05.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா? - 12
**சரியான விடைகள்**

(1) சங்கிலியன்
(2) அஜந்தமெண்டிஸ் (இலங்கை) (3) நண்டு.
(4) எட்கார் ரைஸ் பர்ரோஸ் (5) 16.04.1889.

### பரிசுபெறுவோர்

01. சி.நிறோஜன்
தரம் - 4B, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.
02. சோ.சுலோசனா,
தரம் - 11, நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தி.

விடை தெரியுமா 12 இற்கு எவருமே எல்லா வினாக்களுக்கும் சரியான விடைகளை எழுதி அனுப்பவில்லை. அவர்களில் கூடிய வினாக்களுக்கு சரியான விடையளித்த இருவருக்கு மட்டுமே இம்முறை பரிசு வழங்கப்பட்டுள்ளது.



## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## கடலும் காவிரியும் கடலும் அலையும்

கடலைப் பாரடா-தம்பி
அலை அடிக்குது
படகு போவதை-மீன்
பார்த்துத் துள்ளுது!

வீசும் காற்றினால் -அலை
விரைந்து எழும்புது
மூசிக் கரையிலே - வந்து
மோதி உடையுது

ஓசை பரவுது - காதில்
ஊதிக் காட்டுது
ஆசை தீரவே- கால்
அலையில் நனையுது!

நண்டு ஓடுது- அலை
வளைந்து துரத்துது
கிண்டி மணலிலே-வீடு
கட்டி நுழையுது!

**நி.நிகன்,**
தரம்.5B, சென்.ஜோன்ஸ் கல்லூரி






## விபுலானந்த அடிகள்

- இவர் மட்டக்களப்பிலுள்ள காரைதீவில் 1892 ஆம் ஆண்டு பிறந்தார்.
- இவர் சாமித்தம்பி - கண்ணம்மை தம்பதிகளின் அன்புப் புதல்வராவார்.
- இவரது இயற்பெயர் மயில்வாகனம் என்பதாகும்.
- இவரது கல்வியாற்றல் கற்பித்த ஆசிரியர்களுக்கே பெருவியப்பாக இருந்தது.
- தெளிந்த நல்லறிவினால் இவர் பரீட்சைகள் பலவற்றில் முதன்மையாகத் தேறினார்.
- தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிகளிலும் வல்லுனராக இருந்தார்.
- கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஆசிரியராகக் கடமையாற்றினார்.
- மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகவும் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் கடமையாற்றினார்.
- துறவு வாழ்வை விரும்பி ஏற்ற இவர் அறநெறிக் கூடங்கள், ஆலயங்கள், பாடசாலை பலவற்றையும் நிறுவினார்.
- இந்து மதத்திற்கும் தமிழுக்கும் பெருந்தொண்டாற்றிய இவர் 1947ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

**ச.நிதர்சினி, தரம் 6C, யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை.**




இரத்தினக்கல்லின் வெளிச்சத்தில் இளவரசர்கள் இருவரும் தப்புவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா? என்று அறை எங்கும் ஆராயத் தொடங்கினார்கள். அப்போது 'டமார்' என்ற ஓசையோடு அறையின் கீழ்ப் பக்கத்தில் வெடிப்பு ஒன்று ஏற்பட்டது. அந்த சத்தம் மாளிகையில் எல்லாத் திசைகளிலும் எதிரொலித்தது. அந்தச் சத்தத்தைக் கேட்ட மாத்திரத் திலேயே நாலா புறத்திலிருந்தும் மந்திரக் கிழவியின் ஏவலாளிகள் அந்த அறையை நோக்கி விரையத் தொடங்கினர். கண்களில் கொலை வெறியோடு தன் கையில் உள்ள மந்திரக் கோலைச் சுழற்றியபடி மந்திரக்கிழவி அந்தரத்தில் மிதந்தவாறு மூவரும் ஒளிந்திருந்த அறையை அண்மித்தாள்.



மூவருக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. "இளவரசர் களே! நமது முயற்சிகள் எல்லாம் இப்போது பயனற்றுப்போய் விட்டன. மந்திரக்கிழவியிடம் சிறைப்பட்டு அவளுக்காக நாம் பலியிடப்படப் போகிறோம்" என்று அழும் குரலில் மணிமொழி கூறினாள். ஆனால் இளவரசர்கள் இருவரின் முகத்திலும் பயத்துக்குப் பதிலாக மகிழ்ச்சி நிலவியதைக் கண்ட மணிமொழி குழப்பத்தில் ஆழ்ந்தாள். 'ஒருவேளை பயத்தில் இருவருக்கும் பித்துப் பிடித்து விட்டதோ?' என்று அவள் எண்ணினாள். ஆனால் அவள் நினைத்தது தவறென்பதை அடுத்த நொடியே உணரும் சந்தர்ப்பம் அவளுக்குக் கிடைத்தது. (தொடரும்)

## பாடசாலை நாள்

சென்ற கால நினைவுகள்
திரும்புகின்றன எம் மனதில்
துள்ளித்திரியும் காலமதில்
துடிப்பாய் பறந்தோமே



என்ன முடியாத மகிழ்ச்சிகள்
எண்ணித்தான் இனிவருமா?
எத்தனை சண்டைகள்
எத்தனை கோபதாபங்கள்

அந் நாள்களைத் திரும்பப் பெறமுடியுமா?
எனக் கேட்கிறது மனதலைகள்
[illegible] என்கிறது
[illegible] ஓடம்.


நு.பிரிந்தா, தரம் 9A, யா.மகாஜனக் கல்லூரி.

## மாணவர் தூரிகை


தரம் -9, உடுவில் மகளிர் பாடசாலை.


தரம் - 3D, யா/இந்து ஆரம்பப் பாடசாலை.


தரம் - 9, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.


தரம் - 7A, யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.


தரம் - 6A, யா/புனித பத்திரிசியார் கல்லூரி.



தரம் - 9, யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி.


தே.றொஜானந்தன், தரம் - 7B, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புலிகள் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டதும் ஈழக் கோரிக்கை தொடரவே செய்யும்

## மங்கள சமரவீர எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, மே 3

இலங்கையில் இடம்பெற்று வரும் யுத்த சூழ்நிலை குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பு விரைவில் தலையீடு செய்யக்கூடுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் விடுதலைப்புலிகள் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டாலும், ஈழக் கோரிக்கை தொடரக் கூடும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டமைப்பு ஆட்சியே ஈழக் கோரிக்கையைப் பலப்படுத்தியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ராஜகிரியில் அமைந்துள்ள கட்சித் தலைமைக் காரியாலயத்தில் உரையாற்றும்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்பத்தில் சில தமிழர்கள் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளித்து வந்தனர். ஆனால், தற்போது பெருந்தொகையான தமிழர்கள் ஈழக் கோரிக்கையை நியாயப்படுத்தும் முனைப்புக்களில் ஆர்வம் காட்டுகின்றனர்.

சர்வதேச நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையில் முறுகல் நிலையை ஏற்படுத்தும் வகையில் தற்போதைய ஆட்சியாளர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன், பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபாண்ட் மற்றும் நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோருக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இது மதிநுட்பமான செயலாகக் கருதப்பட முடியாது.

காவல்துறை உத்தியோகத்தர்களையும், பௌத்த பிக்குகளையும் படுகொலை செய்த கருணா போன்றோர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவராக நியமிக்கப்பட்டமை கட்சியின் துரதிர்ஷ்டமே - என்றார்.

(சி)


### இடம் மாற்றம்

இல 75 (121) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கடந்த பல வருடங்களாக இயங்கி வந்த "நிஷானந்தா ஜீவல்லறி" ஆகிய எமது ஸ்தாபனம் எதிர்வரும் 06.05.2009 புதன்கிழமை தொடக்கம் இல.06, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (கபிலா பாட்டா அருகில்) எனும் புதிய முகவரியில் இயங்க உள்ளது என்பதை எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

எமது புதிய முகவரி: நிஷானந்தா ஜீவல்லறி
இல.06, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கபிலா பாட்டா அருகில்)
தொ.பே.இல. 222 7985 (சி/557994)

### தேவை

போட்டோ பிரதி நிறுவனத்திற்கு பெண்கள் தேவை. படிகுபவர்களும் சமூகம் தரலாம். சனி, ஞாயிறு (02.05.2009, 03.05.2009) காலை 9 மணி தொடக்கம் பி.ப 4 மணி வரை நேரில் வரவும்.
சன்லைற் றைக்கிளினர்ஸ்,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
T.P: 2223871

### மலேசியாவில் உயர்கல்வி



UK, Australia பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்புக்கள்

இறுதியாண்டை விரும்பும் பட்சத்தில் UK அல்லது Australia இல் தொடர வசதி.

Engineering, Business, Accounting, IT உட்பட பன்வேறு துறைகளில் பட்டப்படிப்புக்கள்.

தொடர்புகளுக்கு:


K.R.Kumar
Hot Line: 071 5213154

No: 09, Quarry Road,
Colombo -06.
TP: (011) 2362994, (011) 7205129
E-mail: degreeinfo@consultant.com

சிவராதா புடைவை சாம்ராஜ்யத்தின்
மற்றும் ஓர் புதிய நிறுவனம்

## நியூ லிற்றில் இந்தியன்

முற்றிலும் குளிரூட்டப்பட்டது



இல.79, பெரியகடை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நிகழும் மங்கலகரமான 2009 ஆண்டு வைகாசி மாதம் 4 ஆம் திகதி (04.05.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு திறந்து வைக்கப்படுகின்றது.

உங்கள் முகூர்த்த தேவைகளுக்கான

- ★ பட்டுசாறிகள்
- ★ பட்டுவேட்டிகள்
- ★ சர்வாணி சூட்
- ★ கோட்சூட்
- ★ காற்சட்டை
- ★ சேட்
- ★ சல்வார் கிற்
- ★ சோலிகிற்
- ★ ஸ்கேட் & பிளவுஸ்
- ★ சாறிசூட் சூட்டிங்
- ★ சிறுவர்களுக்கான ரெடிமேட் ஆடைகள்

அனைத்திற்கும் உங்கள் தெரிவு

நியூ லிற்றில் இந்தியன்

அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

சிவராதா உரிமையாளரும் ...


எம் அகத்தில் இருந்து இதயம் நெகிழ வைக்கும்

### ஓராண்டு நினைவுத் துளிகள்...



பிறப்பு
1954.08.17

இறப்பு
2008.04.14

அமரர்
**கந்தையா தங்கராசா**
திதி. நவமி.(03.05.2009)

சொல்லியழுதால் தீருமோ அப்பா
சொந்தங்கள் சேர்ந்தழுதால் மாறிடுமோ நம் கவலை
ஆண்டொன்று சென்று விட்டது அப்பா
ஆனாலும் ஆறவில்லை எம் கவலை
உங்கள் கதைகள் எல்லாம் எம் நெஞ்சை
உருக்கிக் கொண்டு செல்லுதப்பா
நாளாந்தம் உங்கள் நினைவால்,
உருகித் தவிக்கிறோம் அப்பா
தினம் தினம் அழுகிறோம் அப்பா
உங்கள் தரிசனம் காணத்தவிக்கிறோம் அப்பா
விடியாத பகலாய் எங்கள் வாழ்வு
விடைகாண முடியா தொடர் கதையாகிப் போச்சு

குடும்பத்தினர்
ஏழாலை தெற்கு,
மயிலங்காடு.
மனைவி - த.உஷாராணி,
பிள்ளைகள்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
10.09.1934

உதிர்வு
03.04.2009

அமரர்
**சின்னத்தம்பி சதாசிவம்**

கடந்த 03.04.2009 அன்று இறையின்பத்தில் கலந்து கொண்ட எமது குடும்பத்தலைவன் அமரர் சின்னத்தம்பி சதாசிவம் அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் 01.05.2009 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் வில்லூண்றித் தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (03.05.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.
குடும்பத்தினர்.

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 10 |  | 03 |
| 10 | | 04 |
| 1917 | | 2009 |

திருமதி தம்புராமலிங்கம் தங்கச்சிப்பிள்ளை

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த எங்கள் தெய்வமே
எங்களை விட்டு விண்ணுலகு சென்ற போதும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்மை விட்டு நீங்காது.
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

161, ஆடியபாதம் வீதி,
கேணியடி,
திருநெல்வேலி.
குடும்பத்தினர்.
(84786)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னித் தமிழர்களின் உயிர் வாழும் உரிமை பறிக்கப்படுவதைத் தடுக்க போரை உடனடியாக நிறுத்த இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்!

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதுடில்லி சென்றிருந்தவேளை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் ஊடாக (16.04.2009இல்) வழங்கிய கடிதத்தின் தமிழ் வடிவம் இது.**

இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக ஏறத்தாழ 250ஆயிரம் தமிழ்பொதுமக்கள் இடம்பெயர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரத்தில் சுமார் 20 சதுர கிலோமீற்றர் பரப்பளவு நிலப்பகுதியில் தஞ்சமடையும்படியான நிர்ப்பந்தத்திற்குள்ளாகியிருக்கிறனர்.

இந்தப் பகுதியின் மீது இராணுவத் தாக்குதல்களை நடத்திக்கொண்டிருக்கும் இலங்கை அரசானது இந்தப் பிரதேசத்தை போர்நிறுத்தப் பிரதேசமாகவும் அறிவித்திருப்பதாகப் கூறிக்கொள்கின்றது. போர்நிறுத்தப் பிரதேசத்தின் எல்லை வரைக்கும் உள்ள எல்லாப் பகுதியையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விட்டதாகக் இலங்கை அரசு கூறிக்கொள்கிறது.

**ஊடகங்களுக்கு அனுமதியில்லை**

இந்தப் பிரதேசத்துக்குள் செல்வதற்கு எந்த ஒரு சுதந்திர ஊடகமும் அனுமதிக்கப்படுவதில்லை. ஐ.நா.முகவர் அமைப்புக்கள், செஞ்சிலுவை சர்வதேசக் குழு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அப்பகுதிக்குச் செல்வது கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்திற்குள் என்ன நடக்கிறது என்ற உண்மை வெளியில் தெரியாமல் இருப்பதற்காகவே அரசு இந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எதுவானாலும், சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள், ஐ.நா.முகவர் நிறுவனங்கள் வழங்கியுள்ள அறிக்கைகள் மூலமும் தினசரி பாதிக்கப்படும் மக்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் பல்வேறு வட்டாரங்களிலிருந்து உறுதிப்படுத்தப்பட்ட விடயங்களி லிருந்தும் இந்த வருடத்தில் மாத்திரம் இன்று வரையில் 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அதற்கு இரட்டிப்பான அளவில் காயங்களுக்குள்ளாகியிருக்கின்றார்கள் என்பது தெரியவந்துள்ளது.

இலங்கை அரசு மறுத்தபோதிலும் இந்தப் படுகொலைகள் இலங்கை ஆயுதப் படைகளால் தமிழ் மக்கள் குடியிருக்கும் பகுதிகள் மீது நடத்திய குண்டு வீச்சுக்களாலேயே ஏற்பட்டிருக்கின்றன என்பது விவாதத்திற்கு இடமின்றி பல சர்வதேச அமைப்புக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**தமிழ்மக்கள் மீது அக்கறை இல்லை**

புலிகளுக்கு எதிராக அரசாங்கம் முன்னெடுத்துவரும் இந்த யுத்தத்தின் உண்மை நிலை என்னவென்றால் அரசாங்கமோ அதன் ஆயுதப்படைகளோ தமிழ்ப் பொது மக்களின் பாதுகாப்புக் குறித்தோ அவர்களின் நலன்கள் குறித்தோ எவ்விதமான அக்கறையும் காட்டுவதில்லை என்பதே. இலங்கை அரசின் நடவடிக்கைகள் சந்தேகத்திற்கு இடமின்றி தமிழ் மக்களை கொன்றொழிப்பதுதான் என்பதை எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றது.

எமது உடனடி அக்கறை யாதெனில் போர் நிறுத்தப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் அடிப்படை உரிமைகளும் அவர்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்குமான அவர்களின் உயிர்வாழ்வதற்கான உரிமைகள் நிலைநிறுத்தப்படவேண்டும் என்பதேயாகும்.

இது தொடர்பாக பின்வரும் விடயங்களை குறிப்பிட விரும்புகின்றோம்.

* போர்நிறுத்தப் பிரதேசத்தின் எல்லைப் பகுதியை இலங்கை இராணுவம் அடைந்துவிட்டது. இராணுவத் தாக்குதலைத் தொடர்ந்து நடத்துவது என்ற உறுதிப்பாட்டை அரசு தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டது. போர்நிறுத்தப் பிரதேசத்தையும் தன்வசமாக்க அரசு நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்துள்ளது.

* போர்நிறுத்த வலயத்திற்குள் மேற்கொள்ளப்படும் எந்தவித இராணுவத் தாக்குதலும் தமிழ்ப் பொதுமக்களை மேலும் அதிகமாக பாதிக்கும். இதுவரை தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களை விட மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். குண்டு வீசுவதும் ஷெல் வீசுவதும் மேலும் ஆயிரக்கணக்கான தமிழ்மக்களைக் கொன்றொழிப்பதாகவும் காயப்படுத்துவதாகவுமே இருக்கும்.

* சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், குறிப்பாக இந்தியாவிலுவுள்ளவர்கள் விடுத்துள்ள அறிக்கைகளின்படி இலங்கை அரசாங்கம் தடைசெய்யப்பட்ட சட்டவிரோத ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றது. குறிப்பாக நரம்புத் தாக்கங்களை ஏற்படுத்தும் இரசாயன குண்டுகளையும் பெரும் எடுப்பில் மனிதர்களைக் கொன்றொழிக்கும் குண்டுகளையும் கொத்துக் குண்டுகளையும் பயன்படுத்துகின்றது என்ற கவலையை ஏற்படுத்தியுள்ளது.

* இவ்வாறு பெருந்தொகையில் மக்கள் கொல்லப்படுவதற்கான குண்டுகள் பாவிக்கப்படுவதானது அங்கு எஞ்சியுள்ள மக்களையும் கொன்றொழிப்பதாக இருக்கப்போகிறது என்ற நியாயமான கவலை எழுந்துள்ளது.

* பெரும் எடுப்பில் மக்கள் உயிர் வாழ்வதற்கான உரிமை போர்நிறுத்தப் பகுதியில் மறுக்கப்படுவதன் காரணமாக ஏற்படப்போகும், நினைத்துப் பார்க்கமுடியாத போர் அழிவினைத் தடுத்து நிறுத்துவதற்கு அவசர நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

இந்த நிலையில் பின்வருவனவற்றை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை அவசரமாக எடுக்கும்படி இந்தியாவை நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

## இந்தியாவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்து

(அ) போர்நிறுத்தப் பிரதேசத்தில் எல்லாவித இராணுவத் தாக்குதல்களும் நிறுத்தப்பட வேண்டும். போர்நிறுத்தப் பகுதியில் உள்ள கணிசமான எண்ணிக்கையிலான தமிழ் மக்களின் உயிர் வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்வதற[்கா]ன சரியான வழி இதுவேயாகும். இந்த மக்கள தமிழர்களாக இருக்கிறார்கள் என்[ப]தற்காக கொல்லப்படலாகாதென்று தெரிவித்துக்கொள்கின்றோம்.

(ஆ) அவ்வாறு இராணுவத் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டுவிட்டன என்பதை உறுதிப்படுத்தும் வகையில் ஏககாலத்தில் ஐ.நா.வின் ஆதரவில் தமிழ் மக்கள் தொடர்பான சகல சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களும் ஆராயப்பட்வேண்டும். அதன் மீது பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

(இ) இந்த விடயம் மிகவும் அவசரமானதாகக் கவனத்தில் எடுக்கப்படவேண்[டு]மென நாம் வலியுறுத்துகின்றோம். இ[ல்லையேல்] ஏற்படுகின்ற தாமதமானது மேலும் பெ[ரும்] எடுப்பி லான தமிழ் மக்கள் உ[யி]ர் வா[ழும்] உரிமையை இழக்கும் நிலை ஏற்பட[்டு] விடக்கூடும். (ப)

# பன்றிக் காய்ச்சல்

மெக்சிக்கோவில் எங்கு பார்த்தாலும் முகமூடியணிந்த மனிதர்களையே காண முடிகின்றது.

பஸ்கள், கார்கள், அலுவலகங்கள் எங்கிலும் முகமூடியணிந்தவர்களை



கடந்த ஒரு வாரகாலமாக அவதானிக்க முடிகிறது.

சனநெரிசலும் மிக்க வீதியொன்றில் முகமூடியணிந்த படி பத்திரிகை விற்கும் நபரின் கையிலுள்ள செய்தித்தாள் 103 பேர் பலி என்கிறது.

எனினும், மெக்சிக்கோவின் சுகாதார அமைச்சர், பன்றிக் காய்ச்சல் (Swine Fever) காரணமாக இதுவரை 149 பேர் மரணடைந்துள்ளனர் என்கிறார்.

மெக்சிக்கோவின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாத போதிலும் கனத்த அமைதியும் அச்சமும் காணப்படுகின்றது.

உலகை புதிதாக அச்சுறுத்திக் கொண்டிருக்கும் பன்றிக் காய்ச்சலின் மையமாக தாம் உள்ளதை அவர்கள் உணர்ந்துள்ளனர்.

மருத்துவமனைகளில் முகமூடியணிந்த மருத்துவர்களையும் ஊழியர்களையும் காணமுடிகிறது.

எனினும், மருத்துவர், பணியாளர்கள் கருத்துக் கூற மறுக்கின்றனர். அதிகாரிகளிடம் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட மருத்துவமனையின் சிற்றூழியர் எனத் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும் ஒருவர் பன்றிக் காய்ச்சல் காரணமாக அங்கு 30 பேர் பலியாகியுள்ளனர் என்றும், பணியாளர்கள் சிலரும் இதில் அடங்குகின்றனர் என்றும் தெரிவித்தார்.

தொற்றுநோய்க்கு ஆளானவர்களுடன் முதலில் பணியாற்றிய தாதி ஒருவரும் இறந்துவிட்டார் என்றார்.

மெக்சிக்கோ மக்கள் இன்னமும் பதற்றப்படாத போதிலும் அதிகாரிகள் பல பொதுக் கட்டடங்களை மூடியுள்ளனர்.

முக்கிய உதைபந்தாட்டப் போட்டியொன்று மூடப்பட்ட அரங்கினுள் இடம் பெற்றது.

பெருமளவு மக்கள் ஒரே இடத்தில் கூடுவதை அதிகாரிகள் தவிர்க்க முயல்கின்றனர். வைரஸ் பரவலாம் என்ற அச்சமே இதற்கு காரணம்.

மெக்சிக்கோவில் முகமூடிகள் விற்று தீர்ந்த பின் நிலைமை மோசமடைந்தால் மெக்சிக்கோ நகரின் பொது போக்குவரத்தை முற்றாக நிறுத்தி விடுவேன் என்கிறார் நகர முதல்வர்.

இது இடம்பெற்றால் 20 மில்லியன் மக்களின் வாழ்க்கை முற்றாக ஸ்தம்பிக்கலாம்.

முழுமையாக என்னவென்று தெரியாத வைரஸின் தாக்கத்தில் மெக்சிக்கோ தற்போது உள்ளது.

பன்றிக் காய்ச்சல் எவ்வளவு தூரம் ஆபத்தானது என்பதே பாரிய புதிராகவுள்ளது.

பன்றிகளைத் தாக்கும் ஒரு வகை வைரஸினால் (Influenza A) உண்டாகும். சுவாச நோயே இந்த பன்றிக் காய்ச்சல்.

முன்னர் இது மனிதர்களைத் தாக்கியதில்லை. ஆனால், இருமல், தும்மல் மூலமாகத் தற்போது மனிதர்கள் மத்தியில் இது பரவத் தொடங்கியுள்ளது.

உலக சுகாதார நிறுவனம் இதுவரை பார்த்திராத வகையை சேர்ந்தது இது என்கிறது. 1981 இல் பாரிய தொற்றுகாய்ச்சல் அவலத்தைத் தோற்றுவித்த HINI வைரஸின் புதுவடிவமே இது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், HINI வைரஸின் காணப்படும் வேறுபாடு என்ன வென்றால் மனிதர்கள், பறவைகள் மற்றும் பன்றிகளை தாக்கும் வைரஸ்களின் மரபணுக்கள் இதில் காணப்படுவதாகும்.

காய்ச்சல் வைரஸ்கள் மரபணுக்களை பரிமாற்றம் செய்யும் திறன் கொண்டவை. இப்புதிய ஏஜுமீஜ வைரஸும் இவ்வாறு பல வைரஸ்களின் வடிவங்களின் கலவையால் உருவானது என எதிர்வு கூறப்படுகிறது.

வைரஸ்கள் இவ்வாறு கலப்பதற்குக் காரணமாக பன்றிகள் காணப்படுகின்றன.

பன்றிக் காய்ச்சலுக்கான அறிகுறிகள் சாதாரண காய்ச்சலுக்கான அறிகுறிகள் போன்றே காணப்படும் (காய்ச்சல், இருமல், உடல் வலி, களைப்பு)

இதற்கான தற்போதைய சிகிச்சைகள் பலனளிப்பவையாக இருந்தாலும் தடுப்பு மருந்தென்று எதுவுமில்லை என சுட்டிக்காட்டப்படுகின்றது.

இப்புதிய வகை வைரஸ் மனிதர்கள் மத்தியில் பரவக்கூடியதென்பதால் சர்வதேச பாரிய தொற்றுநோயாக மாறக்கூடிய ஆபத்துக் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1918இல் ஸ்பெயினில் பரவிய வைரஸ் காய்ச்சலே மிக மோசமானதாகக் கருதப்படுகின்றது.



HINI வைரஸின் ஒரு வடிவத்தினால் உலக சனத்தொகையில் 40 வீதமானவர்கள் பாதிக்கப்பட்டனர். 50 மில்லியன் மக்கள் கொல்லப்பட்டனர். மீண்டும் 1957இல் பரவிய ஆசிய வைரஸ் காய்ச்சல் 2 மில்லியன் மக்களை பலிகொண்டது. பின்னர் 1968 இல் ஒரு மில்லியன் மக்களுக்கு ஹொங்கொங்கில் இந்த காய்ச்சல் முதல் முதலில் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் உலகெங்கும் பரவியது.

தற்போதைய பன்றிக் காய்ச்சல் சர்வதேச ரீதியில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்கிறது உலக சுகாதார ஸ்தாபனம்.

எனினும், சுகாதார நிபுணர்கள் நிலைமையை தற்போதைக்கு மதிப்பிட முடியா தென்கின்றனர்.

இதேவேளை, "உலகம் 1968 இற்கு பின்னர் மீண்டுமொரு பாரிய வைரஸ் காய்ச்சல் அவலத்தை சந்திக்கக்கூடிய நிலையிலுள்ளது. பல மில்லியன் மக்கள் பாதிக்கப்படலாம்" என்றும் சுகாதார



நிபுணர்கள் கூறியு[ள்ளன]ர். 30 முத[ல்] வருடகாலத்திற்குள் வை[ரஸ்]கள் மீண்டு[ம்] தாக்கும் என்பது மதி[ப்பீ]டு.

பன்றிக் காய்ச்சல் ஏற்கனவே பரவ[த்] தொடங்கியுள்ள விமானப் பயண யுக[த்]தில் இதனை கட்டுப்படுத்துவது கடின[ம்].

உலக சுகாதார ஸ்[தா]பனம் விமான பயணங்களை கட்டுப்படுத்துவதால் பய[ன்] எதுவுமிருக்காது என்கிறது.

மேலும் பிரயாணிகளை சோதனையிடு வதாலும் பயனில்லை எனவும் தொற்று நோய்க்கான அறிகுறிகளைக் கண்டுபிடிக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

1960இற்கு பின்னர் எதிர்பார்க்கப்பட்ட தருணமிதுவாக இருக்கலாம் என்கிறது உலக சுகாதார நிறுவனம்.

ஆறு வருட காலத்துக்கு முன்னர் தென்கிழக்காசியாவில் தோன்றிய பறவைக் காய்ச்சல் மீண்டும் தாக்கலாம் என்ற அச்சத்தில் உலக நாடுகள் அதனை எதிர்கொள்ள தயாராக உள்ளன.

**ஏ.ஆர்**

பறவைக் காய்ச்சல் போன்ற தொற்று பரவத் தொடங்கினால் மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கைகளை 150 நாடுகள் உருவாக்கியுள்ளன. இவற்றில் சர்வதேச ரீதியில் பரஸ்பரம் ஒத்துழைப்பதும் போக்குவரத்தை கட்டுப்படுத்துவதும் அடங்கும்.

இதன் மூலமாக பன்றிக் காய்ச்சல் போன்ற எந்தவொரு தொற்று ஆபத்தையும் எதிர்கொள்ள உலகம் தயாராகவுள்ளது என்கிறது உலக சுகாதார ஸ்தாபனம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ரஜனி குணரத்தினம் (ராசாத்தி)



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாவும் வழக்கம்பரை, தொல்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரஜனி குணரத்தினம் நேற்று (02.05.2009)சனிக்கிழமை காலை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் முத்துக்குமாரு குணரத்தினம் (K.K.S.சிமெந்து தொழிற்சாலை உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் முத்துக்குமாரு -மகாலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தையல்நாயகி(கனடா), தம்பதியரின் அன்பு மகளும், யசிந்தன், பிரதீபா (கிராம சேவையாளர், J/175, பண்ணாகம்) அன்புத் தாயும் வ.பரமேஸ்வரனின் (மாவட்ட நீதிமன்றம்-யாழ்.) அன்பு மாமியும் கிருசிகனின் அன்புப் பேர்த்தியும், இந்திராதேவி, அமரர் சிவானந்தராசா, பத்மாவதி, சிறீஸ்கந்தராசா(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தேவஞானி, அமரர் கெங்காதரன், புஸ்பராணி(பிரான்ஸ்), நகுலேஸ்வரி, தேவராஜா (பிரான்ஸ்), கேசவன்(நோர்வே), கணேசராசா (லண்டன்) நவராணி(பிரான்ஸ்), சிவநாதன் (பிரான்ஸ்), கல்கி, கணேசராசா, கமலாதேவி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.05.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வழக்கம்பரை,
தொல்புரம்
தொ.பே:-0212225448

தகவல்:
குடும்பத்தினர்.

(85003)

## கந்தையா கனகசபாபதி

(Rtd., Railway Head Guard)



கோண்டாவில், உப்புமடத்தைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகசபாபதி 01.05.2009 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் யோகரத்தினத்தின் அன்புக் கணவரும் ரஜனி (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி), ரஞ்சித் (ரெலிகொம்,கொழும்பு) ஆகியோ ரின் அன்புத் தந்தையும் சிறிகரன் (உபஅதிபர், சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்), பூம்பா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனும் இராஜரட்ணம், அமரர் இரத்தினசபாபதி மற்றும் குணரட்ணம், பாக்கியலக்ஷ்மி, இராஜலக்ஷ்மி, புவனராணி, விலாசினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவயோகம், அமரர் தர்மாவதி மற்றும் செல்வநாயகி, அமரர் வேலாயுதபிள்ளை, அமரர் பாலசிங்கம் மற்றும் தர்மரட்ணம், அமிர்தரட்ணம், பஞ்சரட்ணம் (மாப்பியன் மில், மானிப்பாய்), சுகிர்தரத்தினம், அமரர் விஜயரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அமரர் தனபாலசிங்கம் மற்றும் மகேந்திரன் ஆகியோரின் சகலனும் ரகுராஜ், ரூபினி, டிலக்ஷனா, அர்ச்சனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.05.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரிஒழுங்கை,
மானிப்பாய்.

(85005)

தகவல்:
குடும்பத்தினர்.

# அனைத்துத் தரப்பினரிடமும் நிவாரண உதவிகளை கோருகின்றது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு

கொழும்பு, மே 3

இலங்கையின் இடம்பெயர்ந்த, காயமடைந்த மற்றும் உடல் நலக் குறைவான பல்லாயிரக்கணக்கான பொதுமக்களைப் பாதுகாக்க அனைத்துத் தரப்பினரும், உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்பிவைக்க வேண்டும் என செஞ்சிலுவை சர்வதேச குழுவின் ஆசிய நாடுகளுக்கான திட்டத் துணைத் தலைவர் மோனிகா செனரெலி தெரிவித்துள்ளார்.

பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் தொடர்ந்தும் பாதுகாப்பு வலயத்தில் அபாயகரமான சூழலை எதிர்நோக்கியுள்ளனர் என சர்வதேச செஞ்சிலுவைக் குழு தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி முதல், சுமார் 12 ஆயிரத்து 400 பேரையும் அவர்களின் உறவினர்களையும் புதுமாத்தளனில் இருந்து கப்பல் மூலம் செஞ்சிலுவை சர்வதேச குழு அழைத்து வந்துள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை உலக உணவுத் திட்டம் வழங்கிய 30 தொன் உணவுப் பொருள்கள் கப்பல் மூலம் ஏற்றிச்செல்லப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ஒரு லட்சம் பேர் வரை அரச கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி வந்துள்ளனர். அவர்களுக்கான அத்தியாவசிய சேவைகளை வழங்க செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தயாராக உள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## சமய சந்நிதிகளில்

நல்லூர்,மே3

திருநெல்வேலி நீலாயதாக்ஷி சமேத காயாரோஹண சுவாமிகள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 19 நாள்கள் நடைபெறும்.

23ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்குத் தேர்த்திருவிழாவும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 25ஆம் திகதி திங்கட்கிழமை பூங்காவனமும் இடம்பெறும். (203-111)

* * *

சங்கானை,மே3

மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலயத் திருவிழா கடந்த 27ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத்திருவிழா இடம்பெறும். (203-29)

* * *

சங்கானை அரசடி ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேக தின மணவாளக் கோல விழா எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலகரும் தர்மகர்த்தாகவுமாகிய சிவஸ்ரீ அ.இரத்தினசாமிக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தானக் குரு சிவஸ்ரீ சு.ஸ்ரீ றங்கநாதக் குருக்கள் பிரதம குருவாக விழாவினை நடத்தவுள்ளார்.

காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து விஷேட பூசையும் சுவாமி வீதியுலா வருதலும் இடம்பெற்று பிற்பகல் ஒரு மணியளவில் அன்னதானம் இடம்பெறும். (203-29)

* * *

நல்லூர்,மே3

யாழ்.வண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய சுந்தர சுவர்ண பஞ்சதள இராஜகோபுர பஞ்சகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் 6ஆம் திகதி புதன்கிழமை காலை 6.34 மணிமுதல் 8.16 மணிவரை நடைபெறும். (203-111)

## கண்ணீர் அஞ்சலி

புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபையின் முன்னைநாள் செயலாளர் (காரியதரிசி)

### கந்தையா கதிரித்தம்பி

அவர்கள் 01.05.2009 இல் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சித்தி விநாயகரை வேண்டுகின்றோம்.

பரிபாலன சபையினர்,
ஆயாக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தானம்,
புன்னாலைக்கட்டுவன்.

## இலவச தையற்பயிற்சி

GOC அறக்கொடை நிதியத்தினால் பாதிக்கப்பட்ட வலுவற்ற, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெண்களுக்கு மானிப்பாய், நல்லூர், பருத்தித்துறை ஆகிய இடங்களில் முற்றிலும் இலவசமாக இந்தப் பயிற்சி நடத்தப்படும். தையற்பயிற்சி சர்வதேச தரத்திலான சான்றிதழ் வழங்கப் படும்.

இப்பயிற்சி நெறியை பின்பற்றவிரும்பும் பெண்கள் தங்களுடையதும், குடும்பத்தினுடையதும் விவரங்களுடன் நாளை (04.05.2009) திங்கட்கிழமை, (05.05.2009) செவ்வாய்க்கிழமை நேரில் வரவும்.

பயிற்சி நெறி 06.05.2009 புதன்கிழமை ஆரம்பமாகும்.

GOC அறக்கொடை நிதியம்
C/O British Business School
140, கோயில் வீதி, நல்லூர்.
T.P.: 077- 3627055, 077 4083656,
021- 222 5796.

(558299)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி
சாந்தநாயகி
நவயோகராசா
(கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்)

எமது திணைக்களத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்த திருமதி சாந்தநாயகி நவயோகராசா அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அலுவலகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கால்நடை வைத்தியரும் உத்தியோகத்தர்களும்
கால்நடை வைத்திய அலுவலகம், கோப்பாய்.

(85001)

## இடம்பெயர்ந்தோருக்கான அத்தியாவசிய பொருட்கள் சேகரிப்பு யாழ் மக்களிடம் ஓர் வேண்டுகோள்!

GOC- அறக்கொடை நிதியம், சமூகசேவைகள் அமைச்சின் அங்கீகாரத்துடன், வன்னியிலிருந்து யுத்தத்தினால், பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த எமது உறவுகளுக்கு உதவும்முகமாக பொது மக்களிடமிருந்து பொருட்களை சேகரித்து, சமூக சேவைகள் அமைச்சினூடாக வழங்கவிருக்கின்றோம்.

**நீங்கள் வழங்கக்கூடிய பொருட்கள்:-**

- நல்ல நிலையில் உள்ள ஆண், பெண், குழந்தைகளுக்கான ஆடைகள்
- குழந்தைகளுக்கான பால்மா வகைகள், உலர் உணவு வகைகள்.
- அரிசி, பருப்பு, பிஸ்கட் வகைகள், மினரல் குடிதண்ணீர் போத்தல்கள்

**உடனடியாக பின்வரும் முகவரிகளில் கொடுத்துதவவும்.**

| | |
|---|---|
| நல்லூர் (1) | : No : 140, Temple Road, Nallur, Jaffna. நல்லூர் (2) : No : 34, Saddanathar Road, Nallur, Jaffna. |
| சுன்னாகம் | : Lakshmi Cottage ( Near the New Court), K.K.S Road, Mallakam. |
| மானிப்பாய் | : 252, ஆலடிச் சந்தி, Jaffna Road, Manipay. |
| புலோலி | : Sri Pathmanathan Illam, Manthikai. |

சித்தன்கேணி : GOC- டச்சு வீதி, வட்டு கிழக்கு. / அரியாலை : GOC- 107, A.V வீதி.

GOC- அறக்கொடை நிதியம்- 140, கோவில் வீதி, நல்லூர்.
தொ.பேசி : 0774083656, 0773627055, 0776646357

## ஐங்கரன் திருமண சேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், UK Citizen 28, 33, 35, 40 வயது, கனடா Citizen 30, 34 வயது, பிரான்ஸ் Citizen 28 வயது, சுவிஸ் Citizen 38, 42 வயது. கொலன்ட் Citizen 36 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். இவர்கள் விரைவில் கொழும்பு வரவுள்ளனர். 24 மணி நேர தொலைபேசி வசதி உண்டு.

லண்டன் தொடர்பு: 00447535384166
00447508275863
Fax No.: 00442086810701, 00442086720673.

## கணனி வலைப்பின்னலில் இணையும் இலங்கை வங்கியின் அச்சுவேலிக்கிளை

கோப்பாய், மே 3

இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளையின் கணனி வலைப்பின்னல் இணைவும் தன்னியக்கப் பணப்பரிமாற்ற சேவையும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணம், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்துகொள்வர்.

ஆசியுரைகளை சிவப்பிரம்மஸ்ரீ க.ஜெயராமக்குருக்கள், வணபிதா.பீற்றர் துரைரட்ணம் அடிகளார் ஆகியோர் வழங்குவர்.

(203-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இவர்களின் இன்றைய கதியே தொடருமா?

போர் நடைபெறும் பகுதிக்குள் சிக்குண்டிருப்பது ஒருவித வேதனை. எறிகணைகள் மற்றும் ஆயுதங்களின் தாக்குதலில் அகப்பட்டு எப்போது உயிர் பிரியுமோ என்ற மரண பயம் வினாடிக்கு வினாடி மக்கள் மனங்களைக் கொன்று கொண்டிருப்பது அந்த வகை வேதனை.

ஆனால் உயிரைத் தக்க வைத்து விட்டோம், அது பறிக்கப்படும் ஆபத்து 90 முதல் 95 வீதம் நீங்கிவிட்டது என்ற ஆறுதலுடன் நலன்புரி நிலையங்களுக்குப் போய்ச் சேர்ந்த பின்னர் படும் வேதனை இன்னொரு விதம். எதுவுமற்ற ஏதிலிகளாக, உடுத்த உடையுடன் முல்லைத்தீவுப் பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேறி வந்த மக்கள்-வவுனியாவில் நலன்புரி நிலையங்களில் அடைபட்டிருக்கும் மக்கள்-படும் துன்ப துயரங்கள் நீண்ட நிரல் வரிசைப்படுத்தக் கூடியவை. இங்கே வந்து இத்துணை வடிவங்களில் அல்லற்பட்டு ஆற்றாது விநாடிக்கு விநாடி செத்துக்கொண்டிருப்பதை விட, ஆயுதங்களால் தாக்குண்டு ஒரே முறையில் மடிந்திருக்கலாம் என்று மனம் சலிப்புற்று விரக்தி நிலைக்குத் தள்ளப்படும் அளவுக்கு, நலன்புரி நிலையங்களில் நாள்களைக் கழிப்பது நரகலோக வாழ்வாக மாறியிருப்பதனை தூரத்தே இருந்து பார்க்கவே மனித நேயம் உள்ள எந்த மனிதனுக்கும் மனதை வதைக்கும்.

வவுனியா நலன்புரி நிலையங்களுக்குச் சென்று, அங்குள்ள மக்களைக் கண்டு, கதைத்து வந்தவர்கள் கூறும் சோகக் கதைகள் எவர் மனதிலும் இரக்கம் பிறக்க வைக்கும் காட்சிகளாகப் பதியக்கூடியவை. கடந்த மாதம் இருபத்திநான்காம் திகதி, தமது இலங்கைக்கான சிறப்பு வருகையின் போது வவுனியா நலன்புரி நிலையத்தில் உள்ளவர்களைச் சந்தித்துப் பேசிய - அவர்களின் நிலைமையை நேரில் கண்ட, கேட்ட-வாழும் கலை அமைப்பின் தலைவரும், ஆன்மீகக் குருவுமான ஸ்ரீஸ்ரீரவிசங்கர் குருஜி தெரிவித்த தகவல்கள் கேட்டவர் மனங்களை உருகவைப்பவை.

பிச்சைக்காரர்களையே காணாத மக்கள்,மற்றவர்களிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். அவர்களில் பெரும்பாலானோர் மனநிலை பாதிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்பதனைக் காண முடிந்தது. அங்கு மனிதனாகப் போகமுடியாது. மனதைக் கல்லாக்கிக் கொண்டுதான் போக வேண்டும் - என்று மனம் வெதும்பியிருக்கிறார் ரவிசங்கர் குருஜி.

அவர் தமிழ் பேசத் தெரிந்த அயல்நாட்டவர், ஓர் ஆன்மீகவாதி என்ற வகையில் மக்களுடன் நெருங்கி உரையாடி அவர்களின் மனநிலைகளை அளந்து சென்றிருக்கிறார். உண்மையைச் சொல்லத் தயங்க வேண்டிய நிலைக்கு அப்பாற்பட்ட ஆன்மீக யோகி. அதனால், அவர் கூடவே இந்திய அரசாங்கத்தையும் அரசியல்வாதிகளையும் அவர்களின் போக்கையும் கண்டித்தார் மன வேதனையுடன்.

வன்னியிலிருந்து வந்து, வவுனியா நலன்புரி நிலையங்களில் அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி வாழும் மக்கள் மூன்று வேளையும் பிச்சைக்காரர்கள் போன்று உணவுக்குக் கையேந்துகிறார்கள். அவர்கள் சோர்வடைந்த நிலையில் காணப்படுகிறார்கள். அந்த மக்களின் நிலைமை பரிதாபகரமானது, வேதனைக்குரியது என்று மனம் வெதும்பியுள்ளார் இன்னுமொரு ஆன்மீகக் குருவான யாழ்.மறை மாவட்ட ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை. அவர் தாம் நேரில் கண்டதை மனம் தாங்காது, மனம் திறந்து மிக நீட்டமாகவும் கூறியுள்ளார்.

அரசாங்கத்தினால் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள கூடாரங்கள் பாதுகாப்பானவை அல்ல; சர்வதேச தரம் வாய்ந்தவை அல்ல. மக்கள் களைத்துச் சோர்வடைந்த நிலையில் இருக்கிறார்கள். குளிப்பதற்குப் போதிய இடவசதிகள் இல்லை. சுத்தமான குடிதண்ணீர் இல்லை. மருத்துவ வசதிகள் போதியனவாக இல்லை. உழைத்து வாழ்ந்த மக்கள் விரக்தியுடன் வெறுங்கையுடன் இருக்கின்றனர் - என்று நலன்புரி நிலைய மக்களின் அவலத்தைத் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

இடம்பெயர்ந்தவர்களின் தேவைகளை உரிய வகை யில் நிறைவேற்றாத அரசு, உள்நாட்டு மக்கள் மற்றும் உறவுகள் உதவுவதற்கு அனுமதியும் வழங்குவதாக இல்லை. நிவாரணப் பொருள்களைத் தாங்கள் கொண்டு போய்க் கொடுப்பதாக இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர். மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்கும் இப்படி ஒரு மறைமுக மான தடை!

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பணிகளை அரசு செவ்வனே செய்யவில்லை என்பதை வவுனியாவுக்குச் சென்றிருந்த ஐ.நா.அதிகாரி ஜோன் ஹோம்ஸ் மற்றும் பிரிட்டிஷ், பிரெஞ்சு வெளிநாட்டமைச்சர்கள் மில்லிபான்ட், பேர்னாட் கௌச்னர் ஆகியோரும் வன்னி நலன்புரி நிலையங்களைச் சென்று பார்வையிட்ட பின்னர் தெரிவித்திருந்தனர். அவர்களும் இடம்பெயர்ந்தோருக்கு உரிய வசதிகள் செய்யப்பட வில்லை என்பதனையே பிரதானமாகச் சுட்டிக்காட்டி உள்ளனர்.

தமது உழைப்பால், வீடுவாசல்களில் வசதியாக வாழ்ந்த மக்கள், பிச்சைக்காரர்களாக மாற்றப்பட்டி ருக்கிறார்கள்; போதிய அடிப்படை வசதிகள் இன்றி நோயாளிகளாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். அவர் களுக்கு உறவினர்கள் மற்றும் வெளியார் உதவுவதற் குத் தடை போடும் அரசு, அந்த மக்களை நீண்ட நாள் "கைதிகள்" ஆக்கி உடலாலும் உள்ளத்தாலும் மெலிந்தும் நலிந்தும் போகச் செய்து அடிமை களாக்கப் போகிறதா அல்லது கண்ணுக்குப் புலப்படாத விதத்தில் உள்ளூர்ந்து சாகடிக் கப்போகிறதா? அவர்களும் மனிதர்களே என்று மனந்திருந்தி, அரசு போதிய வசதிகளைச் செய்யும் என்று இப்போதைய செயற்பாடுகளை வைத்து எவரும் நம்புவதற்கில்லை.

நிர்க்கதிக்கு ஆளாகி இருக்கும் வன்னி வாழ் தமிழ் மக்களை, மிகக் குறுகிய காலத்தில் அவர்களின் முந்திய பிரதேசங்களில், சொந்த இடங்களில் மீளக்குடியேற்ற வேண்டும். ஐ.நா. போன்ற சர்வதேச மனிதாபிமான அமைப்புகளே அதற்கு உந்துசக்தியாக இருக்க முடியும்.

# செய்தியாளரை தாக்குவோரைச் சட்டத்தின் முன் நிறுத்த சகல விதமான முயற்சிகளையும் மேற்கொள்ளுங்கள்

## உலக ஊடக சுதந்திரதினச் செய்தியில் ஐ.நா.செயலர்



ஜெனீவா, மே.03

உலகெங்கிலும் செய்தியாளர்கள் தாக்குதல்களுக்கு ஆளாவது அதிகரித்து வருவது குறித்து நான் அதிர்ச்சியடைந்துள்ளேன். உலக பத்திரிகை சுதந்திர தினமும் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவும் இவ்வருடம் கொண்டாடப்படும் நிலையில், செய்தியாளர்கள் மீது தாக்குதல் நடத்துவோரை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு சகலவித முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு அனைத்து சமுதாயங்களையும் கேட்டுக்கொள்கிறேன்.இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் உலக பத்திரிகை சுதந்திர தினத்தையொட்டி விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

உலக பத்திரிகை சுதந்திர தினம், ஒவ்வொரு வருடமும் மே மாதம் 3ஆம் திகதி உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. இன்று 16ஆவது ஆண்டாக அனுஷ்டிக்கப்படும் இத்தினத்தை யொட்டி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஒரு சமூகத்தின் மிக இளம் உறுப்பினர்களில் இருந்து முழுமையான பிரஜைகள் வரை அவர்களது அரசியல் தலைமைத்துவத்துடன் அனைவரும் தகவலை அறிந்து கொள்வதற்கான வசதிகள், உயிர் வாழ்வுக்கு நீர் எவ்வளவு அவசியமோ அவ்வளவுக்கு அவசியமானவை. அறிவானது எதையும் கற்பனை செய்வதற்கும் மாற்றியமைப்பதற்குமான எமது ஆற்றலை நிலைநாட்டுகிறது.

தகவல் தாராளமாக பரப்பப்படும் போது, மக்கள் அவர்களது வாழ்க்கையை கட்டுப்படுத்துவதற்கான சகல அம்சங்களையும் பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால், தகவல் பிரவாகம் தடைப்படுத்தப்படும் போது அரசியல் காரணமாக இருந்தாலும் தொழில்நுட்பக் காரணங்களாக இருந்தாலும் செயற்பாட்டுக்கான எமது ஆற்றல் முடக்கப்படுகிறது.

தாராளமானதும், பாதுகாப்பானதும், சுதந்திரமானதுமான ஊடகம் சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான அத்திபாரங்களில் ஒன்றாகும். பத்திரிகை சுதந்திரத்தின் மீதான தாக்குதல்கள் சர்வதேச சட்டத்திற்கும் மனிதநேயத்திற்கும் சுதந்திரத்திற்கும் எதிரான தாக்குதல்களாகும். ஐக்கிய நாடுகள் ஆதரிக்கும் அனைத்து விடயங்களுக்கும் எதிரான தாக்குதல்கள் ஆகும். இன்று செய்தியாளர்கள் உலகெங்கிலும் தாக்குதல்களுக்கு உள்ளாவது அதிகரித்து வருவது குறித்து நான் அதிர்ச்சியடைந்துள்ளேன். மேலும், இத்தகைய குற்றச் செயல்கள் விரிவாக விசாரணை செய்யப்பட்டு பொறுப்பானவர்கள் சட்டத்திற்கு முன் நிறுத்தப்படாதமை எனக்கு பெரும் ஏமாற்றத்தை தந்துள்ளது.

உலக பத்திரிகை சுதந்திர தினமும் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் 60ஆவது ஆண்டும் இந்த வருடம் கொண்டாடப்படும் இவ்வேளையில் செய்தியாளர்கள் மீதான தாக்குதல்களை நடத்துவோரை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு சகலவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு சகல சமுதாயங்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன். தாராளமான, பாகுபாடற்ற தகவல்களை எங்களுக்குத் தருவதற்காக மிக சிரமமானதும் அபாயகரமானதுமான சூழ்நிலையில் பணியாற்றுவோருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தப் பகுதியிலும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும் பாடுபடுமாறு நான் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்- என்றுள்ளது. (50)

## மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 03

மாவட்ட செயலகத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் அறிவித்துள்ளார்.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சமூகசேவைகள், சமூக நலந்துறை அமைச்சரும் வடமாகாண விசேட செயலணி குழு தலைவருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் டிக்ஸன் சரத்சந்திரடவா, யாழ். தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் கலந்து கொள்ள இருந்தனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி 2009ஆம் ஆண்டுக்கான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற ஏற்பாடாகி இருந்தது.

பின்னர் அசாதாரண சூழ்நிலை காரணமாக அது பிற்போடப்பட்டது.

இதேபோல 2008 செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த கூட்டமும் பிற்போடப்பட்டது.

இதனால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தை 2 வருடங்களுக்குப் பின்னர் நாளை மறுதினம் நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதுவும் இப்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது (4-95)

## தமிழக அரசின் நிவாரணப் பொருள்கள் செஞ்சிலுவைக் குழுவிடம் கையளிப்பு

கொழும்பு, மே 3

இலங்கையின் வடக்கே இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் கடும் மோதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென தமிழக அரசு சுமார் 900 மெற்றிக் தொன்கள் அளவிலான நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளது.

சுமார் 40 ஆயிரம் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கக்கூடிய வகையில் தனித்தனிப் பொதிகளாக கட்டப்பட்டுள்ள இதில் அரிசி,பருப்பு,சீனி, சமையல் பாத்திரங்கள், உடைகள் ஆகியவை உட்பட குடும்பம் ஒன்றுக்கு இரண்டு வாரகாலம் தேவையான பொருள்கள் இருப்பதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தப் பொருள்களை கொழும்பிலுள்ள இந்தியத் தூதர் அலோக் பிரசாத் முறைப்படி செஞ்சிலுவைச் சர்வதேச குழுப் பிரதிநிதிகளிடம் அளித்துள்ளார்.

வன்னியில் மோதல்கள் ஆரம்பித்த பிறகு தமிழக அரசு அனுப்பும் இரண்டாவது தொகுதி உதவிப் பொருள்கள் இவை என்பது குறிப்பிடத்தக்கது. (50)

## பன்றிக்காய்ச்சல் பரவுவதைத் தடுக்க முன்னெச்சரிக்கையாக விசேட ஏற்பாடு

கொழும்பு மே3

இலங்கையில் பன்றிக்காய்ச்சல் பரவுவதைத் தடுப்பதற்கு முன்னோடி நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு எடுத்துள்ளது.

தென்னாசியாவில் தீவிரமாகப் பரவி வரும் பன்றிக்காய்ச்சல் இலங்கையில் தொற்றும் அபாய நிலையைத்தடுக்கும் நோக்கில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விமான நிலையம், துறைமுகம் ஆகிய பகுதிகள் ஊடாக இந்த நோய் தொற்றக் கூடும் என்பதால் அந்த இடங்களில் நவீன கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. உள்வரும் பொருள்கள் மற்றும் ஆள்களை சோதனை செய்ய இக் கருவிகள் பயன்படுத்தப்படும் என சுகாதார அமைச்சுத் தெரிவித்தது.

அத்துடன் இந்த நோயால் பீடிக்கப்பட்டதாக இனங்காணப்படுபவர்களை தங்கவைக்க பிரபல வைத்திய சாலைகளில் 20 படுக்கைகள் கொண்ட விசேட விடுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. (1)

# வன்னியிலிருந்து தாமாக யாழ்.வருவோரை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்க தீர்மானம்

## நேற்றைய உயர்மட்ட மாநாட்டில் முடிவு

யாழ்ப்பாணம்,மே 3

போர்ப் பிரதேசத்தில் இருந்து யாழ். குடாநாட்டுக்குள் தாமாக வந்தவர்களை நீதிமன்றப் பாதுகாப்பில் வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று மு.ப. 9 மணியளவில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மென்டக்க சமரசிங்க, யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா, யாழ்.மாவட்டநீதிபதி ஆர்.வசந்தசேனன், யாழ்.நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

யுத்தம் நடைபெறும் பிரதேசங்களிலிருந்து யாழ்.குடாநாட்டுக்குள் தாமாக வந்துள்ளவர்களின் நலன்களைக் கவனிப்பது தொடர்பாக இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டது.

விடுவிக்கப்படாத பிரதேசங்களில் இருந்து வந்து இராணுவத்தினரிடம் சரணடைய விரும்பாதவர்களை நீதிமன்றத்திடம் சரணடையுமாறு கோருவதென இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு சரணடைபவர்களை நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைப்பதற்கும் முடிவு செய்யப்பட்டது.

எனவே யாழ்.குடாநாட்டுக்குள் தாமாக வந்தவர்கள் இதனைக் கவனத்தில் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- இவ்வாறு சரணடைந்த நான்குபேர் நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ஆர். ரி. விக்னராஜா தெரிவித்தார்.

2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதிமன்றில் சரணடைந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50)

### நாளை

| | |
|---|---|
| சித்திரை 21 | 04.05.2009 திங்கட்கிழமை |
| திதி: | தசமி பி.ப. 12.36 வரை |
| நட்சத்திரம்: | பூரம் பி.இ. 12.13 வரை |
| சுபநேரம்: | 11.56 - 01.26 |
| ராகுகாலம்: | 07.26 - 08.56 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிகளை வழங்க உலக நாடுகள் முன்வருகை

யுத்த சூழ்நிலையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க நோர்வே, இந்தியா, சுவிஸ், ஜப்பான் ஆகிய நாடுகள் முன்வந்துள்ளன.

நோர்வே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐ.நா அமைப்புக்கள், உள்நாட்டு மற்றும் சர்வதேச தன்னார்வ தொண்டர் அமைப்புக்கள் ஊடாக 10 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக நோர்வே உயர் ஸ்தானிகராலயப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். தேவை ஏற்படின் மேலும் உதவிகள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். நோயாளர்களுக்குத் திருப்தியான சேவையை வழங்க குறைந்தது 1000 படுக்கைகள் தேவைப்படுவதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிக்கின்றார்.

ஏற்கனவே திருகோணமலை புல்மோட்டையில் தள வைத்தியசாலை ஒன்றையும், மருத்துவர்களையும் மருத்துவ உதவிகளையும் வழங்கி உதவியுள்ள இந்தியா, மேலும் ஒரு பில்லியன் ருபா பெறுமதியான உதவிகளை வழங்க முன் வந்துள்ளது. இதன் பிரகாரம் 40 ஆயிரம் குடும்பங்களுக்குரிய உதவிப் பொதிகள் ஏற்கனவே இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்பட்டுள்ளதோடு மேலும் 50 ஆயிரம் பொதிகள் விரைவில் வந்தடையவிருப்பதாக இந்திய உயர் ஸ்தானிகராலய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்துள்ள மக்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஜப்பான் 4 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியை வழங்க முன் வந்துள்ளது. அதனை அகதிகளுக்கான ஐ.நா நிறுவனம், செஞ்சிலுவை சர்வதேசக் குழு, யுனிசெப், புலம் பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பு ஆகியவற்றின் ஊடாகவே வழங்கத்தீர்மானித்துள்ளது.

(அ-சி)

## ஆஸ்பத்திரி மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றொரு தகவல் தெரிவித்தது.

நேற்றைய தாக்குதலின் போது பெண் தொண்டர் வைத்தியர் ஒருவரும் வைத்தியப் பணியாளர்கள் மூவரும் கொல்லப்பட்டதாகவும் இன்னொரு தகவல் தெரிவித்தது.

தாக்குதலுக்கு உள்ளான ஆஸ்பத்திரி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இயங்கிய போதிலும் அரசாங்க வைத்தியர்களே அங்கு பணிபுரிந்து வந்தனர்.

நேற்றுக் காலை 8 மணிக்கும் பின்னர் 9.30 மணிக்கும் ஆஸ்பத்திரியை குறிவைத்து இராணுவத்தினர் ஷெல் வீச்சு நடத்தியதாக இணையத்தள செய்திகள் தெரிவித்தன. (அ)

## மட்டக்களப்பில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து நேற்று மீட்கப்பட்ட சடலம் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப மாணவியும் மற்றுமிரு மாணவர்களும் காணாமற்போன சம்பவத்தை அடுத்து பாடசாலைப் பகிஷ்கரிப்புப் போராட்டம் நகரின் சகல பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பிரஸ்தாப மாணவியின் தந்தையான உடற்கல்வி ஆசிரியர் சதீஸ்குமார் 2007ஆம் ஆண்டு ஆயுதக்குழு ஒன்றினால் கடத்தப்பட்டு பின்னர் காணாமற்போயிருந்தார்.

## தமிழர் வாழ்வுக்கென....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் இன அழிப்பில் ஈடுபடும் ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் நிவாரணப் பணிகளுக்காக 480 மில்லியன் நிதியை கையளிக்க வேண்டாம் எனவும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் ஜப்பான் தூதுவர் யசூசி அகாஷியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொழும்புக்கு வந்துள்ள ஜப்பான் தூதுவர் யசூசி அகாஷியை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அரியநேந்திரன், கனகசபை மற்றும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் ஆகியோர் நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது யசூசி அகாஷிக்கு எடுத்துக் கூறிய விடயங்கள் தொடர்பாக சுரேஷ் பிரேமச்சந்திரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்:

வன்னிப்பெருநிலப்பிரப்பில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை குறைந்தது ஐந்து வருடங்களுக்கு நிரந்தரமாகவே கொட்டில்களில் குடியமர்த்துவதற்கு அரசாங்கம் திட்டமிடுகின்றது.

இதற்கு துணைபோகும் வகையில் நிதிகளை கையளிக்கவேண்டாம். இந்தமக்கள் வன்னியில் சொந்த நிலபுலங்களுடன் வாழ்ந்தவர்கள். தொழில் புரிந்தவர்கள். இந்தமக்களை அவர்களின் சொந்தக்கிராமங்களில் மீளக்குடியமர்த்தினாலே போதும். யுத்தத்தினால் அவர்களின் வீடுகள், தொழிற்தலங்கள் அழிந்துள்ளன. சேதமடைந்துள்ளன. அவற்றைத் திருத்துவதற்கு நிதிவழங்கி நஷ்டஈட்டையும் வழங்குங்கள்.

அதனைவிடுத்து 150 மைல்களுக்கு அப்பால் அந்த மக்களை கொண்டு வந்து காடுகளை அழித்து நிரந்தரமாக கொட்டில்களை அமைத்து அங்கு குடியிருத்தி அடிமைகளாக வைத்திருக்க முற்படும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாம்.

தமிழர்களின் தாயகப் பிரதேசங்களை நிலரீதியாக துண்டிப்பதே அரசாங்கத்தின் பிரதான நோக்கம். வன்னிப்பிரதேசத்தை இராணுவ பிரதேசமாக மாற்றுவதற்கு இந்த மக்களை வவுனியாவில் உள்ள காடுகளிலும் பற்றைகளிலும் நிரந்தரமாக குடியமர்த்துவதற்கு அரசாங்கம் திட்டமிடுகின்றது.

நிவாரணப் பணிக்காக அரசாங்கத்திடம் கையளிக்கவுள்ள 480 மில்லியன் நிதிகூட மக்களின் நிவாரணப்பணிக்காக போய்ச் சேராது. மாறாக யுத்தத்திற்கே செலவிடப்படும். எனவே சிறிலங்கா அரசாங்கத்தின் பொய்யான பிரசாரங்களை நம்பி தமிழின அழிப்பிற்கு ஜப்பான் துணைபோகக்கூடாது- என்று கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

இவற்றை செவிமடுத்தபின்னர் பதிலளித்த யசூசி அகாஷி சிறிலங்கா அரசாங்கம் மக்களால் தெரிவுசெய்யப்பட்டது. படிப்படியாக மக்களை மீளக்குடியமர்த்துவோம் என அரசாங்கம் தன்னிடம் உத்தரவாதம் அளித்ததாக தெரிவித்தார்.(அ-1)

# தமிழகத்தில் படையினரின் வாகனங்கள் வழிமறிக்கப்பட்டு ஆயுதங்கள் சேதமாக்கப்பட்டன!

## இலங்கைக்கு எடுத்துச் செல்லப்படுவதாகக் கருதித் தாக்குதல்

சென்னை, மே 3

கோயம்புத்தூருக்கு அருகே நீலம்பூர் என்ற இடத்தில் நேற்றுப் பிற்பகல் 3.40 மணியளவில் படையினரின் வாகன அணி ஒன்று பொதுமக்களால் வழி மறிக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலத்தில் இருந்து கொச்சி துறைமுகமூடாக இலங்கைக்கு ஆயுதங்கள் அனுப்பப்படுவதாக வெளிவந்த தகவலை அடுத்தே அந்த வாகன அணி தாக்கப்பட்டுள்ளது.

5லொறிகள் கொண்ட அந்தவாகனஅணியை வழிமறித்த பெரியார் திராவிடர் கழகம், ம.தி.மு.க ஆகிய கட்சிகளின் தொண்டர்களும் பொதுமக்களும் அந்த லொறிகளின் சாரதிகள், உதவியாளர்களை தாக்கினர். அதனால் அவர்கள் வாகனங்களை விட்டு ஓடினர்.

லொறிகளுக்குள் ஏறி அவற்றை சோதனையிட்ட பொதுமக்கள் அவற்றில் இருந்த ஆயுதங்களை நீர் நிலைகளுக்குள் வீசினர். வாகனங்களை சேதப்படுத்தினர். அவற்றில் இருந்த படையினரின் கூடாரத் துணிகள், படுக்கை விரிப்புக்களை தீயிட்டுக் கொழுத்தினர்.

இச் சம்பவத்தை கேள்வியுற்று பொலிஸார் அங்கு விரைந்து வந்து அங்கு நின்றவர்களை தாக்கினர். இரு தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர்கள் உட்படச் சிலர் காயமடைந்தனர். பொலிஸார் நால்வரைக் கைது செய்துள்ளனர். (அ-1)

## விடுதலைப்புலிகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சோமதிலக திஸநாயக்க இதனைத் தெரிவித்தார். பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக அவர் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்தவை வருமாறு:-

வடக்குக் - கிழக்குக் கடற்பகுதியில் எவரும் நுழையவோ, வெளிச் செல்லவோ முடியாத அளவுக்கு பாதுகாப்பு இறுக்கப்பட்டுள்ளது.

கடற்படையின் முழுப் பலமும் பாவிக்கப்பட்டுஇந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

கடற்படையின் நவீன படகுகள் கடல் ரோந்தில் 24மணி நேரமும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பாதுகாப்பு வலயத்தில் இருந்து ஆறு கிலோமீற்றர் தூரத்தைக் கண்காணிப்பதற்காக நவீன வசதிகள் கொண்ட கடற்படையின் பராவகைக் கப்பல்கள் மூன்றும் நங்கூரமிட்டுள்ளன - என்றார் அவர்.

## குண்டுத் தாக்குதல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கும் வரை இப்புகைப்படங்கள் விஞ்ஞான ரீதியாக செல்லுபடியாகத் தக்கதல்ல என்று கூறியுள்ளது.

எனினும் - இப்படங்கள் குறித்த நேரங்களை தெளிவாக வெளிப்படுத்துகிறது. தேவையான எவரும் அதை ஒப்பீடு செய்து கொள்ளலாம் என வரைபட பிரிவுத் தலைவர் ஈனொர் ஜோர்ஜ், அல் ஜஸீரா தொலைக்காட்சிக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாதுகாப்பு வலயத்தில் நடத்தப்படும் தாக்குதல்கள் தொடர்பாக செய்மதி ஊடாக எடுக்கப்பட்ட புகைப்படங்களை வெளியிடப்பட்டமை தொடர்பாக இலங்கையிலுள்ள ஐ.நா. இணைப்பதிகாரி நீல் புஹுனேயிடம் இலங்கை அரசாங்கம் விளக்கம் கோரியுள்ளது தெரிந்ததே. (அ-1)

## பிரிட்டனில் இருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை விவகாரங்களை கையாள்வதற்காக பிரதமர் கோடன் பிறவுனால் நியமிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரும், ஸ்கொச் தொழிற்கட்சி எம்.பியுமான டெஸ் பிறவுனியும் இக் குழுவில் இடம் பெற்றுள்ளார்.

இக் குழுவில், கன்சர் வேட்டிவ் கட்சி எம்.பியான ஜோன் பிர்கொவ், லிபரல் கட்சி எம்.பியான மெல்கம் புருஸ், தொழிற்கட்சி எம்.பியான எட்வர்ட் மெக்ராடி, தொழிற் கட்சியின் முஸ்லிம் எம்.பியான மொஹமட் சர்வார் ஆகியோரும் அங்கம் வகிப்பர்.


**விற்பனைக்கு**



Bangkok இலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அழகான, அதிநவீன, துருப்பிடிக்காத, வீட்டினுள் வைத்து வளர்க்கக் கூடிய சிறிய கூடுகள் லவ்பேட்சுடன் நெல்லியடியில் கொழும்பு விலைக்கே விற்பனைக்கு உண்டு. முன் பதிவு செய்வோருக்கு முன்னுரிமை. Najan 077 2208475

**கணக்கீடு**
திரு. வின்சன் (B.B.A Spl)
A/L 2009 கூலிக்கிரயம்
A/L 2010 பங்குடமை
A/L 2011
ஆரம்பம் 04/05/09 (Mon-4.p.m)
ஐடியல்- மானிப்பாய் (Hospital Lane)

**கொழும்பு தமிழ்ச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட மாபெரும் கருத்தரங்கு**
தரம் 5 புலமைப் பரிசில் வழிகாட்டி சொற்பபிரதிகளே விற்பனையில்
பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்.

**BITSMANS**
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
பிரிவு 2 — O/L DAY CLASS
(பழைய, புதிய பாடத்திட்டம்)
ஆரம்பம்: 04.05.2009 திங்கள் 8.00 a.m.

**SUBRA 14**
நீநாள்கோவில், வட்டுக்கோட்டை இருவிடங்களிலும்
O/L day
புதிய பிரிவு
04.05.2009 திங்கள் காலை 7.00 மணி
தரமான கல்வி, தகுதியான ஆசிரியர் மூலம்
2009 A/L கலை, வர்த்தக, கணித விஞ்ஞான புதிய பிரிவு 05.05.2009 மாலை 4.00

**திருமணசேவை**
48 வருட சேவையில் இரண்டாம் தலைமுறை கண்ட "சர்வதேச புலவர் திருமண சேவை" என்பது உலகப் புகழ்பெற்ற திருமணம் நிறைவேற்று நிறுவனமாகும். நீங்கள் தொடர்பு கொண்டு உங்கள் பிள்ளைகளின் திருமணங்களை நிறைவேற்ற காலை முதல் மாலை வரை தினசரி சேவையாற்றுகின்றது. நேரில் வாருங்கள். திருமணங்களை நிறைவேற்றுங்கள். நீங்கள் தேடுகின்ற மணமக்களின் சாதகங்கள் எங்களிடம் இருக்கின்றது.
"மதுரகனம்" 238, அரசடி வீதி, நந்தர்பபர், யாழ்ப்பாணம்.
T.P: 0212227147-0773352215
15A, 32வது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-6 T.P: 0112500380-0718285673
இயக்குநர்: - புலவர் செ.து.தெட்சணாமூர்த்தி

**21 ஆவது வருட கல்விச் சேவையில்**
O/L Day Class வகுப்புக்கு தனித்துவமான ஒரே நிறுவனம்
O/L DAY CLASS
இறுதிப் பிரிவு III ஆரம்பம்
04.05.2009 திங்கள் காலை 8 மணி
* கணித வகுப்பு மாதத்தில் 48 மணித்தியாலம்.
* எமது Super Grade ஆசிரியர் குழு.
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**ஐடியல் அக்கடமி**
சிரணிச்சந்தி, சண்டிலிப்பாய், | நீராவியடி யாழ்.நகர், | அந்தோனியார் கோயில் அருகாமை, மானிப்பாய்.
மூன்று நிறுவனங்களிலும்:
நாளை — பிரிவு - 2 — O/L Day Class
மாணவச் செல்வங்களே அமைதியான சூழலில் நம்பிக்கையான பெறுபேற்றுக்கு எம்மோடு இணையுங்கள் வெற்றி நிச்சயம் ...
04.05.2009 (திங்கள்) 8 AM

**அட்சயா** (அரவிந் ஸ்டுடியோவிற்கு அருகில்)
★ பேசியல் ★ ஐசிங்
★ மேக்கப் ★ சாறி வேக் 05
★ கெயர்ஸ்டைல் ★ பிளவுஸ் கட்டிங் 06
★ தலைமுடி அயன்பண்ணுதல், சுருட்டுதல்
மேற்படி பயிற்சி நெறிகள் ஆரம்பம், அனைத்து பயிற்சிகளுக்கு 50% கட்டணக் கழிவு.
றிச் கேக் 25/=
ஐசிங் றிச்கேக் 35/=
அட்சயா, 461, நாவலர் வீதி, அத்தியடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

உலகநாடு → கொழும்பு → யாழ்ப்பாணத்திற்கான
துரித தபால்கள் பொதிகள் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
திருமுருகன் கொம் நெற்
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள். CDக்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
WESTERN UNION
Money Master
New Branch
TEN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06 - T.P: 0112364525

**LAVA HOSPITAL**
75, Temple Road, Jaffna. T.P. 222 4333
[ICRC சந்தி அருகாமையில்]
* நவீன ஸ்கான் (Scan), ECG மற்றும் இரத்த, சல பரிசோதனைகள்
* டிஜிட்டல் தொழில் நுட்பத்தினாலான ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படும்.
அடிப்படை உடற் பரிசோதனைகள்
* உடல் பருமனைக் குறைப்பதற்கான சிகிச்சைகள்.
* பற்சிகிச்சை கிளினிக் - தினமும் பி.ப. 4 மணி.
Branches
151, Kannathiddy Road. T.P.: 021 222 7251
71, Sivapiragasam Road, Vannarponnai, Jaffna.
web: www.lavaonline.net E.mail: lavasss@yahoo.com


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org